# தமிழரசு

## நேருவுக்குப் பிடித்த பாடல் !

"கடமை பெரிது; உழைப்புத்தான் உண்மையான செல்வத்தைப் படைக்கும்" என்று கூறி இறுதிவரை கடமையாற்றிய நேரு, தமக்குப் பிடித்தமான பாடல் ஒன்றைத் தம் கைப்படவே எழுதி வைத்திருந்தார். அமெரிக்கக் கவிஞர் ராபர்ட் ஃப்ராஸ்ட் எழுதிய அந்த ஆங்கிலக் கவிதை இதோ!

*The Woods are lovely, dark and deep*
*But I have Promises to Keep,*
*And miles to go before I Sleep*
*And miles to go before I Sleep.*

மேற்குறித்த பாடலின் தமிழாக்கம் :-

அடர்ந்த காடுகள்-அழகிய காடுகள்
அவை என்னைக் கவர்கின்றன !
ஆனால், கடமைகள்-எனது கடமைகள்
அவை என்னை அழைக்கின்றன !
போகிறேன் நான் போகிறேன் !-இனிப்
போகவேண்டியது நெடுந்தூரம் !-இனிப்
போகவேண்டியது நெடுந்தூரம்.

மலர் 6 இதழ் 10
16-11-1975



# நிதி நெருக்கடியிலும் நாம் அளிக்கும் சலுகைகள் ஏராளம்!



துணை மானியக் கோரிக்கையில் சுமார் நாற்பத்தைந்து கோடி ரூபாய்க்கு இந்த மன்றத்தின் ஒப்புதல் கேட்டு—அதிலே பத்து கோடி ரூபாய் எதிர்பாராத செலவுகளுக்காக என்ற வகையில் ஒதுக்கப்படுவது போக, 35.55 கோடி ரூபாய்க்கான விவரங்கள் இந்த மதிப்பீட்டு அறிக்கையில் விரிவாக எடுத்துவைக்கப் பட்டிருக்கின்றன.

இந்தத் தொகை மிக முக்கியமான பணிகளுக்காக—வறட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட ஏழை எளிய விவசாயிகளுக்காக — சமுதாய நலத் திட்டங்களுக்காக —தாழ்த்தப்பட்டவர்களுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகிற வீட்டுவசதி பலஆண்டுக்காலமாக நினைத்துக் கூடப்பார்க்கப்படாமல் இருந்து இரண்டாண்டுகளுக்கு முன்னால் தான் இதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு, அரிசனங்களுக்காகத் தனியாகவீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டு அதற்காக எல்லாம் தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

"மத்திய அரசு தருகின்ற வறட்சி நிவாரணத் தொகையை திட்டத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளக் கூடாது ; அப்படித்திட்டத் தொகையில் கழித்துக் கொண்டால், வறட்சிப் பணி என்கிற பெயரால் திட்டங்கள் நிறைவேற முடியாது ; அப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலை அரசுக்கு ஏற்பட்டு விடும். ஆகவே திட்டத் தொகையில் கழித்துக் கொள்ளாமல் கொடுத்தால் நாங்கள் வாங்கிக் கொள்கிறோம்" என்று சொன்னேன். அதைத்தான் இன்றளவும் வலியுறுத்தி வருகின்றோம். அண்மையில் டெல்லியில் பிரதமரைச் சந்தித்த போதும், சென்னைக்கு அவர்கள் வந்திருந்த போதும் இதைத்தான்சொன்னேன். ஆனால் அவர்கள் அப்படி எதுவும் வறட்சி நிவாரணத்திற்காகத் தர இயலாது என்று கூறிவிட்டார்கள்.

கொடுத்தத் தொகை ஏழு கோடி ரூபாய். அதிலும் எழுபது சதவிகிதம் கடன்; முப்பது சதவிகிதம்தான் மானியம். நமக்கு வறட்சிப் பணிகளுக்காக ஆகியிருக்கிற செலவு ரூ. 58.8 கோடி ரூபாய்.

1974—75-ல் திட்டத்திற்கு அப்பாற்பட்ட சிறப்புத் செலவாக 8.8 கோடி ரூபாய்; திட்டச் செலவாக 10 கோடி. ஆக 18.8 கோடி ரூபாய் 1974—75-இல் செலவழிக்கப்பட்டது.

1975—76-இல் பணிகளுக்காக 15.8 கோடி; தக்காவி கடன்களுக்காக 3 கோடி; 'டீசல் சப்சிடி' டீசல் இயந்திரங்களுக்கு மானிய உதவி 1.2 கோடி. ஆக 28.8 கோடி ரூபாய். 1974 முதல் 1975—76 வரையில் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக ஆகியிருக்கிறது. திட்டச் செலவாக 1975—76-இல் 20 கோடி; ஆக மொத்தம் 30 கோடி. இரண்டையும் கூட்டினால் 58.8 கோடி ரூபாய்.

இந்த 58.8 கோடி ரூபாய் அன்னியில்தான் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு — வறட்சியின் காரணமாக—அவர்கள் சில வரிகளை வசூலிக்க வேண்டாமென்று நாம் கூறியதற்கேற்ப அவர்களுடைய இழப்பை ஈடுகட்டுவதற்கு, இவைகளுக்கு மேலாக ஆறுகோடி ரூபாய்; அவைகளுக்கு வழங்கயிருப்பதை நாம் மறந்து விடக் கூடாது.

நிலவரி வஜா, கடன் ஒத்திவைப்பு ஆகிய வகைகளில் பத்துக்கீ கோடி ரூபாய் மேலும் இந்த அரசுக்குச்செலவாகியிருக்கிறது.

நகரங்களில் குடிநீர் வசதித் திட்டங்களை ஏற்பாடு செய்து தர சுமார் மூன்று கோடி ரூபாய் செலவாகி இருக்கிறது.

நீங்கள் முப்பது கோடி ரூபாய் திட்டச்செலவுகளைத்தானே செய்தீர்கள்? என்ற வாதம் இங்கே எழுப்பப்பட்டது. திட்டச்செலவு என்றாலும்கூட திட்டமிடப்பட்ட இடங்களிலே இருந்து திசை திருப்பப்பட்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அந்தச் செலவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இது ஒரு கட்டம்; அடுத்த கட்டம், திட்டச் செலவு என்றால் அதற்கென்று ஒரு கால வரையறை வகுத்து, இப்போது தொடங்கி, இப்போது முடிய வேண்டும் என்று இருக்கும். அப்படிப்பட்ட காலவரையறை வைக்காமல், இந்த வறட்சிக் காலத்திலேயே இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணமெல்லாம் வறட்சியால்பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செலவிடப்பட வேண்டும் , என்று செலவு செய்திருக்கிறோம்.

இந்த முறையில்தான் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து 1974—75-ல் பத்து கோடி ரூபாயும், 1975—76-இல் இருபது கோடி ரூபாயும் நாம் வறட்சிப் பணிகளுக்காகச் செலவிட்டிருக்கிறோம். இந்தச் செலவினங்களையெல்லாம் நாம் சுட்டிக் காட்டித்தான் — நம்முடைய நிதி நிலைமையை உணர்ந்து, மத்திய அரசு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டோம்.

வறட்சிப் பணிகளுக்கு மாத்திரமல்ல; மது விலக்கின் காரணமாக இந்தியாவிலேயே பெரும் இழப்பிற்கு ஆளாகியிருக்கிற மாநிலங்கள் இரண்டு. ஒன்று குஜராத்; இன்னொன்று தமிழ்நாடு. இந்த மாநிலங்களுக்குப் பிரதமர் அண்மையில் அறிவித்த பன்னிரண்டு அம்சத்தோடு இன்னொரு அம்சத்தையும் சேர்த்து மதுவிலக்கை நடைமுறைப் படுத்துகின்ற மாநில அரசுகளுக்கு நஷ்டஈட்டுத் தொகை தரப்படும் என்று வகுப்

பார்களேயானால் மற்ற மாநிலங்களையும் அது ஊக்கப்படுத்துவதாக அமையும் என்று நான் கேட்டுக் கொண்டேன்.

அதுபற்றி ஒரு அமைச்சரவைக் கூட்டம் டெல்லியில் நடைபெற இருக்கிறது என்பதை அறிந்து 'டெலக்ஸ்' மூலமாகப் பிரதமரை நான் கேட்டுக் கொண்டேன் ; தொடர்ந்து கடிதமும் அனுப்பினோம்; ஆனால் வந்திருக்கிற செய்தி, மதுவிலக்கிற்காக நஷ்டஈடு எதுவும் அதை அமல்படுத்துகின்ற மாநிலங்களுக்குத் தருவதற்கில்லை என்ற அளவில்தான் வந்திருக்கிறது. அது மிக மிக, வருந்தத் தக்க செய்தியாகும்.

ஏறத்தாழ 58 அல்லது 59 கோடி ரூபாய் மதுவிலக்கின் காரணமாக நாம் இழப்பிற்கு ஆளாகியிருக்கிறோம். குதிரைப் பந்தயத்தை ஒழித்ததிலும், பரிசுச் சீட்டை நிறுத்தியதின் மூலமாகவும் 5 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பிற்கு ஆளாகியிருக்கிறோம்.

ஆகவேதான் இந்த நல்ல காரியங்களை — காந்தியடிகளுடைய கொள்கைகளைப்பின்பற்றி நடத்துகின்ற இந்த அரசுக்கு உற்சாகம் அளிக்கின்ற அளவில் மத்திய அரசு நிதி உதவி தரவேண்டும் என்று நாம் கேட்டோம்.

ஜேம்ஸ் அவர்கள் நேசமணி பாலம் இன்னும் கட்டி முடியவில்லை என்ற குறைபாட்டை இங்கே சொன்னார். அந்தப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்ற போது, யாருடைய வேண்டுகோளும் இல்லாமல் இந்தப் பாலத்திற்கு நேசமணி அவர்களின் பெயர் வைக்கப்படும் என்று நானே தான் சொன்னேன். அதற்கு நன்றியெல்லாம் கூடத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அதனுடைய வேலை இன்னும் முடியாமல் இருப்பதற்குக் காரணம், நாம் தந்த மதிப்பீட்டின் படி டெண்டர் யாரும் கோரவில்லை; அதனால்தான் தாமதப்பட்டது; ஆகவே மறுபடியும் டெண்டர் விட வேண்டிய நிலைமை ஏற்பட்டு, இப்போது வேலைகள் தொடங்குகின்ற தருவாயில் இருக்கின்றன என்ற தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜேம்ஸ் அவர்கள் இன்னொரு குறைபாட்டையும் சொன்னார். கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லைப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பலருக்கு மானியம் தரப்படவில்லை என்று சொன்னார். எல்லைப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக, ஓய்வூதியம் பெறுபவர்களுடைய எண்ணிக்கை 51 பேராகும்; அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ள மனுக்களின் எண்ணிக்கை 56; அந்தப் பரிசீலனை முடிந்ததும் அவர்களுக்கும் வழங்கப்படும்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காகக் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 28 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இரண்டு பேர்களுடைய மனுக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. தியாகிகள் ஓய்வூதியம் 37 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இதில் ஆறு பேர் இறந்து விட்டார்கள் ; இப்போது 31 பேர் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் ; மேலும் இறந்த இரண்டு தியாகிகளின் மனைவிகளுக்குத் தியாகிகள் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டில் இந்திஎதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு மொத்தம்இதுவரை 1,376 பேர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டிருக்கிறது.

# முதல்வர் கலைஞர்

அரவாக்குறிச்சி சட்ட மன்ற உறுப்பினர் ஜபார் அவர்கள் ஏதோ அவருடைய தொகுதி கேட்பாரற்று போய்விட்டது என்றெல்லாம் சொன்னார். சொல்லிக் கொண்டே வந்தவர், நொய்யல் திட்டத்தைப் பற்றி அவரே சொல்லி, அதற்கு இந்த அரசு ஏற்கனவே ஒப்புதல் வழங்கியிருப்பதையும் குறிப்பிட்டார். அவரே பேசும் போது, இதிலே இருக்கின்ற இடைஞ்சல்கள் என்னென்ன என்றும் சொன்னார். கர்நாடக மாநிலத்தோடு காவேரி பற்றிய பிரச்சினை இன்னும் தீராமல் இருக்கின்ற காரணத்தினால் உள்ள இடர்ப்பாடுகளை அவர் விளக்கினார். அந்த இடர்ப்பாடுகள் நீங்கிய பிறகு நிச்சயமாக நொய்யல் திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதை நான் அவருக்கு உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போனஸ் பற்றியும், அதனால் இன்று இடர்ப்பாடுகளுக்கு ஆளாகியிருக்கிற தொழிலாளர்கள் பற்றியும் இங்கே சுட்டிக் காட்டப்பட்டது. நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் தொழிலாளர்கள் நன்மையில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதும், சில ஆலைகள் மூடப்பட்டோ அல்லது வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டோ தொழிலாளர்கள் கஷ்டப்படும் நேரத்தில் இந்தியாவிலேயே இந்த அரசு ஒன்றுதான் பாதிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு நிவாரண நிதியை இலட்சக்கணக்கில் வழங்கிய அரசு ஆகும்.

அண்ணா காலத்தில் கோவையில் தொழிலாளர்களுக்கு ஒரு இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை அவர்களுக்கு நிவாரணமாக வழங்கினார். அண்ணாவிற்குப் பிறகு இந்த அரசு கிட்டத்தட்ட ஐந்து இலட்ச ரூபாய் கோவையில் உள்ள ஆலைத் தொழிலாளர்களுக்கு நிவாரணத்திற்காக வேலை நிறுத்தத்தின் போதும், கதவடைப்பின்போதும் வழங்கியிருக்கிறது.

அண்மையில் கூட நான் கோவைக்குச் சென்றபோது 'மதுநூற்பாலை'' மூடப்படுகின்ற நிலையில் இருப்பதை எடுத்துச் சொன்னார்கள். அங்கேயிருக்கிற 400 தொழிலாளர்கள் தீபாவளி நேரத்தில் கூட தங்களுடைய வீடுகளில் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை என்று சொன்னார்கள். அதையெல்லாம் கேட்டுக் கொண்டு, நான் சென்னைக்கு வந்ததும் எண்பதாயிரம் ரூபாய் நபர் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் தீபாவளிநேரத்தில் இந்த அரசின் சார்பில் கடனாக வழங்க உத்தரவிடப்பட்டு, அந்த எண்பதாயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

**ஏ. சுப்பிரமணியம் :** அந்த ரூபாய் வழங்கியதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இரண்டரை இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நூலை அரசாங்கத்தின் பேரில் ரூமில் போட்டு அடமானம் செய்து கொண்ட பிறகுதான் அந்தப் பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த நூலை விற்று, அந்தப் பணத்தை அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில்தான் தரப்பட்டிருக்கிறது.

**முதலமைச்சர் :** கடனாகக் கொடுக்கும்போது ஒரு முதலாளியிடம் இந்தப் பிடி கூட வைத்துக் கொள்ளாமல் எப்படித்தான் கொடுப்பது, அந்த முதலாளி தொழிலாளர்களுக்கு இதைத் தர வேண்டும்; அப்படியிருக்கும் போது, ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்பார்கள் ; ஆகவேதான் அளந்து போடப்பட்டிருக்கிறது.

**ஜேம்ஸ்** : இந்த அரசைப் பொறுத்த வரையில் போனஸ் சம்பந்தமாகத் தொழிலாளர்களுக்கு எல்லாம் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் முதலாளிகள் இரண்டு கணக்குகளைக்காட்டி தொழிலாளர்களை ஏமாற்றுகிறார்கள். அதை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**முதலமைச்சர்** : இந்தப் போனஸ் பிரச்சினை அவசரச் சட்டத்தினால் நெருக்கடி நிலையால் நமக்குக் கிடைத்த ஒரு 'நல்ல பரிசு' என்று தங்கமணி சரியாகச் சொன்னார். இதில் ஜேம்ஸ் அவர்கள் சொல்கிற பிரச்சினை இருக்குமானால், அதை அரசு ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கை எடுக்கும்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு என்ன செய்தது என்ற கேள்வியை அடிக்கடி இங்கே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக சத்தியவாணி முத்து அம்மையார் இந்தக் கேள்வியை ஒவ்வொரு உரை நிகழ்த்துகின்ற நேரத்திலும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

1972-73-ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செய்யப்பட்ட மொத்தச் செலவு, 7.59 கோடி ரூபாய்; 1973—74-இல் 10.15 கோடி ரூபாய்; 1974—75-இல் 12.89 கோடி ரூபாய் ; 1975—76-இல் 18.88 கோடி ரூபாய் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்த அரசு செலவு செய்கிறது.

இந்தத் தொகையில் மத்திய அரசின் கடன் உதவி நமக்கு எவ்வளவு கிடைத்தது என்றால், 1972—73-இல் 39 இலட்சம் ; 1973—74-இல் 66 இலட்சம் ; 1974—75-இல் 52 இலட்சம் : 1975—76-இல் 50 இலட்சம் ரூபாய்.

ஏதோ தாழ்த்தப்பட்டவர்களை மறந்து விட்டு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத்தான் அள்ளி அள்ளிக்கொடுக்கிறது இந்த அரசு என்ற குற்றச்சாட்டிற்கு நான் சொல்ல விரும்புவது எல்லாம் —

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 1972—73-இல் 4.97 கோடி ரூபாய்; 1973—74-இல் 5.37 கோடி ரூபாய்; 1974—75-இல் 5.68 கோடி ரூபாய்; 1975—76-இல் 5.81 கோடி ரூபாய் என்ற வகையில்தான் நாம் உதவிகளைச் செய்து வருகிறோம்.

இந்தத் துணை மதிப்பீட்டின் ஆறாம் பக்கத்தில் நான் குறிப்பிட்டிருக்கிறேன் :

"தாழ்த்தப் பட்ட இந்துக்களுக்குத் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் எல்லாச் சலுகைகளையும் (எல்லாச் சலுகைகளையும் என்றால், ஏற்கனவே வழங்கப்பட்டு வருகின்ற சலுகைகளையும் சேர்த்து மிச்சமுள்ள எல்லாச் சலுகைகளையும்) கிறித்தவ மதத்திற்கு மாறியுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நீட்டிப்பது என அரசு முடிவு செய்துள்ளது. கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளுதல், அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு ஆகியவற்றைப் பொறுத்த வரையில் கிறித்தவ மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இணையாகக் கருதப்படுவர். அவர்களுடைய சந்ததியினர் அந்தச் சலுகைகளுக்கு அருகதை அற்றவர்கள் என்று இதுவரை இருந்துவந்த நிலைமையை மாற்றி அவர்களின் சந்ததிகளும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகக் கருதப்படுவர் என்றுமுடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தச் சலுகைக்காகத்தேவைப்படும் நிதி இது வரையில் அரிசன நல மானியத்தில் ஒதுக்கியுள்ள தொகைக்குக் கூடுதலாக மேலும் ஒதுக்கப்படும்.

இந்தக் கருத்தை நான் இந்த மன்றத்தில் தெரிவித்தேன். அதன்படி இந்தக் கருத்தின் அடிப்படையில் சொல்ல வேண்டுமேயானால், கல்வி நிலையங்களில் ஒதுக்கப்படும் சலுகைகளும், அரசுத் துறையில் வேலை வாய்ப்புத் தருவதும் ஒரு தலைமுறைக்கு மட்டுமே தரப்பட்டு இருந்தது—74-ஆம் ஆண்டு ஆணைப்படி, அதாவது இந்த இரண்டு ஆண்டுச் சலுகைகளும் கிறித்தவ மதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்களுக்கு அவர்களை பிற்படுத்தப்பட்டவர்களாக கருதி பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 31 சதவிகிதத்தில் சேர்த்து அளிக்கப்பட்டது.

ஆனால் 1975-ஆம் ஆண்டுஅரசு ஆணைப்படி இரண்டுசலுகைகளும் எல்லாத் தலைமுறைகளுக்கும் அவர்களுக்குப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உள்ள விகிதாச்சாரத்தில் தரப்படுகிறது.

1974-ஆம் ஆண்டு அரசு ஆணையில்

"As regards the other concessions. They are eligible irrespective of generations".

—என்று குறிப்பிட்டிருப்பது —

குடியிருப்புக்கு நிலம் தருதல், விவசாயத்திற்கு நிலம் கொடுத்தல், குடியிருப்புகளுக்குப் பாதை அமைத்தல், குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குதல் ஆகியவை மாத்திரம்தான் இருந்தன.

ஏனைய பொருளாதார சலுகைகள் தரமுடியவில்லை. காரணம் அந்தச் சலுகைகள் மத்திய அரசு சட்டத்தின் கீழ்ச் (Centrally Assisted Scheme) செயல்பட்டு வந்தது. ஆனால், 1975-ஆம் ஆண்டு அரசு ஆணையின்படி அந்தச் சலுகைகளையும் கிறித்துவ மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தருவதாக முடிவுசெய்யப்பட்டுள்ளது. அதற்குள்ள நிதியை மாநில அரசு அளிக்கும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

1975-ஆம் ஆண்டு அரசு அணையின்படி கிடைக்கும் புதிய சலுகைகள் :

1. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகள் முதலானவற்றுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம்.

2. வீடுகள் கட்டி ஒதுக்குவது.

3. பால் விநியோகக் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளித்தல்.

4. வேளாண்மைக் கருவிகள் வாங்க, உழவு மாடுகள் வாங்க, பாசனக் கிணறுகள் தோண்ட கடன் மற்றும் மானியமாக — நிதியுதவி அளித்தல்.

5. கைக்குத்தலரிசி, கூடை முடைதல் போன்ற குடிசைத் தொழில்களுக்கு உதவுவது.

6. தொழில் நுட்பம் தெரிந்தோர்க்கு மானிய உதவி அளித்தல்.

7. சிறு வியாபாரம் செய்வதற்கான கடன்கள் வழங்குதல்.

—என்று இந்த ஏழு சலுகைகளும் எல்லா அரிசனங்களுக்கும் தரப்படுவதைப் போல கிறித்தவ அரிசனங்களுக்கும் தருவது என்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**[தமிழ்நாடு சட்டப் பேரவையில் துணை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து 4—11—75அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து]**

# பழமொழிகளில் பெண்கள்



எஸ். சண்முகசுந்தரம் எம்.ஏ.,

பழமொழிகள்-அனுபவ விதைகளின் அறுவடை மணிகள். கடந்த காலப் பண்பாட்டின் காலடிச் சுவடுகள். நிகழ்காலப் பழக்க வழக்கங்களின் நினைவுச் சின்னங்கள். எதிர்கால வாழ்வுக்கு-வளத்துக்கு எடுத்துக் காட்டுகள்.

அறிவுரைக்காகச் சில-அன்புரைக்காகச் சில-கிண்டலுக்காகச் சில-கேலிக்காகச் சில- எடுத்துக் காட்டுக்காகச் சில-எழுச்சிக்காகச் சில என்று பல மொழிகள் பழமொழிகளாக விளங்குகின்றன.

பழமொழிகளுக்குப் பழைய மொழிகள் என்றும் பொருள் கொள்ளலாம். பழையமொழிகள் எல்லாம் பழமொழிகள் இல்லை. பழையமொழிகள் மட்டுமே பழமொழிகள் என்பதும் இல்லை. ஏனெனில் இன்று தோன்றும் புதுமொழிகளும்- பொன்மொழிகளும் கூடப் பழமொழிகள் ஆவதுண்டு. பழமொழிகளுக்குப் பழம்போன்ற மொழிகள் என்றும் பொருள் கொள்ளலாம், பழம் என்பது இங்குச் சுவையைக் குறிக்கவில்லை. ஏனென்றால் இனிப்பு மட்டுமல்ல எரிப்பும் கசப்பும்கூடப் பழமொழிகளில் உண்டு. பழம்போன்ற மொழிகள் என்பதுஇங்குக் கனிவை முதிர்ச்சியைக் குறிக்கும்.

இப் பழமொழிகளில் பெண்கள் பெறும் இடத்தையும் இப்பழமொழிகள் பெண்களைப் பற்றி என்ன நினைக்கின்றன-எதை நினைவூட்டுகின்றன-எதை நீதியாக்குகின்றன என்பதையும் நாம் சிறிது காணலாம்.

**தாய்மை**

பெண்மையில் தாய்மையே சிறப்பைப் பெறுகின்றது. இறைவனால் எல்லா இடங்களிலும் இருக்க இயலாது என்பதற்காகவே தனக்குப் பதிலாகத் தாயைப் படைத்தான் என்பார்கள். ஒருமேனாட்டு அறிஞன் தாயின் காலடியில் சொர்க்கத்தைத் தேடியிருக்கிறான்.


இத் தாயைத் தமிழகப் பழமொழிகள் தெய்வமாகவே வரிக்கின்றன. ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது பழமொழி. முதலில் அறிந்த தெய்வம் அன்னையும் பிதாவும்தான். இருவரிலும் முதல் தெய்வம் அன்னைதான். பிறந்ததும் பெற்றவள் முகத்தையே குழந்தை நோக்குகிறது. அவள்தான் அதற்குத் தந்தையை அறிமுகப் படுத்துகிறாள். தாய்மைக்கு ஈடாக எதுவுமில்லை-எங்குமில்லை. எனவேதான் ‘பேயானாலும் தாய், நீரானாலும் மோர்’ என்கிறது பழமொழி. மோர் எவ்வளவுதான் நீர்க்கலப்புள்ளதாக இருந்தாலும் அதை மோர் என்றுதான் அழைப்பர். அதுபோல் தாய் எவ்வளவுதான் கொடுமையானவளாக இருப்பினும் அவள் தாய்தான். தாய்க்குப் பணியாதவன் வேறு யாருக்கும் பணிய மாட்டான். இதையே, ‘தாய்க்கு அடங்காதவன் ஊருக்கு அடங்கான்’ என்கிறது பழமொழி. அதுபோல் தான், ‘அன்னைக்கு உதவாதவன் ஆருக்கும் உதவான்’ என்றும் பழமொழி கூறுகிறது.

தாயும் குருவும் ஒரே தரத்தினர். அரிச்சுவடி சொல்பவர் குரு என்றாலும் அதற்கு முன்பே தாய் தான் அறிந்த சுவடிகளையெல்லாம் குழந்தைக்குச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து விடுகிறாள். ஒரு சிறந்த தாய் சிறந்த வாத்திச்சியாகவும் இருக்கிறாள். எனவே ‘குருமொழி கேளாதவனும் தாய்வார்த்தை கேளாதவனும் பாழ்’ என்று பழமொழி கூறுகின்றது. அதுமட்டுமல்ல ‘தாய் வார்த்தை கேளாத பிள்ளை நாய் வாய்ச் சீலை’ என்றும் கூறியது. நாயின் வாயில் அகப்பட்டச் சேலை கிழிபடுவதுபோன்று தாய் வார்த்தை கேளாதவனும் உலகில் கிழிபடுவான் என்பது உண்மை.

**பழமொழிகள் :**

‘பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு’ என்பது பழமொழி. பிள்ளைகள் எப்படி இருப்பினும் பெற்ற மனம் அவர்களுக்காகவே துடிக்கிறது. இன்னொரு பழமொழி ‘தாய் மனம் பித்து தந்தைமனம் கல்லு’ என்றும் கூறுகின்றது. தந்தையின் மனத்தைக் கல்லாக்குகிறது. பிள்ளை மனங்கள் கல்லாவதற்குச் சான்றாக இன்னொரு பழமொழி நிற்கிறது. ‘ஒரு பிள்ளை பெற்றவளுக்கு உறியிலே சோறு; நாலுபிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு’ என்ற பழமொழி பல பிள்ளைகள் பெற்றும் பயன்காணாத தாயை நினைவூட்டுகிறது. பிள்ளைகளைக் குற்றம் சொல்லியும் பயனில்லை. அவர்கள் மனத்தைக் கல் என்பதும் தவறு. ‘தாய் எப்படி இருப்பளோ அப்படி இருக்கும் குழந்தைகள்’ என்று கூறி இன்னொரு பழமொழி முன்னைய மொழியை மறுக்கின்றது. ‘தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை’ என்று கூறும்போது உண்மை என்றே எண்ணத் தோன்றுகிறது. பெண் பிள்ளைகளுக்குத் தாய் இருக்கும் வரைதான் பிறந்தகத்தில் சிறப்புண்டு. தாய் போய்விட்டால் அங்கே அவர்களுக்கு மதிப்பில்லை மரியாதையில்லை. இதை ‘தேரோட போச்சு திருநாள்; தாயோட போச்சு பிறந்தகம்’ என்று பழமொழி விளக்குகிறது..

தாயையும் தாரத்தையும் சில பழமொழிகள் ஒப்பிட்டுப் பார்க்கின்றன. தாரம் எவ்வளவுதான் சிறப்பாகஅமைந்தாலும் தாய்க்கு பின் தாரம்’ என்பது ஒரு பழமொழி. தாய்க்குப் பின்தான் தாரம். இதற்குக் காரணம் கூறுகிறது இன்னொரு பழமொழி. ‘பெற்றவள் வயிற்றைப் பார்ப்பாள்; பெண்சாதி மடியைப் பார்ப்பாள்’ என்று கூறும்போது பெற்றதாய் தன் பிள்ளையின் வயிற்றை உணவு உண்டுவிட்டானா இல்லையா என்று பார்ப்பாள் என்றும் பெண்சாதியோ கணவன் சம்பளம் வாங்கிக் கொண்டு வந்து விட்டானா இல்லையா என்று அவனது மடியைப் பார்ப்பாள் என்றும் விளக்கம் கொள்ளலாம்.



**மனைவி :**

மனைவி என்ற நிலையில் பெண்களுக்குரிய நிலைமைகளைச் சில பழமொழிகள் விளக்குகின்றன. சில, பெருந்தன்மையான குணங்களையும், சில அவர்களின் சிறுமைப் பண்புகளையும் செப்புகின்றன. 'மனைவி இல்லாத புருஷன் அரை மனிதன்' என்பது ஒரு பழமொழி. மனிதனை முழுமையாக்குவது மனைவிதான். தனக்கென வாழ்ந்தவனைப் பிறருக்கென வாழவைக்கும் பொறுப்பு மனைவிக்கே உண்டு. கட்டுப்பாடு இன்றிக் கண்டபடி அலைபவனின் கால்களுக்குப் பொன் விலங்காவாள் மனைவி. இதையே, 'பெண்சாதி காற்கட்டு பிள்ளை வாய்க்கட்டு' என்று பழமொழி கூறும்.

மனைவியைத் தேர்ந்து கொள்ளும் முறைகளையும் பழமொழிகள் வரையறுக்கின்றன. சாலையின் செம்மையைப் பார்த்துத்தான் ஒருவன் பயணத்தைத் தொடங்க வேண்டும்-அது போன்றே கடமைகளைச் செய்யும் நல்ல மனைவியையே துணையாக்க வேண்டும். இதை, 'வேலையைப் பார்த்துப் பெண்ணை எடு; சாலையைப் பார்த்து ஊருக்கு நட' என்று பழமொழி கூறுகிறது.

முறையற்ற மோசமான மனைவிகள் பேய்க்கு நிகராவர் என்பதைச் சில பழமொழிகள் நினைவுறுத்துகின்றன. 'பிரியம் இல்லாத பெண்டாட்டிக்குப் பேய் நன்று' என்றும், 'பெண்சாதி பேச்சைக் கேட்பவன் பேய் போல அலைவான்' என்றும் பழமொழிகள் எச்சரிக்கின்றன.

**மாமியார் :**

மாமியார் என்ற நிலையில் பெண்கள் அதிகார வர்க்கத்தின் அங்கத்தினர்களாகின்றனர். மருமகள்களை ஆட்டிப் படைக்கும் ஆணவக்காரிகளாகவும் சூனியக்காரிகளாகவும் மாறிப்போய் விடுகின்றனர். 'பானை ஒட்டினாலும் மாமியார் ஒட்டாள்' என்ற பழமொழி மாமியார் மருமக்களின் ஒட்டா உறவினைச் சுட்டும். 'பெண்ணுக்கு மாமியாரும் பிள்ளைக்கு வாத்தியாரும்' என்ற பழமொழி மாமியார்களின் வாத்திச்சி வேலையை விளக்குகின்றது.

'மாமியார் உடைத்தால் மண் கலம் மருமகள் உடைத்தால் பொன்கலம்' என்ற பழமொழி மாமியார்களின் கொட்டத்தை அம்பலப்படுத்துகின்றது. 'மகன் செத்தாலும் சாகட்டும் மருமகள் கொட்டம் அடங்கினால் போதும்' என்ற பழமொழி மாமியார்களின் கொடூரமான எண்ணத்தை எடுத்துக் காட்டுகிறது. ''வந்த அளவிலே சிறுக்கி பந்தடித்தாள், வரவர சிறுக்கி கழுதை மேய்க்கிறாள்'' என்ற பழமொழி மாமியார்களின் எரிச்சல் எரிமலைகளைப் படம் பிடிக்கின்றது.

எனவேதான் பழமொழிகள், 'மாமியார் மெச்சிய மருமகள் இல்லை மருமகள் மெச்சிய மாமியார் இல்லை' என்றும் 'மாமியார் இல்லாத மருமகள் உத்தமி; மருமகள் இல்லாத மாமியார் குணவதி' என்றும் கூறுகின்றன.



**மருமகள் :**

மருமகள் என்ற நிலையில் பெண்கள் அடக்கப்படுகிறார்கள். அடங்கி ஒடுங்கிப் போன அப்பாவி மருமகள்கள் வேறு வழியில்லாததால் வெறுவாயையே மெல்லுகிறார்கள்.

''மாமியாரும் சாகாளோ; என் மனக்கவலை தீராதோ'' என்று ஒருத்தி மனக்கவலையில் மௌனமாகச் சபிக்கிறாள். 'வரவர மாமியார் கழுதைப் போலானாள்' என்று ஒருத்தி தன் உள்ளக் கருத்தை ஊமையாக்காமல் ஓசைப்படுத்துகிறாள். மாமியார் மீதுள்ள வெறுப்பு மருமகளின் மனதைக் கல்லாக்குகின்றது. எனவேதான் ஒரு பழமொழி, 'மாமியார் செத்து ஆறும் மாதம் மருமகள் கண்ணில் தண்ணீர் வந்தது' என்று கூறுகிறது. செத்து ஆறும் மாதம் கண்ணில் கண்ணீர் அல்ல தண்ணீர் வந்ததாகக் கூறுவதினின்றும் மருமகளின் மனம் எவ்வளவு தூரம் வெறுப்பும் விரக்தியும் கொண்டு விளங்குகிறது என்பது புரிகிறது.

**கிழவிகள் :**

கிழவிகள் என்ற நிலையில் முதுமையான பெண்கள் குடும்பத்தில் வேண்டாதவர்களாக மாறுகின்றனர். முதுமையில் முணுமுணுப்பும் முறைப்பும் பெண்களுக்கு அதிகமாகிறது. இறந்தகால எண்ணங்கள் அவர்களிடையே ஏக்கங்களை வளர்க்கிறது. குடும்பப் பூசல்களை இவர்களே உருவாக்குகின்றனர். வயது ஆக ஆக பற்கள் விழுவதுபோல நாவும் உதிர்ந்து விட்டால் இதுபோன்ற தொந்தரவும் தொல்லைகளும் இல்லாமலிருக்கும்.

'கிழவியும் காதம் குதிரையும் காதம்' என்ற பழமொழி, குதிரையை நாம் நெருங்காதது போன்று கிழவிகளையும் நெருங்கக் கூடாது என்று அறிவுறுத்துகிறது. 'கிழவி இருந்த வீடும் கிளி இருந்த காடும் ஆக ஈடேறாது' என்ற பழமொழி கிழவிகளால் வீடு பாழாவதைத் தடுக்க முயல்கிறது. எனவேதான் கிழவிகள் இறந்தாலும் கொட்டும் முழக்கும், பாட்டும் பாடையும், அமர்க்களப்படுகின்றது போலும் !

**கைம்பெண்டிர் :**

பெண்களின் கைம்மைநிலை மிகவும் இரங்கற்குரியது. 'வாழாத பெண்களைத் தாழ்வாக உரைக்காதே' என்று ஒரு பழமொழி கூறுகிறது. 'வாழாப் பெண் தாயோட' என்பதால் அவர்கள் இரக்கங்களையே யாசிக்கும் எளிய பிறவிகளாகின்றனர்.

'தாலியறுத்தவள் ஏன் இருக்கிறாள்; தாரந்தப்பினவனுக்குப் பொங்கிப் போட' என்ற பழமொழி கைம்பெண்டிரை இழிவுபடுத்துகிறது. 'வாழாத பெண்ணுக்கு மை ஏண்டீ பொட்டு ஏண்டீ மஞ்சள் குளிப்பேதடி' என்ற பழமொழி விதவைகளின் வேதனையைக் கிளறி விடுகின்றது. 'தாலியறுத்தவள் வீட்டிலே தலைக்குத் தலை பெரியத்தனம்' என்ற பழமொழி விதவைகளின் வீட்டுநிலையை விளக்குகின்றது. 'தாலியறுத்தவளுக்கு மருத்துவச்சி உதவி ஏன்' அவர்களே மருத்துவச்சியாகப் பணிபுரிகின்றனர்.

**பெண்ணின் பெருமை :**

'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்பதால் பெண்ணின் பெருமை பெரிதுபடுத்தப்படுகின்றது. பெண்மையால் ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும் என்பதால் அந்த மாசக்தியை மக்கள் மிகவும் போற்றுகிறார்கள். 'மனிதன் ஆரம்பமாவதும் பெண்ணாலே அடங்கி ஒடுங்குவதும் பெண்ணாலே' என்று சொல்லுவதால் பெண்மை சிறப்புகின்றது.

‘பத்தினியைத் தொட்டதும் துரியோதனன் கெட்டதும்’ என்ற பழமொழி பத்தினிப் பெண்ணின் பெருமையையும் பறை சாற்றுகின்றது.

பெண்ணின் சிறுமை :

பெண்களின் சிறுமையையும் பழமொழிகள் சித்திரிக்கத் தவற வில்லை. ‘பெண் புத்தி பின் புத்தி’ என்பதால் பெண்மையின் திடமில்லாத புத்தியையும்’ ‘பெண்கள் இருக்குமிடம் சண்டைகள் பெருத்த இடம்’ என்பதால் பெண்களின் ஒற்றுமையின்மையையும், ‘பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்’ என்பதால் பெண்களின் நகை ஆசையையும், ‘பெண்மூப்பான வீடு பேரழிந்து போம்’ என்பதால் பெண்களால் குடும்பம் குலைவதையும் அறிந்து கொள்ளலாம்.

பெண்கள்மீது நம்பிக்கைக் கொள்ளக் கூடாது என்றும் சில பழமொழிகள் வற்புறுத்துகின்றன. ‘சேலைகட்டிய மாதரை நம்பாதே’ என்று ஒருவர் பாடினார். ‘மாற்றானை நம்பினாலும் மாதரை நம்பாதே’ எனவும், ‘பேயை நம்பினாலும் பெண்ணை நம்பாதே’ எனவும் பழமொழிகள் போதிக்கின்றன.



பெண்ணாகப் பிறப்பதே இழிவு என்றும் நினைத்தனர். எனவே தான் ‘ஆணாய் பிறந்தால் அருமை பெண்ணாய் பிறந்தால் எருமை’ என்று கூறுகின்றனர். ‘அடுக்களைப் பெண்ணுக்கு அழகு எதற்கு?’ என்று ஒரு பழமொழி வினவுகிறது.

பெண்கள் ஆண்களைக் கெடுத்து வருகிறார்கள் என்றும் சில பழமொழிகள் கூறுகின்றன. அரிவைமொழி கேட்டால் அறிஞனும் அபத்தன் ஆவான்’ என்றும் ‘அடுத்துக் கெடுப்பான் கபடன், கொடுத்துக் கெடுப்பான் மார்வாடி, தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை’ என்றும் பழமொழிகள் பயமுறுத்துகின்றன.

நம்பிக்கைகள் :


பெண்ணின் பிறப்பை வைத்துச் சில பழமொழிகள் சில நம்பிக்கைகளை நவில்கின்றன.

‘அஞ்சாவது பெண்பிறந்தால் அரசாளும் ஆண்டியாவாள்’ ‘ஆறும் குழந்தை பெண்ணாகப் பிறந்தால் ஆறான குடித்தனமும் நீறாய் விடும்’ என்றும், ‘ஆறாவது பெண் பிறந்தால் ஆறு ஆக்கினாலும் ஆக்கும் நூறு ஆக்கினாலும் ஆக்கும்’ என்றும், ‘எட்டாம் பேறு பெண் பிறந்தால் எட்டிப் பார்த்த வீடு குட்டிச்சுவராகும்’ என்றும், ‘மூலத்தில் பிறந்தவள் முத்தத்து மாமியாரை மூலையில் இருத்துவாள்’, என்றும் நம்பிக்கைகள் பழமொழிகளாகின்றன.

பெண்களுக்காக நீதிகள் :

பெண்களுக்கென்று சில நீதிகளைச் சில பழமொழிகள் கூறுகின்றன. ‘பெண்டிர்க்கு அழகு எதிர்பேசாதிருத்தல்’ என்றும்; ‘வாய் பாத்தவள் வாழ்வு இழந்தாள்’ என்றும் ‘ஆளனில்லாத மங்கைக்கு அழகு பாழ்’ என்றும், ‘அடக்கமும் பெண்ணுக்கழகு’ என்றும் ‘பெண்ணென்றால் பேயும் இரங்கும்’ என்றும்; ‘இடுப்பு சுருங்குவது பெண்களுக்கு அழகு’ என்றும். ‘இராசாமகள் ஆனாலும் கொண்டவனுக்குப் பெண்தான்’ என்றும், ‘குலமகட்கு அழகு கொழுநனைப் பேணுதல்’, என்றும், ‘ஆணை அடித்து வளர் பெண்ணைப் போற்றி வளர்’ என்றும் கூறுகின்றன.

இவ்வாறு பழமொழிகள் மூலம் பெண்களின் தாய்மை, மனைவி, மாமியார், மருமகள், கிழவி, கைம்பெண் போன்ற பலநிலைகளைக் காணலாம். பெண்களுக்கான நீதிகளையும் நம்பிக்கைகளையும் வரையறுக்கின்றன. பழமொழிகள் எல்லாம் அமலாக்கப் படாத சட்டங்கள், என்றாலும் இவை கிராமிய மக்களால் அன்றாடம் வாழ்வில் கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றன.




## தமிழரசில் எழுதுங்கள்!

நான் வெளிநாடுகளுக்குச் சென்றுவந்தபோது ‘‘இனியவை இருபது’’ என்ற நூலை எழுதினேன். அது நூலாக வருவதற்கு முன்பு அரசின் சார்பில் வருகிற ‘தமிழரசு’ பத்திரிகையில் கட்டுரையாக வந்தது. அதை நான் வேறு என்னுடைய கட்சி ஏடுகளில் எழுதாமல் அரசு ஏட்டில் எழுதியதற்குக் காரணம்—நான் அரசுச் செலவில் சென்றுவந்ததால் அதை அரசு இதழிலேயே எழுதினேன். நூல் வெளியிடுவதைப் பற்றிப் பிரச்சினை இல்லை.

அடுத்தடுத்து, சொக்கலிங்கம் போன்ற அதிகாரிகள் மேல்நாடுகளுக்குச் சென்று வருகிற நேரத்தில்—அவைகள் நூலாக வருவதற்கு முன்பு—அரசின் வார இதழில் அவைகள் கட்டுரையாக வெளிவரவேண்டும் என்பது என்னுடைய விருப்பம். அதனை அரசு அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ‘தமிழரசு’ இதழை விரும்பிப் படிக்கின்ற ஆர்வம் மேலும் வளர வேண்டும். அதனுடைய எண்ணிக்கை அதிகமாக வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே யல்லாமல் வேறல்ல.

*—‘‘ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும்’’ என்ற நூல் வெளியீட்டு விழாவில் முதல்வர் கலைஞர்.*

# நேருவின் வாழ்விலே...





இந்தியா முழுவதும் அரிசி பங்கீட்டுக் கொடுத்து வந்த காலம். மக்களுக்குப் பொறுப்பு உணர்ச்சியூட்ட வேண்டும் என்று நேரு கருதினார். தமது பங்கீட்டு அட்டையைத் தாமே எடுத்துக் கொண்டு, கடைக்குப் போனார். அங்கு, கூட்டத்தினர் ஓர் ஒழுங்கு முறையின்றிக் கடையை முற்றுகையிட்டிருப்பதைக் கண்டார். உடனே, அங்கிருந்த கூட்டத்தினரை ஒழுங்காக வரிசையில் நிற்கச் செய்து, அவ்வரிசையின் இறுதியில் தாமும் போய் நின்று கொண்டார்.

நேரு, வரிசையில் நிற்பதைக் கண்ட சிலர், அவரிடம் போய், 'உங்கள் பங்கீட்டு அட்டையைக் கொடுங்கள்; நாங்கள் வாங்கிக் கொடுக்கிறோம்' என்றனர். அதற்கு அவர் கண்டிப்பான முறையில் மறுப்புத் தெரிவித்து, வரிசையாக நின்றே முறைப்படி தமது பங்கினை வாங்கிச் சென்றார்.

* * *

நேரு, பல ஆண்டுகள் காங்கிரஸ் தலைவராகப் பதவி ஏற்றுப் பணிபுரிந்திருக்கிறார். ஒருமுறை, அவர் தொடர்ந்து தலைவராகப் பதவியில் இருப்பதைக் கண்டித்து 'மாடர்ன் ரெவ்யூ' என்ற பத்திரிகையில் 'சாணக்கியன்' என்பவர் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

''நேரு, சமத்துவம், குடியரசு என்று பேசிக் கொண்டிருந்தால் கூட மனம் திரும்பினால் தன்னாட்சி வெறி பிடித்துப் பிற்காலத்தில் ஒரு சர்வாதிகாரியாக மாறிவிடுவார். எனவே, அவரை முழுதும் நம்பி, அவரிடம் இந்தியாவையோ காங்கிரசையோ ஒப்படைப்பது தவறு'' என்று அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது.

நேருவைக் கண்டித்து எழுதிய அந்தச் சாணக்கியன் யார் என்பது இதழின் ஆசிரியருக்கும் தெரியாது — வாசகர்களுக்கும் தெரியவில்லை. இறுதியில், நேருவே, வேண்டுமென்றே தம்மைப் பற்றித் தாமே இப்படி ஒரு கட்டுரை எழுதினார் என்பதும், இக்கட்டுரையைப் படித்ததும் தம்மைப் பற்றி வாசகர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள இவ்வாறு செய்தார் என்பதும் பின்னர் தெரிய வந்தது.

* * *

1928-ஆம் ஆண்டு சைமன் குழுவினர் இந்தியாவுக்கு வந்தனர். இந்தியக் காங்கிரஸ் கட்சியினர் ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தி அந்தக் குழுவினரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இலட்சுமணபுரியில் நேருவின் தலைமையில் எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. குழுவினர், புகைவண்டி நிலையத்தில் வந்து இறங்குவதாக இருந்தது. நிலையத்தின் வாயிலில் மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. பெருங்கூட்டம் கூடிவிட்டதைக் கலைப்பதற்காகக் காவலர், கூட்டத்தினர் மீது தடியடிப் பிரயோகம் நடத்தினர். கூட்டத்தின் முன்னால் நின்று கொண்டிருந்த நேருவின் மீது அடி பல முறை பலமாக விழுந்தது.

நேருவின் முகம் சினத்தால் சிவந்தது. தன்னைத் தடிகொண்டு தாக்கிய காவலனைக் குதிரையிலிருந்து கீழே இழுத்துப்போட்டு, அவனுடைய கைத்தடியையே பிடுங்கி அவனை நையப் புடைக்க வேண்டும் என்று எண்ணினார். ஆனால், தன் கட்சிக் கட்டுப்பாடு நினைவுக்கு வரவே, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அடி தன் முகத்தில் விழாமல் கையால் தடுத்துக் கொண்டார்.

* * *

வேட்டையாடுவது என்பது நேருவுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. என்றாலும், கொடிய வன விலங்குகளைத் தவிர வேறு விலங்குகளையும் பறவைகளையும் அவர் கொல்வதில்லை.

நேரு ஒரு சமயம் இமயமலைச் சாரலில் உள்ள ஒரு காட்டில் வேட்டையாடச் சென்றார். எதிர்பாராத விதமாக அவரது துப்பாக்கிக் குண்டு, ஒரு மானின் உடம்பில் பட்டுவிட்டது. மான் கீழே விழுந்து, வலி தாங்காமல் துடிதுடித்தது. மானின் துடிப்பும், மிகவும் பரிதாபத்துக்குரிய அதன் பார்வையும் நேருவின் நெஞ்சத்தைத் துடிக்க வைத்துவிட்டன. அவரது கண்கள் கலங்கின. அது முதல், அவர் வேட்டையாடுவதையே விட்டுவிட்டார்.

* * *

நேரு கடமையுணர்வுமிக்கவர்; வேலையில் மூழ்கிவிட்டால் வேறு எதையும் நினைத்துப் பார்க்க மாட்டார்.

1962-ல் கிருஷ்ணபுரியில் காங்கிரஸ் மாநாடு நடந்து கொண்டிருந்தது. நேரு, மாநாட்டரங்கில் — தமது இருக்கையில் அமர்ந்திருந்தார். திடீரென்று பத்துப் பதினைந்து படப் பிடிப்பாளர்கள் சூழ்ந்து கொண்டு, நேருவின் காலணியைப் பல்வேறு கோணங்களில் படமெடுத்தனர். குனிந்து வளைந்து நேருவின் வலது காற் காலணியைப் படமெடுத்தனர்.

முதலில் படப்பிடிப்பாளர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்பது நேருவுக்குப் புரியவில்லை.

வியப்பிலே மூழ்கிய நேரு, அந்தப் படப்பிடிப்பாளர்களையே பார்த்து, ''அங்கே என்ன இருக்கிறது?'' என்று கேட்டார்.

அவர்கள் அந்தக் காலணியைச் சுட்டிக் காட்டிய பின்தான், தாம் அணிந்திருக்கிற காலணியில் பெருவிரலுக்கு அருகில் ஓர் ஓட்டை இருப்பதைக் கண்டார். தாமே சிரித்துக்கொண்டார்.

— தொகுப்பு: சாம்பழ

### தமிழ்நாட்டின் பெருமை !

உயர்ந்த அறிவாற்றலுடைய சென்னை (தமிழ்நாடு) அன்றும் இன்றும் புகழ்பெற்ற தத்துவமேதைகளையும், கணக்கறிஞர்களையும், அறிவியல் வல்லுநர்களையும் உண்டாக்கியுள்ளது — உண்டாக்கி வருகின்றது. சென்னை, எனது உள்ளத்தை மிகக் கவர்ந்துள்ள இடமாகும்.

### தமிழ் இலக்கியங்களின் பழமை!

பாண்டிய மன்னர்களின்கீழ் மதுரை தமிழ்க்கலையின் நடுநாயகமாக விளங்கியது. அங்கே தமிழ்ப் புலவர்களும் தமிழறிஞர்களும் சங்கமாகக் கூடித் தமிழ் ஆய்ந்து வந்தனர். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பெரும்பான்மையானவை கிறித்தவ ஊழியின் தொடக்க காலத்தைச் சேர்ந்தவை.

### தோல்வி அரிது!

எந்த ஒரு நல்ல காரணத்திற்காகவும் இறக்கத் தயாராயிருப்பவர்கள் அரிதாகவே தோல்வியுறுகின்றனர்.

### படிக்கும் பழக்கம்

நம் நாட்டில் புத்தகங்களையும் இதழ்களையும் படிப்போர் தொகை மிகக் குறைவு. இதற்குக் காரணம் படிப்பின்மையன்று; இங்கு, படித்தவர்கள் கோடிக் கணக்கில் இருக்கிறார்கள். ஆனால், படிக்கும் பழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிற பொது மக்களின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட அளவிலேயே உள்ளது.

### நாட்டின் வளமும்—அழிவும்

ஒரு நாட்டின் வளம் அந்த நாட்டில் வேலை செய்வோரின் எண்ணிக்கையைப் பொறுத்தே மதிக்கப்படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு நாட்டின் அழிவுக்குக் காரணம்.

### நாடு இறவாதது!...

"நாடு என்பது இறவாத ஒன்று; மக்கள் வருவார்கள், போவார்கள். ஆனால், நாடு என்றும் அழியாத ஆற்றலைத் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறது.

### நோக்கம் !...

நாம் சிறியவர்கள்; எனினும் நாம் ஈடுபட்டிருக்கும் பணி மிகப் பெரியது. எனவே, நாம் ஈடுபட்டுள்ள பணியின் பெருமையில் ஒரு பகுதி நம்மீது படிந்து விடுகிறது.

### கலைத்துறையில் மூத்தது!

கலைத் துறையைப் பொறுத்த வரை வட இந்தியாவைவிடத் தென்னிந்தியாவில்தான் பழங்காலத்துச் சின்னங்கள் அதிகம்.


### பத்தில் ஒன்று!...

சினிமாவுக்குப் போகிறவர்கள் சினிமாவுக்காகச் செலவு செய்கிற பணத்தில் பத்தில் ஒரு பங்கினைப் புத்தகத்திற்குச் செலவிட்டாலே இந்தியாவில் ஏராளமான புத்தகங்களை விற்பனை செய்ய முடியும்.




### வாழ்க்கைக்குச் சிறப்புத் தருவது!

வாழ்க்கைக்குச் சிறப்புத் தருவது போராட்டம்தானேயன்றி அதன் முடிவு அன்று.



# கோட்டை என நிலைப்பார் நாட்டில்



பாஞ்சை சுவர்க்கமெனப் பாரோர் வணங்கிவரப்
பூஞ்சை படர்நிலத்தில் புன்னை என நின்றபுலி
மின்னல் படித்தறிய மிளிர்வாள் சுழற்றுமுகில்
அன்னை நிலத்திற்(கு) ஆன்ற தொருவேலி
மாற்றார் மனங்கலக்கும் மாயப் பெருங்கூற்று
போற்றும் குடிவெம்மை போக்கும் மலைக்காற்று
வெள்ளை மனமில்லா வெள்ளை இனத்தாரின்
கொள்ளை மரஞ்சாய்க்கக் கூவும் புயற்காற்று
தூக்கில் உறங்குவதைத் தொட்டில் விளையாட்டாய்
ஊக்க முடன்ஏற்ற உண்மைப் பெருமறவன்
கயிறே ஆருகக் காலன் தனைவென்று
கயத்தாறு தன்னைக் கயிலையாய் மாற்றியவன்
மானக் கவரிமா மாளும் நிலைசொல்லும்
கானக் குறட்கெடுத்துக் காட்டை எழுதியவன்
கோட்டை மறவன் குறையிலாக் கட்டபொம்மன்
கோட்டை அமைத்தாரும் கோட்டை எனப்புகழால்
நாட்டில் நிலைப்பார்காண் நன்கு நலம்பெருகி !

—: ந. புவனேந்திரன் :—

# வழிகாட்டும் தமிழ்நாடு!

## குடியரசுத் துணைத்தலைவர் புகழ்மாலை

மதுரைப் பல்கலைக்கழகத்தில் அக்டோபர் திங்கள் 9-ஆம் நாள் நடந்த பட்டமளிப்பு விழாவில் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் ஜட்டி அவர்கள் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது :

''பட்டமளிப்பு உரை நிகழ்த்துமாறு என்னை அழைத்தற்காகப் பல்கலைக்கழக வேந்தருக்கும், அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''திரு. சி. என். அண்ணாதுரை, டாக்டர் ஜாகிர் உசேன், பேராசிரியர் வி.கே.ஆர்.வி. ராவ், பேராசிரியர் எஸ். நூருல் ஹசன் போன்ற மேதைகள் பட்டமளிப்பு உரை நிகழ்த்தியிருக்கும் இந்தப் பல்கலைக்கழகத்தில் உரை நிகழ்த்துவதற்கு என்னை அழைத்திருப்பதை ஒரு பெரிய கௌரவமாகக் கருதுகிறேன்.

''இந்த அழைப்பை மிகுந்த பணிவோடு ஏற்றுக் கொண்டேன். ஏனென்றால், இந்தப் பல்கலைக்கழகத்தின் பணிகளை அறிந்து கொள்வதற்கும், பெருமை வாய்ந்த மீனாட்சி ஆலயத்துக்கு வருகை தருவதற்கும் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறேன். எனது வருகை பயனுள்ளதாக இருக்கக் காண்கிறேன். இந்த நாளின் இனிய நினைவுகள் எப்போதும் என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும்.

''புலவர் பலர் கடைச் சங்கம் அமைத்துக் கூட்டங்கள் நடத்தியதும், நமது நாட்டின் மிகப் புராதன, அறிவின் உறைவிடங்களில் ஒன்றானதுமான மதுரையில் பல்கலைக்கழகம் அமைத்ததற்காகத் தமிழ்நாடு அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன்.

''இந்த இளம் பல்கலைக் கழகம், திறமை வாய்ந்த துணை வேந்தர்களின் வழி நடத்துதலுடனும், மாநில அரசாங்கம், பல்கலைக்கழகப் பண உதவிக் கமிஷன் ஆகியவற்றின் உதவியுடனும் பத்தே ஆண்டுகளில் நல்ல முன்னேற்றம் அடைந்திருப்பது கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

''திருக்குறள் ஆராய்ச்சிக்காகத் தனிப் பிரிவும், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநில அரசாங்கங்களின் உதவியுடன் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளின் வளர்ச்சிக்காகத் தனித்தனிப் பிரிவுகளும் ஏற்படுத்தி இருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் பல்கலைக்கழகத்தில் உள்ள உயிரியல் பிரிவு அனைத்து நாட்டுப் புகழ் அடைந்திருக்கிறது. இந்தப் பல்கலைக்கழகம் எல்லாத் துறைகளிலும் பாராட்டுக்குரிய சாதனை புரிந்து வருகிறது; நமது தேசிய வாழ்க்கையில் தனக்கென்று பெயரையும் புகழையும் சம்பாதித்துக் கொண்டுவிட்டது.

''இந்தப் புராதன நகரத்தின் புகழ் வாய்ந்த பாரம்பரியத்துக்கு ஏற்றதாகவே இந்தச் சாதனைகள் அமைந்திருக்கின்றன. இந்தச் சாதனைகளுக்காக இப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்களையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் பாராட்டுகிறேன். இது குறித்து அவர்கள் பெருமைப்படுவது நியாயமே. வரும் ஆண்டுகளில் இந்தப் பல்கலைக் கழகம் மேன்மேலும் வளர்ச்சி அடையும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

''கல்வித்துறையில் சிறப்பான வளர்ச்சி அடைந்திருப்பதற்காக இந்தச் சமயத்தில் தமிழ்நாடு அரசாங்கத்தையும் பாராட்ட விரும்புகிறேன். இந்த மாநிலம் கல்வித் துறையில் மிகவும் முன்னேறி இருக்கிறது. இங்குத் துவக்கப்பட்ட பல கல்விப் பரிசோதனைகள் நாட்டின் பல பாகங்களில் பரவியிருக்கின்றன. மதிய உணவுத் திட்டம், பள்ளிக்கூடச் சீரமைப்புத் திட்டம் ஆகியவை இரண்டு சிறந்த உதாரணங்களாகும். கல்வி நிறுவனங்களுக்கு வெளியே சுயமாகப் படித்து முன்னேறும் முறைக்கு இந்த மாநிலம் முக்கியத்துவம் கொடுத்து முன்னணியில் இருப்பதும் எனக்குத் தெரியும். தமிழ்நாட்டில் உருவாக்கப்படும் பயனுள்ள கல்விப் பரிசோதனைகளை இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களும் கவனமாக ஆராய்ந்து அவற்றால் பயனடையும் என்று நம்புகிறேன்.''

---

### வட ஆர்க்காடு மாவட்டத்தில் ....

தமிழகத்திலேயே முதல் நகராண்மைக் கழகம் நிறுவப்பட்ட பெருமை வட ஆர்க்காடு மாவட்டம் வாலாஜாபேட்டை நகரத்தையே சாரும்.

* * *

வேலூரில் உள்ள காவல்துறையினரின் 'விரல் ரேகை நிலையம்' உலகிலேயே மிகப் பழமையான விரல் ரேகை நிலையமாகும்.

* * *

தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய சிறைச்சாலையும், பெண்களுக்கெனச் சிறைச்சாலையும் உள்ள இடம் வேலூர் ஆகும்.


* * *

தென்னகத்தில் ஏற்பட்ட முதல் ரயில் பாதை சென்னையில் இருந்து வட ஆர்க்காடு மாவட்டம் வாலாஜா சாலைக்குத்தான் போடப்பட்டது. போடப்பட்ட ஆண்டு 1856.

* * *

தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் மட்டுமே சந்தனமர ஏலம் நடைபெறுகிறது. அதில் ஒரு இடம் வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூர். ஆண்டு ஒன்றுக்கு ஓர் கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தன மரங்கள் ஏலம் விடப்படுகின்றன.

# மாடி ரயில் வருகிறது!



மாடி வீட்டில் குடி இருந்திருக்கிறோம்.

மாடிப் பேருந்திலும் சென்றிருக்கிறோம்.

'மாடிப் பூங்கா'வில் கூட உலவி இருக்கிறோம். ஆனால், மாடி ரயிலில் ஏறி இருக்கிறோமா? கொஞ்சம்பொறுங்கள். மாடி ரயில் இப்போது தயாராகிக் கொண்டிருக்கிறது. விரைவில் அது நம்மைச் சுமந்தபடி ஓடப்போகிறது!

சென்னைப் பெரம்பூரிலுள்ள இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையில், இந்தியாவிலேயே முதல் தடவையாக இந்த மாடி ரயில் பெட்டிகள் செய்யும் வேலை துவங்கியுள்ளது. முதல் இரண்டு மாடி ரயில் பெட்டியின் கூண்டுப் பகுதி முடிவடைந்துள்ளது. பரிசோதனைக்குப் பிறகு தொடர்ந்து இது நிறைவேற்றப்படும். இரண்டடுக்குள்ள இப்பெட்டி 140 பயணிகளுக்கு இடவசதியை அளிக்கும். பகல் நேர-குறை தூரப் பயணங்களுக்கு மட்டும் இந்த ரயில் விடப்படும். இப்பெட்டிகள், அகலமான ஜன்னல்களைக் கொண்டிருக்கும். உயரத்திலிருந்து நன்கு கண்டு களிக்கும் வண்ணம் இது அமைந்திருக்கிறது.

1955-ஆம் ஆண்டு காந்தியடிகள் பிறந்த நாளன்று துவக்கப்பட்ட இந்த இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையின் வயது எத்தனை தெரியுமா? இருபது ஆண்டுகள். ஆண்டிற்கு 350 மூன்றும் வகுப்பு-தற்பொழுதையஇரண்டாம் வகுப்பு கூண்டுப் பெட்டிகளை மட்டுமே உற்பத்தி செய்வதற்காக இது துவக்கப்பட்டது.

1973-74-ல் மிக அதிக அளவான 750 பெட்டிகளை உற்பத்தி செய்தது ஒரு மாபெரும் சாதனையாகும். இப்பொழுதும் இது ஆண்டிற்கு 750 பெட்டிகள் உற்பத்தி செய்கின்றது. இத்தொழிலகம் இதுவரை (31-8-75) 10,910 ரயில் பெட்டிகளைத் தயாரித்துள்ளது.


இதுவரை 56 வகைகளில் ரயில் பெட்டிகள் செய்யப்பட்டுள்ளன. முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, தூங்கும் வசதிகள் கொண்ட பெட்டிகள் உட்காரும் வசதிகள் (Chair Cars) கொண்ட பெட்டிகள், உல்லாசப் பயணப் பெட்டிகள் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட பெட்டிகள், சாப்பிடும் வசதிகள் நிறைந்த பெட்டிகள், ராஜதானி விரைவு வண்டிக்கான பெட்டிகள், மின் ரயில் பெட்டிகள், டீஸல் ரயில் கார்கள் போன்றவை இவைகளில் சில. பிராட்கேஜுக்கு மட்டுமின்றி, மீட்டர்கேஜ் பாதைக்கான ரயில் பெட்டிகளும்| இங்குத் தயாரிக்கப்படுகின்றன.

நமது நாட்டிற்குத் தேவையான பல வகைப் பெட்டிகள் அண்மையில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று குளிர் சாதனம் பொருத்தப்பட்ட தூங்கும் வசதி கொண்ட ரயில் பெட்டிகள். ஒரு பெட்டியில் 48 பேருக்கு இடவசதி உண்டு.

இப்பொழுது, தானே இயங்கும் குளிர் சாதன தூங்கும் வசதி கொண்ட பெட்டிகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. முடிந்த சில இவ்வகைப் பெட்டிகள் பரிசோதனைக் கட்டத்தை இப்பொழுது முடித்துள்ளன. முதன் முறையாக நம் நாட்டிலேயே தயாரான குளிர் சாதனங்கள் இப்பெட்டிகளில் பொருத்தப்பட்டுள்ளன.

சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகர்ப்புறப் போக்குவரத்திற்கான மின் ரயில்களும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன.

பகல் பயணத்திற்கு மிகவும் வசதியான நாற்காலிப் பெட்டிகளும் அண்மையில் தயாரிக்கப்பட்டுள்ளன. முதல், இரண்டாம் வகுப்புகளைக் கொண்ட




தனித்தனிப் பெட்டிகள் வசதியாக உட்கார்ந்து பயணம் செய்ய ஏற்றவைகளாகும். ஒரு வகை முதல் வகுப்புப் பெட்டிகளில் சுழலும் நாற்காலிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இங்கு செய்யப்பட்ட ரயில் பெட்டிகளைக் குறிப்பிட்ட திட்டப்படி சில ஆண்டுகளுக்கு ஒருமுறை பராமரிக்கும் வேலையையும் இத்தொழிற்சாலை இப்பொழுது எடுத்துக் கொண்டுள்ளது.

மிக அதிக பத்திரமான பயணத்தை அளிக்கும் வகையைச் சார்ந்துள்ளது இத்தொழிலகத்தில் தயாராகும் இணைப்பு ரயில் பெட்டிகள்.

உதாரணமாக, இரண்டாம் வகுப்பு இருக்கைகளின் அகலம் அதிகரிக்கப்பட இருக்கின்றது. ஒதுங்குமிடங்கள் அளவில் பெரியதாகவும், அதிக வசதிகள் உள்ளனவாகவும் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ரயில் பெட்டிகளின் அமைப்பிலும் சிறிது மாறுதல்கள் ஏற்பட இருக்கின்றன. பெட்டிக்கான பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட இருக்கின்றது. அதிக ஒளிதரும்மின்விளக்குகள்,



அளவில் பெரியதான மின் விசிறிகள், பாத்ரூமிற்கு வெளியில் வாஷ் பேசின்கள், ஒவ்வொரு பெட்டியிலும் அதிக அளவு தண்ணீர் பிடிக்கும் நிரப்பான்கள் போன்றவை குறிப்பிடக்கூடியவைகளாகும்.

வேகமாகச் செல்லும் போகிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மணிக்கு 130 கி.மீ. வேகம் செல்லும் இந்தியாவின் மிக வேகமான ராஜதானி விரைவு ரயிலுக்கானபெட்டிகள் இத்தொழிற்சாலையில் தயாரானவையே. டீஸல், மின் என்ஜின்களின் வேகத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் பெட்டிகளின் வேக ஓட்டத்தரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மணிக்கு 150 கி.மீ. வேகமாக இயங்கும் போகிகள் தயாரிக்கப்பட இருக்கின்றன.

அயல் நாடுகளுக்கு ரயில் பெட்டிகளும், போகிகளும் ஏற்றுமதி செய்யும் ஒரே தொழிற்சாலை இணைப்புப் பெட்டித் தொழிற்சாலைதான்.

இதன் மூலம் நடுவில் விட்டுப் போன— தமிழகத்தில் புராதன அயல் நாட்டு வாணிபத் தொடர்பு தொடர உதவுவதோடு, வளர்ந்து வரும் நமது பொருளாதாரத் திட்டங்களுக்கு மிகவும் தேவையான அந்நியச் செலாவணியையும் ஈட்ட முடிகின்றது. பர்மா, தாய்லாந்து, தாய்வான், ஜாம்பியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டுள்ளன.

டான்சானியா நாட்டிற்கு 17 ரயில் பெட்டிகள் செய்தளிப்பதற்கான 'ஆர்டர்' இப்பொழுது கிடைத்துள்ளது. 15 மூன்றும் வகுப்பு, 2 இரண்டாம் வகுப்புப் பெட்டிகளுக்கான இந்த ஆர்டரின் மொத்த மதிப்பு சுமார் இரண்டு கோடி ரூபாயாகும். அடுத்த ஆண்டு ஜூன் மாதத்தில்இப்பெட்டிகள் ஏற்றுமதி முடிவடையும்.

# உள்ளத்தில் இல்லை ஊனம்....

அவருக்குக் கண்பார்வையோ இல்லை.

ஒரு காலும் இல்லை.

'பாவம், அவரால் என்ன செய்ய முடியும்?' என்றுதானே நமக்கு எண்ணத் தோன்றும்?

உடலில் ஊனம் இருந்தாலும் உள்ளத்தில் ஊனம் சிறிதுமில்லை அவருக்கு!


சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராக உள்ள திரு. ஜி. ஜெயராமன், எட்டு வயதிலேயே கண்பார்வை இழந்துவிட்டவர். ஒரு காலை இழந்த இவர், செயற்கைக் காலுடன் நடக்கிறார்.


சென்னைப் பல்கலைக் கழகத்தில், எம்.ஏ., பட்டம் வாங்கிய முதலாவது கண்பார்வையற்ற மாணவர் இவர்தான்!

படிப்பில் கெட்டிக்காரராக இருந்த இவர், உதவிச் சம்பளம் பெற்று அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் போய் வந்திருக்கிறார்.

கடந்த ஆண்டு ஸ்டேட் பாங்கு, ஒரு டைப்ரைட்டர், டேப் ரிக்கார்டர், ரேடியோ ஆகியவற்றை வாங்குவதற்கு அவருக்குக் கடன் கொடுத்தது. இப்போது தமது பாடங்களை டேப் ரிக்கார்டரில் பதிவு செய்து கொள்கிறார். இதனால் நேரமும் சிரமும் குறைகிறது.

டைப்ரைட்டர் இருப்பதால் இவர் இப்போது ஏராளமாக எழுதிக் குவிக்கிறார். அவர் வைத்திருக்கும் ரேடியோ எல்லாச் செய்திகளையும் அவருக்குத் தருகிறது.





# வீடு பெற வருக!

‘வீட்டைக் கட்டிப்பார்; கல்யாணத்தை நடத்திப்பார்’ என்பார்கள்.

சென்னை மாநகர் போன்ற வளர்ந்து வரும் நகரங்களில் வீட்டு வசதிப் பிரச்சினை மிகமிக இன்றியமையாத ஒன்றாக இருந்து வருகிறது.

தனக்கென ஒரு வீட்டை அமைத்து நிம்மதியாக வாழ மனிதன் விரும்புகிறான். ‘வீட்டு மனை இருக்கிறது. ஆனால் வீடு கட்ட அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது?’ என்ற ஏக்கப் பெருமூச்சுக்கு இடமில்லாமல் அவனுக்கு வீடு கட்டக் கடன் தந்து கைதூக்கி விடுகிறது, ‘தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்’. இதன் அரிய பணிகளை விளக்கிக் கூறுகிறார் அதன் தலைவர் திரு. பழனிவேல் ராஜன் எம்.எல்.ஏ., அவர்கள்.

**கே: தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் தோற்றம் பற்றிக் கூற வேண்டுகிறேன்.**

ப: தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வீட்டுவசதிச் சங்கங்களுக்குத் தலைமைச் சங்கமாக மாநில அளவில் தற்போது இயங்கிவரும் இச்சங்கம் ‘சென்னைக் கூட்டுறவு மத்திய வீடு அடமான வங்கி’ என்ற பெயரில் 1959-ல் துவக்கப்பட்டது.

இச்சங்கத்தைத் துவக்குவதற்கு முன்னர் தமிழ்நாட்டில் சென்னையில் இரண்டு தலைமைக் கூட்டுறவு வீடு அடமான வங்கிகளும், கோவையில் ஒன்றும், ஈரோட்டில் ஒன்றும், தஞ்சையில் ஒன்றும் ஆக ஐந்து தலைமைக் கூட்டுறவு வீடு அடமான வங்கிகள் பணியாற்றி வந்தன. இந்த வங்கிகள் வீட்டின்பேரில் உள்ள கடன்களைத் தீர்க்கவும், வீட்டை மேம்படுத்தவும் நிதியுதவி புரிந்து வந்தன. அவ்வங்கிகளுக்குத் தேவையான நிதியுதவியை அப்போதிருந்த தென் இந்தியக் கூட்டுறவுக் காப்பீட்டுக் கழகத்திலிருந்து பெற்று வந்தன.

மேற்படி வங்கிகளின் பணியினைப் பாராட்டிய தமிழக அரசு எல்லா நகராட்சிகளிலும் வீடு அடமான வங்கிகள் துவக்கப்பட வேண்டும் என்ற முடிவெடுத்தது. காப்பீட்டு நிறுவனங்கள் தேசிய மயமாக்கப்பட்ட பின்னர் ஏற்கெனவே இயங்கிவந்த வீடு அடமான வங்கிகள், புதியதாகத் துவக்கப்படவிருக்கும் வீடு அடமான வங்கிகள் ஆகியவற்றுக்கு நிதியுதவி புரிய ஒரு மைய அமைப்பு தேவைப்பட்டு, காலம் சென்ற கூட்டுறவாளர் ஈரோடு திரு. ஆர். கே. வெங்கிடசாமி நாயக்கர் மற்றும் தற்போதைய மத்தியச் சங்க நிருவாகக் குழுவினர்களாக உள்ள திரு. பழனியப்ப முதலியார், திரு. வாகீசம் பிள்ளை ஆகியோரின் முயற்சியுடன், மத்தியக் கூட்டுறவு வீடு அடமான வங்கி தோற்றுவிக்கப்பட்டது.

அண்மையில் மறைந்துவிட்ட பெருந்தலைவர் காமராஜ் அவர்கள்தான் இச்சங்கத்தைத் தொடங்கி வைத்தார்கள். வீடு அடமான வங்கிகள் தவிர பல்வேறு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களையும் மையச் சங்கத்துடன் இணைத்துக் கொள்ளும்படித் தமிழக அரசு ஆணை பிறப்பித்ததன் பேரில் மையச் சங்கத்தின் பெயர் ‘தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்’ என மாற்றம் செய்யப்பட்டது.

**கே: இச்சங்கத்தின் நோக்கம் என்ன?**

ப: மையச் சங்கம் அதனுடன் இணைந்த தலைமைச் சங்கங்கள் மூலம் புதிய வீடு கட்டுவதற்கும், வீட்டை விரிவுப்படுத்தவும், வீட்டை மேம்படுத்தவும், வீட்டின் பேரில்



தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத் தலைவர்

திரு பழனிவேல்ராஜன் எம்.எல்.ஏ

அவர்களின் பேட்டி



**திரு. பி. கஸ்தூரிப்பிள்ளை, தலைத்தலைவர்.**

உள்ள முன் அடமானக் கடன்களைத் தீர்க்கவும் நிதியுதவி புரிவதே முக்கியமான நோக்கமாகக் கொண்டுள்ளது. வீடு மேம்படுத்தவும், முன் அடமானக் கடனைத் தீர்க்கவும், வீடு அடமான வங்கிகள் மூலம் நிதியுதவி அளிக்கப்பட்டு வந்த போதிலும் தற்போது புதிய வீடு கட்டுவதற்கான பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

**கே: எத்தனை வீடு கட்டும் சங்கங்கள் உள்ளன? அவை என்னென்ன? அவற்றைப் பற்றி விளக்கந்தர இயலுமா?**

ப: கூட்டுறவு வீடு அடமானச் சங்கங்களைத் தவிர, கட்டடச் சங்கங்கள், வீடுகட்டும் சங்கங்கள், வீட்டமைப்புச் சங்கங்கள், கிராமீய வீட்டுவசதிச் சங்கங்கள், தொழிலாளர் வீட்டு வசதிச் சங்கங்கள், வீட்டு மனைச் சங்கங்கள் ஆகிய சங்கங்கள் உள்ளன. அவற்றில் வீட்டுமனைச் சங்கங்கள் தவிர மற்ற சங்கங்கள் மையச் சங்கத்தில் இணைந்து கடன்பெற முடியும். கட்டடச் சங்கங்கள் அதன் உறுப்பினர்களுக்குப் புதிய வீடு கட்ட நிதியுதவி புரிந்து வருகின்றன. வீடு கட்டும் சங்கங்களில் சிலவும், வீட்டமைப்புச் சங்கங்களும் அங்கத்தினர்களுக்காக வீடு கட்டித்தரும் பணியில் ஈடுபடுகின்றன. தொழிலாளர் வீட்டு வசதிச் சங்கங்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதியைச் செய்து தருகிறது. அண்மைக்காலம் வரை அவைகளுக்கு அரசு மான்யமும், தொழிற்சாலைகளின் நிருவாகத்தினர்கள் உதவியும் கூட கிடைத்து வந்தன. மையச் சங்கத்துடன் இதுவரை இணைந்துள்ள பல்வேறு வீட்டு வசதிச் சங்கங்கள் 202-ம், கிராமீய வீட்டு வசதிச் சங்கங்கள் 124-ம் ஆகும்.

**கே: வீடு கட்டும் சங்கங்களுக்குத் தமிழ்நாடு அரசு நிதி உதவி ஏதேனும் தருகின்றதா?**

ப: வீடுகட்டும் சங்கங்களுக்கு அரசு நிதியுதவி உண்டா என்று கேட்டால், 1972 வரை மேற்படி சங்கங்களுக்கு அரசு நிதியுதவி புரிந்து வந்தது என்று சொல்லலாம்.

மையச் சங்கத்திற்கு நிதியுதவி பற்றிக் குறிப்பிடும் போது, தமிழக அரசு இச்சங்கத்தில் ரூ. 85 இலட்சம் ரூபாய்க்குப் பங்குகள் எடுத்துள்ளது பற்றிக் குறிப்பிட வேண்டும். இச்சங்கத்துக்குத் தேவையான பெரும்பான்மையான நிதியை ஆயுள் காப்புறுதிக் கழகத்திலிருந்து இச்சங்கம் பெற்று வருகிறது. அப்படி ஆயுள் காப்புறுதிக் கழகத்திலிருந்து பெறும் ஒவ்வொரு கடனுக்கும் தமிழக அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. தமிழக அரசின் உத்தரவாதத்தின் பேரில் ஆயுள் காப்புறுதிக் கழகம் இதுவரை அனுமதித்துள்ள கடன் 24.92 கோடி ரூபாயாகும்.

அதைத்தவிர மையச் சங்கம் பெறும் தவணை வைப்புத் தொகைகளுக்கு (Fixed Deposits) ஒரு கோடி ரூபாய் தமிழக அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

**கே: 'வீடு அடமான வங்கிகள்'—இவை பற்றிச் சற்று விளக்கம் தரவும்.**

ப: முன்னரே குறிப்பிட்டது போல 'வீடு அடமான வங்கிகள்' வீட்டின்பேரில் உள்ள முன் அடமானக் கடன்களைத் தீர்க்கவும், வீடு பழுது பார்த்தல், மேம்பாடு செய்தல், விரிவாக்கல் ஆகிய பணிகளுக்கு நீண்ட காலக் கடன் கொடுத்து வந்தன. தற்போது மேற்படி பணிகளுக்கு நிதியுதவியைக் குறைத்துப் பெருமளவில் புதிய வீடு கட்ட மட்டுமே கடன்கள் வழங்கப்படுகின்றன.

மையச் சங்கத்துடன் இதுவரை இணைந்துள்ள வீடு அடமானச் சங்கங்கள் 121 ஆகும்.

**கே: தனி நபருக்கு உச்ச அளவு கடன் எவ்வளவு தரப்படுகிறது?**

ப: தனிநபர் ஒருவருக்கு 15 ஆண்டுகளில் மாதாந்தரத் தவணைகளில் திருப்பிச் செலுத்தும் கடனை அதிக அளவு ரூ. 30,000 தரப்படுகிறது. கிராமீய வீட்டு வசதிச் சங்கமாக இருந்தால், தனிநபருக்கு ரூ. 10,000 வரை அரையாண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்துமாறு கடன் அனுமதிக்கப்படுகிறது.

**கே: சங்கத்தில் உறுப்பினராகச் சேருவது எப்படி?**

ப: மையச் சங்கத்தைப் பொறுத்தவரை அதன் உறுப்பினர்கள் தலைமை வீடு அடமானச் சங்கங்கள், மற்றும் பல்வேறு வீட்டு வசதிச் சங்கங்கள் அல்லது தவணை வைப்புத் தொகை முதலீடு செய்பவர்களே அதன் அங்கத்தினராக முடியும்.

தலைமைச் சங்கம் 8.000 ரூபாய் செலுத்தி மையச் சங்க அங்கத்தினராகலாம். தலைமைச் சங்கம் மையச் சங்கத்திற்குச் செலுத்தியுள்ள பங்குத் தொகையின் பேரில் 12 மடங்கு வரை கடன் பெற முடியும். கடன் பெற விரும்புகின்ற அங்கத்தினர் தலைமைச் சங்கத்தில்தான் அங்கத்தினராக முடியும். அதற்கு அந்த உறுப்பினருக்குச் சங்க விவகார எல்லைக்குள் ஒரு வீடு அல்லது வீட்டு மனை சொந்தமானதாக இருக்க வேண்டும். அவர் வீடு கட்ட கடனுக்கு விண்ணப்பித்தால் அங்கத்தினராகலாம்.

கடன் அனுமதிக்கப்பட்ட அங்கத்தினர், தான் பெறும் கடனுக்குப் பத்தில் ஒரு பாகத்தைப் பங்குத் தொகையாகச் செலுத்த வேண்டும். அனுமதிக்கப்பட்ட கடன் நான்கு தவணைகளில் அங்கத்தினருக்கு வழங்கப்படுகிறது. அதாவது முதல் தவணை 30 சதவீதத்தை வீட்டு வேலையைத் துவக்கவும், அடிக்கல் முடிந்தவுடன் இரண்டாவது தவணை 30 சதவீதத்தையும், சன்னல் மட்டம் வந்தவுடன் 35 சதவீதத்தையும், கட்டடம் முழுவதும் முடிந்த பின்பு மீதமுள்ள 5 சதவீதத்தையும் பெறலாம்.

**கே: வீட்டு வசதி வாரிய மனைகளுக்காகச் சங்கம் கடன் வழங்குகிறதா?**

ப: சாதாரணமாக அங்கத்தினர் தன்னுடைய வீட்டு மனைக்கான எல்லா உரிமைப் பத்திரங்களையும் தந்துதான்

சமுதாயத்தில் மலிந்துள்ள ஏற்றத்தாழ்வினை ஒழுங்குப்படுத்தும் பணியே கூட்டுறவு இயக்கத்தின் தலையாயக் கொள்கையாகும். ஏழை விவசாயிகளின் துயரங்களைத் துடைப்பதற்காக இவ்வியக்கம் இந்தியாவில் 1904-ஆம் ஆண்டு தோன்றிற்று. அதன்பின் இவ்வியக்கம் பல கிளைகளாகப் பிரிந்து மனிதனின் தேவைகளை நிறைவேற்றி வருவதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பாடுபட்டு வருகிறது.

இப்பணியில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அரசு தனது முழுப்பங்கையும் ஏற்றுக் கொண்டுள்ளது. வீட்டு வசதியைப் பெருக்கிடத் தமிழக அரசு வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம், அரிசன வீட்டு வசதிக் கழகம், கிராமப்புற வீட்டு வசதிக் குழு ஆகியவற்றை உருவாக்கி சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது. அவை செயல்படும் சிறப்பிற்குத் துணையாகக் கூட்டுறவுத் துறை மூலம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் வீட்டுவசதி சம்பந்தமான தன் பணிகளைச் செவ்வனே ஆற்றி வருவதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

கடன் பெற முடியும். இருப்பினும் வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கப்பட்ட மனைகளைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்டவர்களுக்குக் கிரயப் பத்திரம் உடன் பதிந்து கொடுக்கப்படுவதில்லை. அதற்கு ஐந்து ஆண்டுகளாவது ஆகிறது. எனினும் மனைக்காக நிர்ணயிக்கப்பட்ட உத்தேச கிரயத் தொகை முழுவதையும் (Full Tentative cost of site) ஒருவர் செலுத்தியிருந்தால் அவர் தலைமைச் சங்கம் மூலமாகக் கடன் பெற முடியும்.

வீட்டு வசதி வாரியமே வீடு கட்டித் தரும் சமயத்தில், முன் பணத்தைத் தலைமைச் சங்கம் கடனாக வழங்குவதற்கு இல்லை. முன்னரே குறிப்பிட்டதுபோல் உத்தேசக் கிரயத் தொகை முழுவதையும் மனைக்காகச் செலுத்தியிருந்தால் தலைமைச் சங்கம் வீடுகட்ட கடன் வழங்க இயலும்.

**கே: இதுவரை எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன?**

ப: சங்க ஆரம்ப முதல் அதாவது 1959-ஆம் ஆண்டு முதல் 1975 மார்ச்சு 31-ந் தேதி முடிய சுமார் 10,401 புதிய குடியிருப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் 14,021 வீடுகள் கட்ட கடன் அனுமதிக்கப்பட்டு கட்டட வேலை நடைபெற்று வருகின்றன.

**கே: கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

ப: மையச் சங்கம் தலைமைச் சங்கங்கள் மூலமாக இதுவரை அனுமதித்துள்ள கடன் 42.48 கோடி ரூபாயாகும். அதில் பட்டுவாடா செய்யப்பட்ட கடன் 31.39 கோடி ரூபாயாகும். தமிழ்நாடு முழுவதும் நடுத்தர, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு வசதியைப் பெருக்க வேண்டுமானால் ஆண்டொன்றுக்கு 25 கோடி ரூபாய் தேவைப்படும். ஆனால் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்குக் கடன் வசதி கிடைக்காததால் ஜுலை மாதம் முதல் கடன் மனுக்கள் பெறுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனினும் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து இந்த நிதியாண்டிற்குள் மேலும் 12 கோடி ரூபாய் கடன் பெற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

கிராமிய வீட்டு வசதியைப் பெருக்கும் நோக்கத்துடன், கிராமிய வீட்டு வசதிக் குழுவின் (Rural Housing Cell) நடவடிக்கைகளை மையச் சங்கத்துடன் இணைத்து முதல் கட்டமாக 50 வட்டங்களில் புதிய சங்கங்கள் ஆரம்பிக்கும் ஒரு கருத்தும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

கட்டடம் கட்டுவதற்குத் தேவையான செங்கற்கள் அங்கத்தினர்களுக்குச் சுலபமாகக் கிடைக்கும் வகையில், மாநிலத்தில் சில இடங்களில் செங்கல் சூளைகள் ஆரம்பிக்கவும் தமிழக அரசின் அனுமதியை மையச் சங்கம் கோரியுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், வீட்டு வசதிப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் வகையில் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது.

குருவிக்குக்கூட ஒரு கூடு இருக்கிறது. ஆனால், மனிதன் தனக்கென ஒரு வீட்டை அமைத்துக் கொள்ள அவனுக்குக் கைகொடுத்து உதவுகிறது இந்தச் சங்கம்.

அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளில், வீட்டு வசதிப் பிரச்சினை தலைதூக்கி நிற்பதை நாம் பார்க்கிறோம். இதற்கு இந்தச் சங்கம் இனிய நண்பனாக இருந்து ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடுகிறது என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**பேட்டி: பி.வி.ஜி.**




**தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கக் கட்டடம்**





# பாப்பா எழுந்திரு

கவிஞர் ஈரோடு தமிழன்பன்

பாடசாலை போக வேண்டும்!
பாப்பா எழுந்திரு! — செல்வப்
பாப்பா எழுந்திரு! — அன்புப்
பாப்பா எழுந்திரு! — அழகுப்
பையை நீயும் கையில் தூக்கிப்
பார்த்து நடந்திடு!

கேடு நீக்கும் கல்வி கற்கச்
சிந்தை யில்லையா! — கண்ணே!
சிந்தை யில்லையா! — பொன்னே!
சிந்தை யில்லையா — நீ
கெட்டிக்காரன் ஆக வேண்டும்
விருப்பம் இல்லையா!

அறிவைப் பெருக்கும் நூல்கள் யாவும்
அறிய வேண்டுமே! — மணியே!
அறிய வேண்டுமே! — கனியே!
அறிய வேண்டுமே! — அறிந்து
அளவில்லாத நன்மை பெற்று
வாழ வேண்டுமே!

நெறியில் வாழ்வைச் செலுத்தும் கலைகள்
நினக்கு வேண்டாமா! — நிலவே
நினக்கு வேண்டாமா! — மலரே!
நினக்கு வேண்டாமா! — பெற்று
நீயும் கலைஞன் ஆக வேண்டும்
நினைப்பு வேண்டாமா!

கல்வி கற்றால் கவலை யில்லை!
கருத மாட்டாயா! — அமுதே!
கருத மாட்டாயா! — தேனே!
கருத மாட்டாயா! — கருதிக்
கற்று நாட்டை உயர்த்த நெஞ்சில்
கருத்துக் கொள்ளாயா!

கல்விக் கூடம் கனியின் தோட்டம்!
கனிகள் வேண்டாமா! — நல்ல
கனிகள் வேண்டாமா! — இன்பக்
கனிகள் வேண்டாமா! — உன்
கையை வீசி நடக்க நீயும்
முந்த வேண்டாமா!

எங்கள் அங்கத்தினர்களுக்கும், வாடிக்கையன்பர்களுக்கும்
" சிந்தாமணியின் " நல் வாழ்த்துக்கள் !

தரமான சரக்கு ! சரியான எடை !! குறைந்த விலை!!!

உங்கள் குடும்பத் தேவைகளனைத்தும் ஒரே இடத்தில் பெற நம்பிக்கையான இடம்

# சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பு அங்காடி

## திருச்சிராப்பள்ளி

தலைமையகம் : புத்தூர். கிளைகள் : தெப்பக்குளம், பெ.்ல் (கைலாசபுரம்).
தொலை பேசி : 3311, 3355 தொலை பேசி : 5519 280

உங்கள் தேவைக்கு எங்கள் சேவை நிலையங்கள்

- தையல் நிலையம்
- கடிகாரம் பழுது பார்க்கும் நிலையம்
- ரேடியோ மற்றும் மின்சாதனம் பழுதுபார்க்கும் நிலையம்
- ஆயுர்வேத மருந்து விற்பனை மற்றும் இலவச ஆலோசனை நிலையம்

அழைக்கின்றோம் அன்பாக ! அளிக்கின்றோம் தரமாக !!

வணிகத்தைப் பெருக்கிடுவோம் ! கூட்டுறவை வளர்த்திடுவோம் !!

எங்கள் உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

# திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிட்.,

ஆர். 683

(ஹோலிகிராஸ் காலேஜ் சமீபம்), திருச்சிராப்பள்ளி-620 002.

உங்கள் கண்ணோட்டத்திற்கு :

| | | | |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் : | 7.60 | மொத்த உறுப்பினர் : | 16,600 |
| மொத்தக் கிளைகள் : | 11 | 74-75-ம் ஆண்டு விற்பனை : | 3 கோடி |

சங்கத்தின் சிறப்பான அங்கங்கள் :

அமராவதி கூட்டுறவுச் சிறப்பு அங்காடி — கரூர்
அமராவதி கூட்டுறவுச் சிறப்புச் சிற்றங்காடி — மணப்பாறை
அமராவதி கூட்டுறவுப் பண்டகசாலை — திருச்சி
அமராவதி கைலாசபுரம் ஷாப்பிங் சென்டர் 'ஏ'
அமராவதி கைலாசபுரம் ஷாப்பிங் சென்டர் 'பி'
அமராவதி ராம்ஜி நகர் (பஞ்சுமில்)
அமராவதி கலைஞர் கருணாநிதி நகர்
அமராவதி புலியூர் கிளை (கரூர்) செட்டிநாடு சிமெண்ட் தொழிற்சாலை

சிறந்த அச்சு வேலைகளுக்கு : "ராக்—கோ—அச்சகம்"
திருச்சிராப்பள்ளி.

"மக்கள் சேவையே எங்களின் மகத்தான பணி"

ச. சுந்தரம்,
செயலாளர்.

பி. பி. கே. ராஜாசிதம்பரம்,
தலைவர்.

சிறுவர் அரங்கம்

# நீலத் திரைக் கடல் ஆழத்திலே....!



'கிரிஜா'

## (1) கடல் எப்படித் தோன்றியது?

"அண்ணா, அண்ணா! அந்தக் கடலைப் பார்த்தீர்களா? எவ்வளவு அழகாய் இருக்கிறது"

"கடல் மட்டுமா அழகாய் இருக்கிறது? அதோ! அந்தக் கடல் அலைகூடத்தான் அழகாய் இருக்கிறது. இயற்கையின் படைப்பிலேஎல்லாமே அழகாகத் தான் இருக்கும். வண்ண வண்ண மலர்களும், வகை வகையான மரஞ்செடி கொடிகளும், மலைகளும், வானும் நிலவும் எவ்வளவு அழகாய் இருக்கின்றன"

"ஆமாம் அண்ணா!. பௌர்ணமி நிலவு வெளிச்சத்திலே இந்தப் பரந்தக் கடலைப் பாருங்களேன். பாற்கடலாய்க் காட்சியளிக்கிறது!"

அலை கடலோரம்!

அண்ணனும், தங்கையும் பேசிக் கொண்டிருக்கின்றனர். காற்று வாங்கக் கடற்கரைக்கு வந்தவர்கள் சிற்றுண்டி உண்பதும், சிரித்து மகிழ்வதுமாக இருக்கின்றனர். சிறுவர் சிறுமிகள் மணலில் வீடுகட்டி ஆடிப்பாடுகின்றனர். சிலர் கடல் நீர் காலை நனைக்கும்படி நின்று மகிழ்கின்றனர். வேர்க்கடலை, பட்டாணி சுண்டல், ஐஸ் போன்ற பல்வேறு குரல்கள் ஏககாலத்தில் ஒலிக்கின்றன. அழகிய பொம்மைகள், பிளாஸ்டிக் சாமான்கள் போன்ற கடைகளுக்கும் அங்கே குறைச்சலில்லை.

ஆனந்தி வைத்த கண் வாங்காமல் அலை கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள். உயர்நிலைப் பள்ளி மாணவியான ஆனந்திக்குக் கதைகள் என்ருல் உயிர்; அதுவும் உண்மைக் கதை என்ருல் நேரம் போவதுகூடத் தெரியாமல் கேட்டுக் கொண்டிருப்பாள்.

ஆனந்தியின் அண்ணன் இரத்தினம் ஒரு பள்ளி ஆசிரியர். ஒரே தங்கையான அவளைக் கடற்கரை, கண்காட்சி, அரும்பொருட் காட்சி, விலங்குக் காட்சிச்சாலை, சுற்றுலா இப்படி எல்லா முக்கிய இடங்களுக்கும் தன்னுடன் அழைத்துப் போகத் தவற மாட்டார்.

வழக்கம்போல அன்றைக்கும் ஆனந்தியைக் கடற்கரைக்கு அழைத்து வந்திருந்தார் ரத்தினம். ஆனந்தி கண் கொட்டாமல் கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள். இன்றைக்கும் ஏதாவது கேள்விகள் கேட்டு 'அது என்ன ? இது எப்படி?' என்று திணற வைக்கப் போகிருளோ? என்று இரத்தினம் நினைப்பதற்கும் ஆனந்தி கேள்வி கேட்பதற்கும் சரியாக இருந்தது—

"அண்ணா! இந்தக் கடல் எப்படித் தோன்றியது?"

சிந்தனையிலிருந்து விடுபட்ட அவள் அண்ணன், "ஓ, அதுவா? சொல்கிறேன் ஆனந்தி" என்று அவள் கேள்விக்கு விடை கூற ஆரம்பித்தார்.

"விந்தை உலகமான இந்தக் கடல் தோன்றியதை மனிதன் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே! ஏனென்ருல் அவன் தோன்றுவதற்கு முன்பேயே இந்தக் கடல் தோன்றிவிட்டது!

"சூரியனைப் போல இந்தப்பூமி ஒரு காலத்தில் நெருப்பாக இருந்தது. அப்போது அதனை, நீரெல்லாம் நீராவியாகச் சுற்றிக்கொண்டிருந்தது. காலப் போக்கில் நீராவி குளிர்ந்தது. அதன் விளைவு? மேகம் திரண்டன. இடி, மின்னல், காற்று, பெருமழை! இப்படிப் பல ஆண்டுகள் அடாது மழை பெய்தது. அனற்பிழம்பான பூமியின் மேற்புறம் குளிர்ந்து இறுகியது. பூமியில் பள்ளங்கள் உள்ள இடங்களிலெல்லாம் நீர் நிறைந்தது. அவையே கடலாகப் பெருங் கடலாக மாறின. இப்படித்தான் கடல் தோன்றியது!"

"அப்படியா? கேட்கவே விந்தையாக இருக்கிறதே"

"விந்தைதான் ஆனந்தி. இந்த உலகமே ஒரு விந்தைதானே! இதிலே உள்ள ஒவ்வொரு உயிரும் ஒரு விந்தைதான். அவ்வளவு ஏன், இந்தக் கடலுக்குள்ளே வாழ்கிற அத்தனை உயிர்களும் விந்தைதான். அது மட்டுமா? கடலுக்கடியில் மலைத்தொடர்கள்,

பள்ளத்தாக்குகள், எண்ணெய் ஊற்றுகள், எரிமலைகள் ஆகியவையும் உள்ளன. ஆனந்தி! இவற்றைப் பற்றியெல்லாம் பிறகு சொல்கிறேன். ஆமாம், கண்டம் என்றால் என்ன? இதற்குப் பதில் சொல் பார்க்கலாம்?''

''கண்டம்தானே? இதைப் பற்றித்தான் என்னுடைய பாடப் புத்தகத்தில் நிறையப் படித்திருக்கிறேனே! பூமியின் மேற்பரப்பில் துண்டிக்கப் படாத பெரிய நிலத் தொகுதிக்குத்தான் கண்டம் என்று பெயர். இதன் எல்லாப் பக்கங்களிலோ அல்லது ஒரு சில பக்கங்களிலோ கடல் சூழ்ந்திருக்கும்...'' என்று ஆனந்தி சொல்லி முடிப்பதற்குள் இரத்தினம், ''ஏதேது பாடத்தை அப்படியே ஒப்புவிக்கிறே போலிருக்கே!'' என்றான் சிரித்துக்கொண்டே.

''அண்ணா! நான் இன்னும் முடிக்கலியே! ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவை எல்லாம் கண்டங்களாகும்.''

''ரொம்பச் சரி. நீ படித்ததை நன்றாக நினைவு வைத்திருக்கிறாய் ஆனந்தி! இந்தக் கண்டத்துக்குக் 'கண்டம்' வந்துவிட்டால் ஆபத்துத்தான்....''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் அண்ணா?''

''இந்தக் கண்டங்கள் இருக்கின்றனவே இவை மழையினாலும், காற்றினாலும் பாதிக்கப்படுவதுண்டு. அப்போது மண் முதலானவை கரைகின்றன. கரைந்தவை ஆற்றினால் அடித்துச் செல்லப்பட்டுக் கடலில் கலக்கின்றன. கடலில் இவை படிவதால் கடலின் படுகை மீண்டும் உறுதி பெற்றுக்கீழே அழுந்துகிறது. கண்டம் மேலே எழுகிறது. இப்படிக் கடல்படுகை அழுந்துவதும், அதன் விளைவாகக் கண்டம்மேலே எழுவதுமாக இருக்கும்.''

''அடிக்கடி இதுபோல் நடந்து கொண்டே இருக்குமா அண்ணா?''

''ஆமாம், ஆனந்தி. முன்பு தென் அமெரிக்காவும், அன்டார்க்டிகாவும், ஆஸ்திரேலியாவும் ஒரே கண்டமாகத்தான் இருந்தன. பண்டைக் காலத்திலிருந்த குமரிக்கண்டத்தைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய். நம் நாட்டின் தெற்கில் இருந்த இது கடலில் மூழ்கி மறைந்துவிட்டது. இதன் மீச்சம் மீதிதான் இன்றைய இலங்கை!''

''அப்படியா?''

''ஆமாம், ஆனந்தி! இதே போல் வட இந்தியாவில் முன்பு கடலாக இருந்த பாகம் மேலே எழுந்ததன் விளைவுதான், இமய மலையும், வட இந்தியச் சமவெளியும் என்றால் விந்தையாக இல்லையா?''

''இயற்கையின் விந்தையே விந்தை!'' என்ற ஆனந்தி, எதிரே ஆள் உயரம் அலை எழும்புவதைப் பார்த்து, ''அண்ணா! அண்ணா! அதோ அலை எவ்வளவு உயரம் எழும்புகிறது பாருங்களேன்....'' என்றாள்.

''இன்று அலை சற்று அதிகமாகத்தான் இருக்கும் ஆனந்தி!''

''ஏன் அண்ணா?''

''நிலவு இருக்கிறதல்லவா?''

''நிலவுக்கும் அலைக்கும் என்ன சம்பந்தம் அண்ணா?''

''இருக்கிறது ஆனந்தி. முதலில் அலை எப்படி உண்டாகிறது என்பதைச் சொல்கிறேன். கடல் அலைக்குக் காற்றுத்தான் முக்கியக் காரணம். காற்றானது அதன்மீது வீசுவதால் அலைகள் தோன்றுகின்றன. பூமிக்குப் புவி ஈர்ப்புச்சக்தி இருப்பது போல, சூரியனுக்கும் நிலவுக்கும்கூட ஈர்ப்புச் சக்தி இருக்கின்றது; அதுதான் கடல் நீரை மேலே இழுக்கும் சக்தி. நிலவு, பூமிக்கு அருகில் இருப்பதால் சூரியனைவிட அதன் ஈர்ப்புச் சக்தி அதிகமாகின்றது. இன்று பௌர்ணமி அல்லவா? அதாவது முழு நிலவின்போது கடல் அலைகள் சற்று சீறிப்பாயும்...'' என்று இரத்தினம் சொல்லிக் கொண்டிருந்தார். கடல் அலைகளின் இரைச்சல் காதைத் துளைத்துக் கொண்டிருந்தது.


''அது சரி அண்ணா! கடல் நீர் மட்டும் ஏன் நீலமாய் இருக்கிறது?''

''இதற்குச் சூரியன்தான் காரணம்''

''சூரியனின் ஒளி வெண்மையாகத்தானே இருக்கிறது?''

''ஆமாம். அந்த ஒளியை ஒரு முப்பட்டைக் கண்ணாடிக்குள் ஊடுருவ விட்டால் ஏழு நிறங்களை நாம் காணலாம்.''

''வானவில்லைப் போலத்தானே?''



''ஆமாம், ஆனந்தி! சூரிய ஒளியில் இந்த ஏழு வண்ணங்களும் ஒளிந்து கொண்டிருக்கின்றன. சூரிய ஒளி கடலினுள் நுழைந்ததும் சிவப்பு, மஞ்சள் மற்ற வண்ணங்கள் மறைந்து விடுகின்றன. ஆனால் பச்சை, நீல நிறத்தை மட்டும் கடல் நீர் வெளிவிடுகிறது. இதனால் கடல் நீர் நீல நிறமாய்க் காட்சியளிக்கிறது.''

அண்ணனும் தங்கையும் அறிவியலில் மூழ்கிக் கொண்டிருந்த போது ஒருவன் 'மாங்காய் தேங்காய் பட்டாணி சுண்டல்!' என்று கூவிக் கொண்டே வந்து அவர்கள் சிந்தனையைக் கலைத்தான். இரத்தினம் அவனை அழைத்து இரண்டு பொட்டலம் சுண்டல் வாங்கிக் கொண்டார். இருவரும் அதைச் சுவைக்க ஆரம்பித்தனர்.

''ஐயோ! ஒரே உப்பு.....'' ஆனந்தி விழுங்க முடியாமல் கீழே காரித் துப்பினாள்.

உடனே இரத்தினம், ''உப்பில்லாப் பண்டம்தான் குப்பையிலே என்பார்கள். சுண்டலில்தான் உப்பு இருக்கிறதே...'' என்றார்.

''என்ன அண்ணே, கிண்டலா? அளவுக்கு மிஞ்சினா அமிர்தமும் நஞ்சுண்ணு சொல்வாங்களே அது உங்களுக்குத் தெரியாதா என்ன? இந்தச் சுண்டலிலே தாராளமாக உப்பை அள்ளிப் போட்டிருக்கிறாரே, அதை எப்படித்தான் தின்னுவது?''

''உண்மைதான் ஆனந்தி, உப்பு என்றதும், இந்த உப்பை உலகுக்கு வழங்கி வருகிற கடலை நாம் உள்ளளவும் நினைக்கணும். உப்பிட்டவரை உள்ளளவும் நினைன்னு சும்மாவா சொன்னாங்க பெரியவங்க?..''

''ஆமா, இந்த உப்பு, கடல் நீரிலே மட்டும் எப்படிக் கலந்

திருக்கிறது? ஆற்றிலோ ஏரியிலோ அல்லது குளம் குட்டைகளிலோ உள்ள நீரில் உப்பு இல்லையே!'' என்றாள் கையால் மண்ணைத் துழாவியபடியே ஆனந்தி.

''அப்படிக் கேள் ஆனந்தி!'' என்ற இரத்தினம், சற்றுத் தொலைவில் சோடா விற்றுக் கொண்டிருந்தவனைக் கூப்பிட்டார்.

''என்ன? தாகமா அண்ணா? நமக்கு எதிரே இவ்வளவு தண்ணீர் இருந்தும் தாகம் தீரக் குடிக்க முடியலே பார்த்தீங்களா?'' என்றாள் சிரித்துக் கொண்டே ஆனந்தி.

இரத்தினம் சோடாவை வாங்கிக் குடித்துவிட்டுச் சொல்வதற்கு அறிகுறியாகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''ஒரு சில ஆறு, ஏரிகளிலும் கூட உப்பு இருக்கத்தான் செய்கின்றது. ஆறு, ஏரி, குளங்கள் போன்ற நீர்நிலைகளுக்குக் காரணம் மழையே அல்லவா? இந்த மழைநீர் ஆறாகவும், ஏரியாகவும் உருவாகிக் கடைசியில் கடலில் வந்து கலக்கின்றனவல்லவா? அவ்வாறு இவை ஓடிவரும்போது மண்ணிலும், பாறைகளிலும் உள்ள உப்புக்களைக் கரைத்துக் கொண்டு வருகின்றது. இந்நிகழ்ச்சி அவ்வப்போது நடைபெறுவதால் காலப்போக்கில் உப்பின் அளவு கடலில் ஏறிக்கொண்டே போகிறது. இவையன்றிக் கடல் நீரானது எப்பொழுதும் ஆவியாகிக் கொண்டே இருக்கின்றது. கடல் நீர் ஆவியாக மாறும் போது அதில் கலந்துள்ள உப்பு மட்டும் ஆவியாவதில்லை. ஆகவே, உப்பு அப்படியே கடலில் தங்கி விடுகிறது. இதனால்தான் கடல் நீர் உவர்ப்பாக இருக்கிறது.''

''ஆறுகளிலும், குளங்களிலும், ஏரிகளிலும் உப்பு இருக்கின்றது என்று சொன்னீர்களே. அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?''

''அண்மையில் சோவியத் நாட்டில் இதுவரை கண்டுபிடிக்கப் படாத ஆறு, ஏரிகளை விஞ்ஞானிகள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். அவை மனிதன் செல்ல முடியாத மலை முகடுகளில் அதாவது கடல் மட்டத்திலிருந்து 2000 மீட்டர்கள் உயரத்தில் உள்ளனவாம்......''

''இந்த ஏரியில் உப்பு இருக்கிறதா, அண்ணா?''

''ஆமாம். இந்த ஏரிகளில் உள்ள நீரில் பலதரப்பட்ட உப்புகளின் கலப்பு அதிகமாக உள்ளது. ஒரு லிட்டர் நீரில் 235 கிராம் உப்பு கலந்துள்ளதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஏரிகள் பனியால் மூடப்பட்டு இருப்பினும் தண்ணீரின் வெப்ப நிலை 40 டிகிரி சென்டி கிரேடாக உள்ளது. உப்பு அதிகமாக உள்ள இந்தப் பூரிதக் கரைசல் எப்படி வெப்பமாக இருக்கிறது தெரியுமா?''

''ம்..சொல்லுங்கள்..''

''இந்த ஏரிகள் ஒரு பெரிய நில வெடிப்பின் அருகில் உள்ளன. பூமிக்கடியில் இருக்கும் வெப்பம் இந்த வெடிப்பு மூலம் ஏரிகளுக்குச் செல்லலாம். தவிர நீரில் கரைந்துள்ள உப்புக்களின் காரணமாகச் சூரிய சக்தியை ஈர்த்துத் தேக்கி வைத்துக் கொள்ளும் தன்மையையும் அவை பெற்றுள்ளன. இதேபோன்று, அமெரிக்காவிலுள்ள ஏரியிலும் உப்பு அதிகமாக இருக்கிறது.''

''அப்படியா அண்ணா?''

''ஆமாம் ஆனந்தி. நல்ல நீரில் இருப்பதைவிட கடல் நீரில் சுமார் 200 மடங்கு உப்புப் பொருள்கள் கரைந்திருக்கின்றன. இந்தப் பொருள்களின் அளவு 3.5 சதவிகிதம். இந்தப் பரந்த கடலில் சுமார் 10 இலட்சம் கோடி டன் எடையுள்ள உப்பு இருக்கின்றதாம். கடல் நீரில் கரைந்துள்ள உப்பில் 88.5 சதவிகிதம் சோடியம், மக்னீசியம் குளோரைடுகளும் மீதியாக மக்னீசிய, கால்சிய, பொட்டாசிய சல்பேட்டுகளும் உள்ளன.

''நாம் உட்கொள்ளும் சாதாரண உப்பை சோடியம் குளோரைடு என்கிறோம். அதாவது உப்பைப் பிரிக்கும்போது சோடியமும் குளோரினும் நமக்குக் கிடைக்கின்றன. சோடியத்திலிருந்து சோடியம் ஹைட்ராக்சைடு என்ற காரப் பொருள் தயாரிக்கப்படுகிறது....''

''இந்தப் பொருள்களால் நமக்கு என்ன நன்மை?'' என்று ஆனந்தி கேட்டுக் கொண்டிருக்கும்போது, ஒரு சிறு நண்டு ஆனந்தியின் காலை உரசிக்கொண்டு விரைந்தது.

''இந்தச் சட்டை எவ்வளவு வெண்மையாக இருக்கிறது பார்த்தாயா?''

''ஆமாம். உப்பைப்போல வெண்மையாக இருக்கிறது.''

''அழுக்குத் துணிகளை இப்படி வெள்ளை வெளேரென்று வெளுப்பதற்கு இந்த ஹைட்ராக்சைடிலிருந்து துணி வெளுக்கும் சோடா தயாரிக்கப்படுகிறது. இவையன்றி ரொட்டிச் சோடா, புகைப்படம் கழுவ உதவும் 'ஹைப்போ' எனும் பொருளும் இதன் மூலம் தயாராகின்றன. குளோரைடிலிருந்து பொட்டாசியம் குளோரேட், பிளீச்சிங் பவுடர். ஹைட்ரோ குளோரிக் அமிலம் முதலியவை தயாரிக்கப்படுகின்றன. இவை மட்டுமா? உன் காதிலே 'ஜம்' மென்று காட்சியளிக்கிறதே பிளாஸ்டிக் கம்மல் அதாவது பிளாஸ்டிக் கூடக் குளோரினில் இருந்தே தயாரிக்கப்படுகின்றது.'

''உணவுப் பொருள்களைப் பல நாட்களுக்குக் கெடாமல் பாதுகாப்பதும் இந்த உப்புத்தான் என்று அம்மா சொல்லக் கேட்டிருக்கிறேனே'' என்று ஆனந்தி சொன்னாள்.

''ஆமாம். அந்த அரிய சக்தி உப்புக்கு இருக்கிறது. உப்பானது உணவுப்பொருளுக்கு மட்டுமின்றி பலவிதமான தொழில்களுக்கும் உற்ற நண்பனாக இருந்து வருகிறது. தோலைப் பதப்படுத்துதல், சோப்பு செய்தல் ஆகியவற்றுக்கும், சாயத் தொழில், கண்ணாடித் தொழில், காகிதத் தொழில், நிலத்திலிருந்து கிடைக்கும் எண்ணெய்யைச் சுத்தமாக்குதல் போன்றவற்றுக்கும் உப்பு இன்றியமையாத பொருளாக இருந்து வருகிறது....''

''அடேயப்பா! உப்பு நம்முடைய சாப்பாட்டுக்கு மட்டும் தான் பயன்பட்டு வருகிறது என்று இத்தனை நாளும் எண்ணியிருந்தேன். இன்றுதான், அது எத்தனைத் தொழில்களுக்கு உதவியாக இருந்து வருகிறது என்று அறிந்து கொண்டேன்.'' என்றாள் ஆனந்தி.

உடனே இரத்தினம், ''இதைச் சொன்னால் நீ நம்புவாயோ; நம்பமாட்டாயோ. நாம் உட்கொள்ளும் சாதாரண உப்பு எரிமலைகளிலிருந்துதான் தோன்றியதாம்!'' என்று சொன்னதும் ஆனந்தி, ''என்ன அண்ணா இது, எரிமலையிலிருந்து நெருப்புதானே கிடைக்கும்? உப்பு எங்கேயாவது கிடைக்குமா?'' என்றாள் கேலியாகச் சிரித்துக்கொண்டே.

—வளரும்.

# தமிழ்நாட்டில் உலோகக் கனிமப் படிவங்களை உண்டாக்கிய ஊழிகள்
# (MINEROGENTIC EPOCHS IN TAMILNADU)

டாக்டர் இரா. இராமசாமி,
தமிழ்நாடு ஞாலவியல் துறை.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் எரிமலைப் பிதுக்கங்களும், பாறைக்குழம்பு ஊடுருவல்களும் நிகழ்ந்துள்ளன. இதனால் உலோகக் கனிமச் செறிவும், உலோகக் கனிமப் படிவங்களும் (**Ore Deposits**) தோன்றியுள்ளன. குறிப்பிட்ட ஊழிக் காலத்தில் குறிப்பிடத் தகுந்த சிலவகைத் தனிமங்களே (**Elements**) செறிந்துள்ளன. ஆகையால் இக்குறிப்பிடத்தகும் தனிமங்களைக் கொண்டு இவ்வூழிகளைப் பெயரிடலாம்.

தனிப் பெரும் தன்மை வாய்ந்த பொன்—வெள்ளிஊழிக் கால இயக்கங்கள்கோலார் பொற் கனிக்களத்திற்கு நேர்தெற்காக உள்ள தர்மபுரி, சேலம், நீலகிரி கோயமுத்தூர் மாவட்டங்களிலும், குரோமிய நிக்கல் ஊழிக் கால இயக்கங்கள் தர்மபுரி, சேலம், கோயமுத்தூர் மாவட்டங்களிலும், பிளாட்டினம் — இரும்பு—தைத்தானிய ஊழி திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும்; தாமிரம், ஈயம், துத்தநாக ஊழி வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும், கரித்தனிம ஊழி மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலும் ; சீரியம், யுரேனியம், தோரியக் கதிரியக்க ஊழி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தர்மபுரி, வடஆர்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுர மாவட்டங்களிலும்; பேரியத் தனிம ஊழி வடஆர்க்காடு, தர்மபுரி மாவட்டங்களிலும் ; வெள்ளீய உல்புர மாலிபிடின ஊழி மதுரை, கோயமுத்தூர் மாவட்டங்களிலும் நிகழ்ந்துள்ளன.

## தமிழ்நாட்டில் உலோகக் கனிமப் படிவங்களை உண்டாக்கிய ஊழிகள்

| எண். | ஊழியக்காலம் | தனிமச்செறிவு | கனிமப் படிவத்தை உண்டாக்கும் பாறைகள் | வயது ஆயிரமாயிர ஆண்டுகள் | புவியமைப்புச் சுழற்சி வட்டம் |
|---|---|---|---|---|---|
| 1. | பொன், வெள்ளி ஊழி | இரும்பு, மங்கனீசு, பொன், வெள்ளி, இட்டிரியம் | அதிபேசிக்குப் பாறைகள், நைசு, சிஸ்டுப் பாறைகள் | 3,000 | தார்வார் |
| 2. | குரோமிய, நிக்கல் ஊழி | குரோமியம், பிளாட்டினம், இரும்பு, தைத்தானியம், நிக்கல், வனடியம், கோபால்ட்டு, ஸ்கான்டியம், இலித்தியம், இண்டியம் | அதிபேசிக்குப் பாறைகள், நைசுப் பாறைகள் | 2,500 | தார்வார் |
| 3. | தாமிர-ஈய துத்தநாக ஊழி | தாமிரம், நிக்கல், பாஸ்பரஸ், ஈயம், துத்தநாகம், காட்மியம், பாதரசம் | பைராக்சினைட்டு, சார்னகைட்டுப் பாறைகள் | 2,000 | கிழக்குத் தொடர்ச்சி மலைகள் |
| 4. | கரிம ஊழி | ஸ்ரான்சியம், கால்சியம், மாங்கனீசு, மக்னீசியம், உல்பரம், ஸ்கான்டியம், கரி, சோடியம். | சயனைட்டு, கிரானைட்டு, காரத்தன்மையுள்ள பாறைகள், சோடா கிரானைட்டுகள் | 1,600 | கிழக்குத் தொடர்ச்சி மலைகள் மலைகள் |
| 5. | கதிரியக்க, சீரிய, தோரிய, ஊழி | சீரியம், நியோபியம், தாந்தாலம், தோரியம், யுரேனியம், சிர்கோனியம், வெள்ளீயம், மாலிபிடினம், பேரியம் | காரத்தன்மையுள்ள பாறைகள், கார்பானடைட்டுகள் | 900 | சாத்பூரா |
| 6. | வெள்ளீய, உல்புர மாலிபிடின ஊழி | வெள்ளீயம், உல்பரம், மாலி பிடினம், பேரியம், பொட்டாசியம் | கிரானைட்டுகள், இலாம்ப்ரேபயர்கள், பொட்டாசியப் பாறைகள் | 600 | இந்தியப் பெருங்கடல் |

மேற்கண்ட அட்டவணை இதுவரை கிடைத்துள்ள கனிமப் படிவுகளின் வயதைக் கதிரியக்க முறையில் கணித்தும் அவற்றின் காலவரை அடுக்கியல் புவி அமைப்புப்புலங்களைக் கொண்டும் (Chrono Stratigraphic Trends) தயாரிக்கப்பட்டுள்ளது.

பாறைகளிலும், கனிமங்களிலும் குறிப்பிட்ட அருகிய தனிமங்களின் (Trace Elemental Concentration) செறிவைக் கொண்டு பாறைகளின் வயதையும் ஊழிக்காலத்தையும் கூறலாம். குறிப்பிட்ட சில தனிமங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பல ஊழிக்காலங்களில் தொடர்ந்து உண்டாகியிருந்தாலும் அவற்றுடன் சார்ந்த பிற தனிமங்களின் உச்ச செறிவைக் கொண்டு ஊழிக் காலத்தின் வயதைக் கண்டுபிடிக்கலாம். இரும்பு, தாமிரம், கால்சியம், மங்கனீசு, அலுமினியம் போன்ற தனிமங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஊழிகளில் செறிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தனிமங்கள் பாறைக்குழம்புப் படிகச் செறிவுடன்மட்டுமல்லாது எஞ்சிய கனிமப் படிவங்களாகவும், பிந்திய நிலைச் செறிவாலுண்டானவையாகவும் இருப்பதால் அவைபல்வேறுஊழிக் காலத்தைக் காட்டுகின்றன. தமிழ் நாட்டில் இரும்புக் கனிமப் படிவுகளும், சுண்ணாம்புப் பாறைப் படிவங்களும் (Crystaline Lime Stone Deposits) இவ்விதமுண்டானவையாகும்.

ஒவ்வொரு ஊழிக்காலத்திலும் குழம்புப் படிகப் பாறைகள் தோன்றுகின்றன. இவற்றில் குரோமியம், நிக்கல், கோபால்ட்டு ஸ்காண்டியம், இட்டிரியம், வனேடியம், இலிதியம், இண்டியம், தாமிரம், ஸ்ரான்சியம், ஈயம் [காரீயம் (Lead)], வெள்ளீயம் (Tin), பேரியம் ஆகிய தனிமங்கள் தொடர்ச்சியாகச் செறிவுறுகின்றன. பல்வேறு வகையான தனிமங்களும் உள்ளடங்கிய சிலிக்கேட்டுக் கனிமங்கள் தொன்மைக் கால ஊழிகளிலும், போரேட்டுகள், ஆர்சனேட்டுகள், பாஸ்பேட்டுகள், சல்பேட்டுகள், கார்பனேட்டுகள் பிற்பட்ட ஊழிகளிலும் காணப்படுகின்றன. உடன் தோன்றும் கனிமங்களின் (Mineral Paragenesis) வயதைக் கண்டுபிடித்தும் ஊழிக் காலத்தைக் கூறலாம். எனவே பாறைகளில் உள்ள உடன்தோன்றும் கனிமங்களையும், கனிம இயலையும் ஆராய வேண்டும்.

தமிழ்நாட்டில் பெரிய அளவில் கனிமப் படிவுகளை இவ்வூழிகள் பல்வேறு புவி அமைப்புச் சுழற்சி வட்டங்களில் (Tectonic Cycles) தோற்றுவித்துள்ளனவா என்பது குறித்து ஆராய்ச்சி நடந்து வருகின்றது. உலோகக் கனிமப் படிவுகளை உண்டாக்கும் ஊழிகள் உலகளாவிய வண்ணத்தில் நிலவியிருந்தமையால் தமிழ் நாட்டில் இவ்வூழிகளின் தடயங்கள் தென்படுகின்றன.


## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

தபால் பை எண். 171 — தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணுபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். — நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.

### வட்டிவிகித அட்டவணை

| | | |
|---|---|---|
| கால் டெபாசிட்டுகள் : | ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | 3¼% |
| | ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | 3½% |
| சீசன் டெபாசிட்டுகள் : | ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் | |
| | 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3% |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | 3½% |

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் 6½%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் 7½%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் 8½%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் 9½%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் 10½%

நடப்புக் கணக்கு ½% — சேமிப்புக் கணக்கு 6%

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

**தி. பாலசுந்தரம், பி.ஏ.,**
துணைப் பதிவாளர்,
நிர்வாக அதிகாரி.

**பி. காசி, பி.எஸ்.சி., எச்.டி.வி.,**
காரியதரிசி.

**எஸ். ஆறுமுகம்,**
தலைவர்.

# நிழல் ௩

## பட்டுக்கோட்டை குமாரவேல்

புதுமணத் தம்பதிகளின் புது வாழ்வு-வாழ்வை வெளியிலுள்ள இளம் உள்ளங்கள் கற்பனை செய்து கொண்டிருந்தன. இன்ப உலகம் எப்படி இருக்கும்? சொர்க்கத்தின் முதல்படிதான் முதல் இரவோ என்று புரியாத உள்ளங்கள் ஏக்கத்தோடு துடித்துக் கொண்டிருந்தன. புதுமணத் தம்பதிகளின் சிரிப்பொலிகள் கேட்டன. சந்திராவின் வளையல்களின் ஒலிக்கு அவள் கால்களில் போட்டிருந்த சலங்கைக் கொலுசின் சப்தம் நாட்டியமாடியது. கால் விரல்களில் போட்டிருந்த மெட்டிகள் தாளம் போட்டன.

இரகசியப் பேச்சும், பெருமூச்சும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் ஒலிகளும் வெளியே இருந்தோருக்குக் கேட்டன. பிறகு கொஞ்ச நேரம் கழித்து எங்கும் அமைதி நிலவியது.

இரவு முடிந்து புதுமணத் தம்பதிகள் எழுந்து வருவார்கள் என்று எதிர்பார்த்தான் மேகநாதனின் சமையல்காரன் சங்கரன். காப்பி கொடுப்பதற்காக வெளியே காத்து நின்றான். இரண்டு மூன்று முறை சாத்தியிருக்கும் கதவுவரை போனான். கதவைத் தட்டாமலே திரும்பி வந்துவிட்டான். காலை மணி எட்டு என்று கடிகாரம் சொல்லிக் கொண்டே ஓடிக்கொண்டிருந்தது. வெளியில் படுத்திருந்த உறவினர்கள் புதுமணத் தம்பதிகளைப் பார்க்கக் காத்து நின்றனர்.

எட்டி எட்டிப் பார்த்து ஏமாற்றம் அடைந்த குமரிப் பெண்கள் கூட இன்னமுமா தூக்கம் என்று அசந்து விட்டனர். மணி ஒன்பதாகி விட்டது. கோவையிலிருந்து சமையற்காரனுக்குப்போன் செய்தார் மேகநாதன்.

''இரவு தாளிடப்பட்ட கதவு இன்னும் திறக்கப்படவில்லை'' சமையல் சங்கரன் பதில் சொன்னான்.

''பொழுது விடிந்து ஒன்பது மணி ஆகியும் இன்னும் கதவு திறக்கவில்லையா?'' அடுத்த வினாடியே மேகநாதன் ஊட்டிக்குப் புறப்பட்டு விட்டார்.

மேகநாதனின் கார் மணமக்கள் இருந்த அவர் பங்களா வாசலில் வந்து நின்றது. சமையற்காரன் ஓடிவந்து காரின் கதவைத் திறந்தான். மேகநாதனின் கண்கள் கேள்விக் குறியாக நின்றன.

''சாவித் துவாரம் வழியாகப் பார்த்தேன். இருவரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். கதவைத் தட்டி எழுப்புவதாகச் சொன்னவர்களையும் தடுத்து விட்டேன்.'' என்றான் சமையல்கார சங்கரன்.

வாலிபனைப்போல மேகநாதன் மாடிப்படி ஏறி ஓடினார். சாவித் துவாரம் வழியே பார்த்தார். சமையற்காரன் சொன்னதுபோல அறைக்குள் விநாயகம் படுக்கையில் இல்லை. மணமகள் சந்திரா மட்டும் படுக்கையில் படுத்திருந்தாள். மணமகன் விநாயகம் எழுந்து விட்டான் என்று எண்ணிக் கதவைத் தட்டினார் மேகநாதன். யாரும் கதவைத் திறக்கவில்லை. மறுபடியும் பலமாகத் தட்டினார். சந்திரா எழுந்திருக்கவில்லை. கடிகாரத்தில் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் வினாடி முட்களைப் போல அவர் எண்ணங்கள் அவருக்கு முன்னே ஓடிக்கொண்டிருந்தன. சாத்தியிருந்த அறைக்கதவை மேலும் மேலும் தட்டினார். பலமுறை பலமாகத் தட்டியும் கதவு திறக்கவில்லை. படுக்கையில் படுத்திருந்த சந்திராவும் எழவில்லை. மேகநாதனின் இதயம் கனத்தது. திக்கென்றது. மணமக்களைப் பார்க்கக் கீழே காத்திருந்தவர்களை மேலே வரக்கூடாதென்று உத்தரவிட்டார். வேலையாளைக் கூப்பிட்டுக் கதவின் தாழை உடைக்கச் சொன்னார்.

அறைக்குள் போனார் மேகநாதன். சந்திரா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். சந்திராவைத் தட்டி எழுப்பினார் மேகநாதன். கனவு கண்டு விழிப்பவளைப் போலத் திடுக்கிட்டு எழுந்தாள் சந்திரா. கணவன் விநாயகம் எங்கே என்று கேட்டார் மேகநாதன். போதைகொண்டவளைப் போல சந்திரா விழித்தாள். என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தடுமாறினாள்.

பக்கத்திலிருந்த குளிக்கும் அறைக் கதவு உள்ளே தாளிட்டிருந்ததால் கதவைத் தட்டினார். கதவு திறக்கப்படவில்லை. பல முறை தட்டியும் அறைக் கதவு திறக்கப்படாததால் வீட்டின் பின்புறமாக வரும் கழிவுக்குழாய் வழியாக ஏறிக் குளிக்கும் அறையின் ஜன்னல் பக்கமாக எட்டிப் பார்க்கச் சொன்னார். குழாய் வழியாக ஏறி ஜன்னல் வழியாக வேலைக்காரன் பார்த்ததும் 'வீல்' என்று கூச்சலிட்டான்.

''என்னடா?'' என்று மேகநாதன் கத்தினார்.

அந்த மாப்பிள்ளைப் பையன் பிணமாகக் கிடக்கிறார் எஜமான். அந்தக் காட்சியைப் பார்க்கவே பயமா இருக்குங்க'' அலறிப் புடைத்துக் கொண்டு தென்னை மரத்திலிருந்து இறங்கும் குரங்கைப் போல வேகமாக இறங்கினான் வேலையாள்.

''வீல்'' என்ற வேலைக்காரனின் சப்தம் மேகநாதனின் நெஞ்சத்தைக் கலக்கி விட்டது.

கோவையில் இருக்கும் நண்பர் கருணாகரனுக்கும் வேதாரண்யத்திலிருக்கும் சுந்தர பாண்டியனுக்கும் போனில் விவரத்தைச் சொல்லிவிட்டுப் போலீசுக்கும் போன் செய்துவிட்டார்.

இரவில் இன்ப உலகத்தில் பறந்து கொண்டிருந்த இரண்டு ஜீவன்களில் ஒன்று உயிரற்ற பிணமாகக் கிடந்தது. அன்றில் பறவைகளைப்போலக் கொஞ்சி விளையாடிய பறவைகளில் ஒன்று ஏனோ இறந்துவிட்டது! தூக்கக் கலக்கத்தில் விழித்த சந்திரா தன் கணவனின் நிலை தெரிந்து மயங்கிக் கீழே விழுந்து விட்டாள்.

மயங்கி விழுந்த சந்திராவை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு வருவதற்குள் மணமகனின் மர்மச்சாவு அக்கம் பக்கமெல்லாம் பரவி ஊரே கூடிவிட்டது. விடிய விடிய எரிந்து கொண்டிருந்த வண்ண விளக்குகளின்

அழகைப்பற்றியும், மணமக்களை வரவேற்க மேகநாதன் ஏற்பாடு செய்திருந்த ஆட்டத்தை நினைவு படுத்தியும் அங்கலாய்த்தனர் மக்கள். முதல்நாள் பாட்டைக் கேட்டு மகிழ்ந்த மக்கள் மறுநாள் பாவம் என்றனர். எப்படித்தான் அந்தப் பாவி மகன் இவளை மறந்து இறந்தானோ? என்று சந்திராவின் நிலைபார்த்த மக்கள் அனுதாபத்தால் கண்கலங்கி நின்றனர். மேகநாதன் புயலில் அகப்பட்ட தென்னை மரம்போலத் தலைசுற்றி நின்றார்.

கருணாகரனிடமும் சுந்தரபாண்டியனிடமும் நட்பைத் தேடிக் கொள்ள அவர் பட்டபாடும் அதற்காக அவர் செய்த செலவுகளும் கொஞ்சநஞ்சமல்ல. நண்பர்கள் இருவரும் தன்மீது நம்பிக்கை வைக்க அவர் செய்த வேலைகள், தியாகங்கள், செலவுகள் ஏராளம். அத்தனைத் தியாகங்களும் செலவுகளும் ஒரே இரவில் பயன் தரமுடியாமல் தரைமட்டமாகி விட்டதே என்று மனம் நொந்துபோய் உலவிக் கொண்டிருந்தார்.

போலீஸ் வந்தது. மாடியிலுள்ள குளிக்கும் அறைக்குள் பிணமாகக் கிடந்த விநாயகத்தை போலீசார் நன்றாகப் பார்த்தார்கள். அவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டபின், விநாயகத்தின் உடம்பைப் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். வேதாரண்யத்திலிருந்து விநாயகத்தின் தந்தை சுந்தரபாண்டியன் வந்தார். அலறித் துடித்தார். அவர் மனைவி மண்ணிலே புரண்டழுதாள். மகனை இழந்து தவிக்கும் கோடீஸ்வரன் சுந்தரபாண்டியன் தம்பதிகளைப் பார்த்த மக்கள் கண்களெல்லாம் குளமாகி நின்றன.

வாழ்விழந்த மணமகள் சந்திராவின் நிலையை நினைத்து அழுவதா? தனக்கு வாழ்வளித்த நண்பர்களின் நிலை கண்டு துடிப்பதா? வாழ்நாளில் சேர்த்த செல்வங்களுக்கெல்லாம் ஒரே வாரிசாக வளர்ந்திருந்த விநாயகத்தை இழந்து புழுவாய்த் துடிக்கும் சுந்தரபாண்டியனைப் பார்த்துக் கலங்குவதா? கண்கலங்கி நிலை தடுமாறிக் கொண்டிருந்தார் மேகநாதன்.

மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை முடிந்ததும் சடலமாகக் கிடந்த விநாயகத்தை அவன் தந்தை சுந்தரபாண்டியனிடம் ஒப்படைத்தார்கள். விநாயகத்தின் இறுதிச் சடங்குகளைச் செய்ய முதல் நாள் இரவு மணமக்களை ஏற்றி வந்த அலங்காரக் காரிலேயே வைத்து மயானத்திற்கு கொண்டு போனார்கள். முதல்நாள் மகிழ்ச்சியோடு ஊர்வலமாக வந்த ஊரார் மறுநாள் கண்ணீரோடு ஊர்வலமாக



மயானத்திற்குச் சென்றனர். சவ ஊர்வலத்தின் முன்னே வாழ்விழந்த சந்திராவின் தந்தை கருணாகரன் தலை குனிந்து சென்று கொண்டிருந்தார். அவர் பக்கத்திலே அநியாயமாகத் தன் மீது யாரோ சுமத்திவிட்ட பழியைத் தாங்கிக் கொண்டிருந்த மனச் சுமையோடு மேகநாதன் நடந்து கொண்டிருந்தார். அவர்களுக்குப் பின்னால், தான் பெற்ற தவப் புதல்வன் மாயமாய் மாண்ட காரணம் புரியாமல் கால்கள் பின்னப் பின்ன நடந்து போய்க் கொண்டிருந்தார் சுந்தரபாண்டியன். அவருக்குப் பின்னால் அவர் காலத்தில் சேர்த்த பணத்திற்காக அவர் செய்த குற்றங்கள் நிழலாகச் சென்று கொண்டிருந்தன. அந்த நிழல்களோடு நிழலாகச் சென்ற வயதான உருவம் மட்டும் பைத்தியம் போலத் தானே சிரித்துக் கொண்டு சென்றது. அங்கு நடந்த சம்பவத்தைப் பார்த்த உயிர்களும் கேட்ட மக்களும் கலங்கிக் கண்ணீர் வடித்துக்கொண்டு போகும் போது அந்தக் கிழவன் மட்டும், தானே சிரித்துக் கொண்டுபோகக் காரணம்! பைத்தியமா? பழி தீர்த்துக் கொண்ட பெருமிதமா? ஊராரின் கண்களெல்லாம் குளமாக அந்த உருவம் மட்டும் மகிழ்ந்திருக்கக் காரணம்? யார் அந்த உருவம்? ஏன் சிரித்தது?

சட்டமும் சமூகமும் யாரையும் கொலை செய்ய அனுமதிப்பதில்லை. தற்கொலை செய்து கொள்ளவும் விடுவதில்லை. சமூகம் குற்றவாளியைக் காட்டிக் கொடுத்துவிடும். சட்டமும் தேடிப் பிடித்துத் தண்டித்து விடும்.

விநாயகத்தின் உயிர் அவன் உடலிலிருந்து பிரிந்ததற்குக் காரணம் கொலையா தற்கொலையா என்று ஆராய்ந்து தண்டிக்கக் காவல் துறையினர் தீவிரமாகப் புலன் விசாரணை செய்தபின் அந்த பங்களா உரிமையாளரான மேகநாதனையும் அங்கு வேலை செய்த ஆட்கள் சிலரையும் கைது செய்தனர்.

குற்றவாளியைக் கண்டுபிடிக்க வந்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடிக்குத் திருவாளர் மேகநாதன் மனைவி மரகதம் பெரிதும் உதவியாக இருந்தாள். குற்றவாளியைக் கண்டு பிடிப்பதில் மரகதத்திற்கு இருந்த ஆர்வத்தையும் பரபரப்பையும் பார்த்த புண்ணியகோடி திகைத்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் தன் கணவன் என்று


## நினைவிருக்கட்டும்!

"தமிழரசு"

சிறுகதைப் போட்டி 1975

முடிவு நாள் : 30—11—75


தெரிந்தும் கலங்காமல் நேர்மைக்காகப் பாடுபடும் பெண் உள்ளத்தைக் கண்டு சிரித்தார். ஒரு பெண்ணின் வாழ்வைக் கண்டு மகிழ்பவளும் பெண்தான். பொறுமைப்பட்டு அழிப்பவளும் பெண்தான். பெண்ணால் ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும் என்பதைப் புண்ணியகோடி உணர்ந்தவர்தான். காரணமில்லாமல் ஒரு பெண் ஒரு காரியத்தில் முனைப்பபாக இருப்பதில்லை என்பதையும் தெரிந்தவர். மரகதத்தின் ஆர்வத்துக்கு வெளிப்படையாக மதிப்புக் கொடுத்து அவள்நம்பிக்கையை அதிகப்படுத்தினார். அந்த வழக்கின் உண்மையை உணர்ந்து விட்டதுபோல மகிழ்ந்த புண்ணியகோடி முதலில் மரகதத்தின் கணவர் மேகநாதனை நீதியின் முன்னால் நிறுத்தி விசாரித்தார். மேகநாதனின் வாக்கு மூலத்தை டேப்-ரிக்கார்டர், பதிவு செய்து கொண்டிருந்தது.

''மிஸ்டர் மேகநாதன். இந்த வழக்குப் பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்'' போலீஸ் இன்ஸ்பெக்டர் தன் விசாரணையை ஆரம்பித்தார். உடல் வியர்த்து உள்ளம் நொந்துபோய் நின்று கொண்டிருந்த மேகநாதன் அவர் போட்டிருந்த மேல் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

''இந்தத் திருமணத்தில் எதிர்பாராத சம்பவம் ஏதாவது ஒன்று நடக்குமென்று எனக்கு அப்போதே தோன்றியது. காத்திருந்தவன் கனியை நேற்று வந்தவன் கொண்டுபோக முடியுமா? இந்தத் திருமணத்திற்கு முன்பே, இந்த திருமணம் தடைப்பட்டுக் கருணாகரனின் மகள் சந்திராவுக்கு வேறு இடத்தில் திருமணம் நடக்குமென்று நினைத்தேன். ஆனால் நான் நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று.''

போலீஸ் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி பெருமூச்சு விட்டுக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தார். மேகநாதன் தொடர்ந்து பேசினார்.

''கோவை தொழிலதிபர் கருணாகரன் மகள் சந்திராவின் மேல் கோவை கண்டிராக்டர் குப்புசாமியின் மகன் சேகருக்கு ஒரு கண். சந்திரா சிறு குழந்தையாயிருந்த காலத்தில் இருந்தே ஒருவரை ஒருவர் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து ஓடியாடி விளையாடியபோதே வளர்ந்த ஆசை அது''

சந்திரா, கால் கொலுசு 'கலீர் கலீர்' என ஒலிக்க நடப்பாள். துள்ளிக் குதிப்பாள். அவள் சிரிப்பொலியில் அவன் சிரித்து மகிழ்வான். அவளும் மகிழ்வாள். நாட்கள் செல்லச் செல்லப் பாவை வளர்ந்தாள். பாவை வளர வளரப் பேச்சுத் தொடர்ந்தது. பேச்சு வளர வளர உறவு வளர்ந்தது. உறவு வளர வளர உணர்ச்சி வளர்ந்தது. உணர்ச்சி வளர வளரச் சேகரின் கனவுகள் வளர்ந்தன.

கல்லூரிக்குச் செல்லும் சந்திராவை வழியில் நிறுத்திப் பேசிக் காதல் பாட்டுப் பாடுவான் சேகர். சந்திரா மகிழ்வாள். இது தெரிந்த கருணாகரன் திகைத்தார், பயந்தார். தன் குலக்கொடி சந்திராவை வேறு கொம்பில் படர ஏற்பாடு செய்துவிட்டார். சேகரின் காதலை முட்கள் குத்தி விட்டன. துடித்தான். அவளும் துடித்தாள்...அழுதான். அவன் உள்ளம் குமுறியது. மாளிகையும் குடிசையும் மகிழ்ந்து வாழ முடியுமா? மலையும் மடுவும் ஒன்றாக முடியுமா? கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட முடவனான சேகருக்குக் ''கிட்டாதாயின் வெட்டென மற'' என்ற பழமொழியைச் சொல்வாரில்லை. திராட்சையை அடைய முடியாத நரி போல, அவன் மனம் மறந்து திரும்ப நினைக்கவில்லை. அவன் மனத்திலே மூண்டுவிட்ட காதல், தீயாக மாறிவிட்டது. தீப்பிழம்பாக மாறிவிட்டான் சேகர். இது தெரிந்த நானும் பயந்து கொண்டிருந்தேன்.

''சந்திராவுக்கும் விநாயகத்திற்கும் திருமணம் நடந்து நான் நடத்திய வரவேற்பு வைபவத்தில் அவனும் கலந்து கொண்டான். ஆம். உண்மைதான். அவனை நான் என் இருகண்களால் நன்றாகப் பார்த்தேன். உரிமையைப் பறிகொடுத்த உள்ளத்தோடு சந்திராவைப் பார்த்தான். இளமையும் இன்பமும் பூத்துக் குலுங்கும் வண்ணத் தோட்டத்திலே இளந்தென்றல் ஓடி விளையாடியது. சேகரின் உள்ளத்திலே சந்திராவிடமிருந்த ஆசை மீண்டும் தலைகாட்டியதை என்னால் உணர முடிந்தது.

''மணமக்களின் முதல் இரவுக்காக என் பங்களா அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிந்துதான் சேகர் கோவையிலிருந்து ஊட்டிக்கு வந்திருக்க வேண்டும். மோப்பம் பிடிக்கும் துப்பறியும் நாயைப் போல வந்தான். வேடிக்கை பார்க்க வந்திருக்கும் மக்களோடு மக்களாகப் பங்களாவிற்குள் வந்துவிட்டான். அவன் பங்களாவை விட்டு வெளியே போகும்போதுதான் ஏதோ திட்டமிட்டுத்தான் வந்திருக்கிறான் என்று தெரிந்து கொண்டேன். அவனைக் கண்டதும், சேகர் சந்திராவிடம் கொண்ட காதல் என் நினைவுக்கு வந்தது. ஒரு சாதாரண எறும்பு பெரிய யானையை என்ன செய்துவிட முடியும் என்று என் மனம் நினைத்தது; அதே சமயம் சிறு எறும்பு காதில் நுழைந்ததால் துடிதுடிக்கும் யானையின் நினைவும் வந்தது. மனத்தில் ஏதோ இனம் புரியாத குழப்பம். கோவை செல்வது போலக் காரில் புறப்பட்டுச் சென்று பிறகு வழியில் திரும்பி ஊட்டிக்கே வந்துவிட்டேன். அன்று இரவில்கூட தனியாக பங்களாவைச் சுற்றி வந்தேன்.

''மனத்தில் ஏதேதோ விபரீத எண்ணங்கள். அந்த எண்ணங்களைத் தடுத்து நிறுத்துவது போல பங்களாவில் கட்டிக் கிடந்த நாய் பலமாக ஓயாமல் குரைத்தது. இருள் சூழ்ந்திருந்த இடத்திற்கெல்லாம் அந்த நேரத்தில் யார் போய்ப் பார்க்க முடியும்? பங்களாவில் காவல் புரிந்த காவல்காரனுக்கு நாய் குரைத்த காரணம் தெரியவில்லை. அதை அதட்டி உள்ளேகொண்டுபோய்க் கட்டிவிட்டு வெளியே வந்து திரும்பவும் படுத்துக் கொண்டான்.

''பனியின் வாடைக் காற்று அதிகமாக வீசியதால் முகம் தெரியாமல் தன்னைப் போர்வையால் முழுதும் மூடிக்கொண்டு படுத்துக் கொண்டான். என் பங்களாவைக் காவல் புரியும் இலட்சணத்தை என் கண்களால் பார்த்தும் சப்தம் போட்டுக் கண்டிக்க முடியாத நிலை. நானே என் பங்களாவை அன்று கண்விழித்துக் காவல் காத்தேன். மணி இரவு ஒன்று அடித்த சப்தம் ''டங்'' என்று அந்த கும்மிருட்டின் நிசப்தத்தை கலைத்துக் கொண்டு கேட்டது.

''பங்களாவின் மாடி வராண்டாவிற்குள் ஒரு உருவம் குதித்து ஓடியது போலிருந்தது. அது உருவமா அல்லது பிரமையா என்று எண்ணியவாறே செடிக்கு மறைவில் இருந்த நான் எழுந்திருந்தேன். அப்போது என் கோட்டை யாரோ பிடித்திழுத்தார்கள். இரத்தம் உறைந்து போய் விட்டதுபோல் இருந்தது. நான் கத்த முயன்றும் என்னால் கத்த முடியவில்லை. என்னுள் ஏற்பட்டிருந்த பயம் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவர முடியாமல் அடைத்துவிட்டது. மெதுவாகத் திரும்பினேன். நான் போட்டிருந்த கோட்டைப் பிடித்திழுத்தது வேறு யாருமல்ல மறைந்திருந்த செடியின் முள்தான்.

தமிழரசு 16-11-75
இதழுடன்
இலவச இணைப்பு
20
அம்சம்

''வெடித்து விடுவது போலத் துடித்துக் கொண்டிருந்த என் நெஞ்சுக்குள் நிறையக் காற்றை இழுத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டு மறுபடியும் பங்களாவைப் பார்த்தேன். பங்களா விளக்குகள் ஒவ்வொன்றாக அணைந்தன. எல்லாரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்கள். இ ர ண் டு நிழலுருவங்கள் வராண்டாப் பக்கம் வந்து மறைந்தன. அதன் பிறகு யாரோ மெதுவாகச் சாத்தியிருக்கும் கதவைத் தட்டுவது போலச் சப்தமும் கேட்டது. செடி மறைவில் இருந்த நான் கொஞ்சம் அருகில் சென்று பார்க்க நினைத்து மெதுவாக நடந்தேன். என்னை அந்த வேளையில் அங்குக் காண நேர்ந்தால் என்ன நினைப்பார்கள்? என் கௌரவம் என்ன ஆவது? மறைவாகவே நின்று பார்த்தேன்.

''டுமீல்'' என்ற சப்தம் கேட்டது. என் பங்களாவில் எரிந்து கொண்டிருந்த விடி விளக்கு அணைந்து விட்டது. பயந்து அசையாமல் நின்றேன். யாரோ திணறிக் கொண்டு அலறும் சப்தம் கேட்டது. நெஞ்சம் துடிதுடிக்க பங்களாவை உற்றுக் கவனித்தேன். கால்கள் சக்தியிழந்துவிட்டதால் ஓட முடியாமல் நின்றேன். கத்தினால் என் உயிருக்கு ஆபத்து நேருமோ என்று பயந்து நின்று உற்றுக் கவனித்தேன். மாடி வராண்டாவிலிருந்து கீழே ஒரு உருவம் தாவிக் குதித்தோடியது. அந்த உருவம் காதலில் தோல்வி கண்ட சேகராகத்தானிருக்கும். அதைத் தொடர்ந்து பங்களாவின் முன் நின்ற மரத்தின்கிளை அசைந்தது. நான் பார்ப்பது கனவா நினைவா என்று தெளிவடைய முடியாத நிலையில், பயத்தால் உந்தப்பட்ட நான், திரும்பிப் பார்க்கவில்லை. என் காரை எடுத்துக் கொண்டு கோவைக்குக் கிளம்பிவிட்டேன்.

''மேகநாதன் தன் முகத்தில் கொட்டிக் கொண்டிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு பெருமூச்சு விட்டார்!''

''மிஸ்டர் மேகநாதன் உங்கள் வாக்குமூலப்படி சந்திராவின் கணவன் விநாயகத்தைக் கொன்றது சேகர்தான் என்று சொல்லுகிறீர்கள். அப்படித்தானே!''

''உண்மைதான் இன்ஸ்பெக்டர். என் பங்களாவில் நடந்திருக்கும் கொலை, சந்திராவின் மேல் ஆசை வெறி கொண்டிருந்த சேகர் செய்ததுதான். அவன்தான் மணமகன் விநாயகத்தைக் கொன்று பிரேதத்தை பாத்ரூமுக்குள் போட்டு உள்தாளிட்டு ஜன்னல் வழியாக வந்திருக்கிறான்.

''சேகர் திட்டமிட்டுச் செய்த கொலைதான் இது. இந்தக் கொலையை அவனே செய்திருக்க வேண்டும். அல்லது யாரையாவது அவன் கையாளாக வைத்துச் செய்திருக்க வேண்டும்.''

''மேகநாதனின் வாக்குமூலத்தைப் பதிவு செய்த டேப்-ரிக்கார்டரை நிறுத்தினார் போலீஸ் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி! அவர் கண்கள் மேகநாதனை விழுங்கி விடுவதைப் போல உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. அவர் மனத்தில் ஓடிக் கொண்டிருந்த எண்ணங்கள்தான் என்ன?

(தொடரும்)

# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |



இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

# நோபல் பரிசு

மருத்துவத்துறையில் 1975-ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு இரு அமெரிக்க டாக்டர்களுக்கும், ஒரு இத்தாலிய டாக்டருக்கும் கூட்டாக வழங்கப்பட்டுள்ளது.

அவர்களின் விவரம் வருமாறு: 1. டேவிட் பால்டிமோர், இவர் அமெரிக்காவில் மெசச்சூசட்ஸ் தொழில் நுட்பக் கழகத்தில் பணி புரிகிறார். 2. ஹோவர்ட்டெமின், இவர் அமெரிக்காவில் விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தில் பணி புரிகிறார். 3. ரெனுடோடல் பெக்தோ—இவர் இத்தாலியர்.

புற்று நோய் ஆராய்ச்சிக்காக இவர்களுக்கு இந்த நோபல் பரிசு வழங்கப்பட்டது.

பௌதிகத்துறையில், 1975-ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு, டென்மார்க் நாட்டைச் சேர்ந்த இரு பேராசிரியர்களுக்கும், ஓர் அமெரிக்கப் பேராசிரியருக்கும் கூட்டாக வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் பேராசிரியர் ஆரேபோர், பேராசிரியர் பென் மோட்டல்சன் ஆகிய இருவரும் டென்மார்க்கைச் சேர்ந்தவர்கள். பேராசிரியர் ஜேம்ஸ் ரெய்ன் வாட்டர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

அணு பௌதிகத்துறை ஆராய்ச்சிக்காக இவர்களுக்கு இந்தப் பரிசு வழங்கப்படுகிறது. இவர்களுக்கு 63 ஆயிரம் ஸ்வீடிஷ் க்ரோனர் (ரூ. 12 இலட்சத்து 42 ஆயிரம்) பகிர்ந்து தரப்படும்.

இவர்களில் பேராசிரியர் ஆரேபோரின் தந்தை பேராசிரியர் நீல்ஸ்போர் என்பவரும் நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1922ல் பௌதிகத் துறையில் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இரசாயனத் துறையில் 1975-ம் ஆண்டிற்கான நோபல் பரிசு, இங்கிலாந்தில் வசிக்கும் ஆஸ்திரேலியர் பேராசிரியர் ஜான் வார்கப் கார்ன்போர்த் என்பவருக்கும், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் விளாடிமிர் பிரிலாக் என்பவருக்கும் கூட்டாக வழங்கப்பட்டுள்ளது. இவர்கள், உயிரியல் தன்மை வாய்ந்த மருந்து உற்பத்தியை எளிய முறையில் அமைத்துள்ளனர்.

* *

ஹைடிரஜன் குண்டு கண்டு பிடித்த ரஷிய விஞ்ஞானிக்குச் சமாதானத்திற்கான ''நோபல் பரிசு'' வழங்கப்பட்டுள்ளது.

அவரது பெயர் அந்திரேய் திமிர்த்ரேவிச் சாகரோவ். 51 வயதான இவர் ஒரு அணு விஞ்ஞானியாவார். ரஷ்யாவில் ஹைடிரஜன் குண்டைக் கண்டு பிடித்த இவருக்கு, 1975-ஆம் ஆண்டிற்கான சமாதான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

நோபல் பரிசுத் தொகை 63,000 சுவீடன் ''க்ரோனர்'' (நாணயம் பத்தரை இலட்சம் ரூபாய்). இதோடு ஒரு தங்கப் பதக்கமும் அளிக்கப்படும்.

நார்வே நாட்டுத் தலைநகரான ஆஸ்லோ நகரில் டிசம்பர் திங்கள் 10ந் தேதி நடக்க இருக்கும் விழாவில் இவருக்கு இந்தப் பரிசு வழங்கப்படும்.

''மனித குலத்தில் அமைதி நிலவுவதற்காக, அச்சமின்றிப் போராடியதற்காக'' இவருக்கு இந்தப் பரிசு வழங்கப்படுவதாக நார்வே நாட்டு நோபல் பரிசுக் குழு அறிவித்துள்ளது.

* *

இத்தாலிய நாட்டைச் சேர்ந்த யூஜினியோ மாண்டேல் என்ற 79 வயதுக் கவிஞருக்கு 1975-ஆம் ஆண்டின் இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

மாயைகளுக்கு உட்படாமல் வாழ்க்கையைப் பார்வையிட்டு மனிதாபிமான உணர்வுகளைக் கலை உணர்வோடு சித்திரித்த அவரது கவிதைக்காக இப்பரிசு வழங்கப்படுகிறது.

இவருக்கு வரி விலக்குடன் 1 இலட்சத்து 43,000 டாலர் பரிசும், தங்கப்பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படும். டிசம்பர் 10-ந் தேதி ஸ்வீடன் மன்னர் இப்பரிசை வழங்குவார்.

* *

தமிழ்நாட்டிலேயே சிறந்த கிராமமாகத் திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 'தலங்கை' கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்திற்கு 1000 ரூபாய் பரிசும், நற்சான்றிதழும் வழங்கப்படும்.

## கழிவுகளிலிருந்து செல்வம்!

'ஓட்டை, உடைசல், ஈயம், பித்தளை, கிழிந்த டயர்கள்! முதலியன மலைபோல் குவிந்து கிடக்கின்றனவா? அவற்றை ஒழிப்பது மட்டுமல்ல; அவற்றிலிருந்து பயன்படக்கூடிய பொருள்களை மீட்கும் வழியையும் கண்டு பிடித்திருக்கிறது.

ஒரு பல்கலைக்கழகம்.

சிறிய டிரக் போன்ற நடமாடும் ஊர்தி, அதிலே இருக்கும்; அமைப்பு கழிவுப்பொருள்களைத் தூளாக்கி விடுகிறது. தூளிலிருந்து பல மூலப் பொருள்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு விடுகின்றன. குறிப்பாக டயர்களிலிருந்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஏராளமான கம்பிகளையும் துணியையும் மீட்கிறது இந்த அமைப்பு. ஒரு நிமிடத்தில் 30 டயர்களை இது 'பைசல்' செய்யக்கூடியதாம். எனவே, ஒரு ஆண்டுக்கு ஒரு கோடியே பத்து இலட்சம் டயர்களை அது பைசல் செய்து விடும்.

கம்பிகளின் மேல்பூச்சிகளை அகற்றவும், பெரும் கம்பிக் குவியல்களைச் சுத்தமான செப்புக் கம்பிகளாக மாற்றவும் கூடியது இந்த அமைப்பு. சுருக்கமாகச் சொல்வதானால் எப்பொருளையும் மாற்றிவிடக் கூடியது இந்த அமைப்பு—இங்கல்ல, அமெரிக்காவில்!

# இதுதா சத்துணவு!



டாக்டர்
**கி. இரா. சுவாமிநாதன்,**
**உதவி இயக்குநர்,**
கால்நடைப் பராமரிப்புத் துறை,

மனிதனின் உடல் வலுவிற்கும், மூளை வளர்ச்சிக்கும் சத்துணவு தேவை என்பது நாம் அறிந்ததே.

சத்துணவு என்று சொல்லுங்கால், பல்வேறு வகையான சத்துப் பொருட்களுள் புரதம், உயிர்ச்சத்து, மாவுச் சத்து (கார்போஹைடிரேட்டு), தாதுப் பொருட்கள், கொழுப்பு போன்றவை முக்கியமானவை. அவற்றுள் தலையாயது புரதமேயாகும். ஏனெனில், உடல் இயக்கத்திற்கு உயிராக இருக்கும் மூளையின் வளர்ச்சி, திசுக்களின் வளர்ச்சி ஆகியவை அம்மனிதன் உட்கொள்ளக் கூடிய உணவுப் பொருட்களிலிருந்து கிடைக்கும் புரதத்தினையே சார்ந்துள்ளன.

இளமையில் தேவையான அளவு புரதம் கிடைக்காமையினால் மூளை வளர்ச்சி குன்றிவிட்டால், அம்மனிதனால் முழு மனிதனாக வாழ இயலாது. அறிவோடும், திறத்தோடும் செயல்பட இயலாது. புரதப் பற்றாக்குறை வருங்காலச் சந்ததியினை அங்கஹீனமாகவும், ஆரோக்கியம் அற்றதாகவும், அறிவீனக் கூட்டமாகவும் ஆக்கி விடக்கூடியது.

மேலும், பிஞ்சு மனத்தில், துள்ளித் திரியும் வாழ்வின் உதய கால நேரத்தில் வெம்பி விழுந்த பிஞ்சாக — கருகிய மொட்டாக —இளமையில் மாள வைக்கும் கொடுமை, எண்ணிப் பார்க்கவே இதயத்தைப் பிழிவதாகும்!

இன்றைய இந்திய மக்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் உணவுப் பொருட்களின் பற்றாக் குறை சமூக அமைப்பு, மக்களது அறியாமை, மத நம்பிக்கைகள், மக்களது வாங்கும் சக்தி போன்ற காரணங்கள் புரதப் பற்றாக் குறையினை நீக்கத் துணை செய்வதாக இல்லை.


வளர்ச்சியுற்ற பல்வேறுநாட்டு மக்கள் உட்கொள்ளும் உணவுப் பொருட்களோடு, இந்திய மக்கள் உட்கொள்ளுவதை ஒப்பிட்டு பார்க்குங்கால், நாம் எந்த அளவு சத்தற்ற உணவினை உண்டு வருகிறோம் என்பது நன்கு புலனாகும். இந்நிலையினை மாற்றி அமைப்பது அவசியமாகும்.


நமக்குத் தேவையான புரதம், நாம் உணவாகக் கொள்ளும் காய்கறிகள், கீரை வகைகள், பருப்பு வகைகள் முதலியவற்றிலும், பால், முட்டை, இறைச்சி முதலியவற்றிலிருந்தும் கிடைக்கின்றது. அவற்றுள் காய்கறி, கீரை முதலியவற்றிலிருந்து கிடைக்கும் புரதத்தைவிட பால், முட்டை, இறைச்சி முதலியவற்றிலிருந்து கிடைக்கும் புரதம் முழுமையானது. ஏனெனில், புரதம் என்டது பல்வேறு வகையான 'அமினோ அமிலங்கள்' என்னும் நுண்மையான சத்துப் பொருட்களால் ஆனது. நமக்கு அவை மிகவும் தேவையானவை. காய்கறி, கீரைகளில் கிடைக்கும் புரதத்தில் இவை மிகக் குறைந்த அளவில் உள்ளன. ஆனால் பால், முட்டை, இறைச்சி ஆகியவற்றில் இவை மிகுதியான அளவிலும், சீரான விகிதங்களிலும் அமைந்து உள்ளன. நாம் உட்கொள்ளும் உணவுப் பொருட்களில் உள்ள புரதத்தில், இந்த அமினோ அமிலங்களில் ஏதேனும் ஒன்று குறைந்து காணப்பட்டாலும், அப்புரதமானது கழிவுப் பொருளாக வெளியேறிவிடுகிறது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது, பால், முட்டை, இறைச்சிபோன்ற உணவுப் பொருட்களில் கிடைக்கும் புரதமே உயர்வாகக் காணப்படுகிறது. மேலும் அது எளிதில் செறிக்கக் கூடியதும் ஆகும்.


வளர்ச்சியுற்ற நாடுகளில் மக்கள் தங்களது உணவில் பால், முட்டை, இறைச்சி போன்றவற்றைப் பெருமளவில் சேர்த்துக் கொள்ளுகின்றனர். அமெரிக்காவில் தனி மனிதன் ஓர் ஆண்டில் சராசரி 104 கிலோ கிராம் முட்டை, இறைச்சி ஆகியவற்றைத் தன் உணவில் சேர்த்துக் கொள்ளும்போது, இந்தியாவில் ஒரு மனிதன் சராசரி 5 கிலோ கிராம் மட்டுந்தான் சேர்த்துக்கொள்ளுகிறான்!

உலகெங்கிலும் உள்ள மாடுகளில் ஐந்தில் ஒரு பங்கு நம் நாட்டில் உள்ளது! எருமையினம் சரிபாதி உள்ளது. ஆனாலும் இந்த கால்நடைகளை எந்த அளவுக்கு நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று ஒரு கணம் சிந்தித்தால், நம் நிலை நம்மையே திடுக்கிட வைக்கும்! உலகில் உள்ள நாடுகளில் ஓராண்டில் 5,923 ஆயிரம் டன் இறைச்சி உற்பத்தி செய்யப்பட்டால், அதில் இந்தியாவின் பங்கு 357 ஆயிரம் டன் ஆகும். அதே நேரத்தில் ரஷ்யாவின் பங்கு பத்து இலட்சம் டன் ஆகும். உணவு நெருக்கடியும், உணவில் புரதப் பற்றாக்குறையும் நிறைந்துள்ள காலக் கட்டத்தில் இந்திய மக்கள் தங்கள் நாட்டில் உள்ள கால்நடைகளை எந்த அளவுக்குப் பயன்படுத்தி உணவுப் பற்றாக் குறையினையும், உணவில் புரதப் பற்றாக் குறையினையும் களைவது என்று சிந்தித்துச்செயல்படுவது, ஒவ்வொரு பொறுப்புள்ள குடிமகனின் கடமையுமாகும்.

ஒவ்வொரு இந்தியனும், ஒரு நாளில் சராசரியாக உட்கொள்ளும் பாலின் அளவு 131 கிராம் ஆகும். இந்தியர் குறைந்த அளவே பால் அருந்தக் காரணம், நமது மாட்டினம் தரும் பாலின் அளவு மிகக் குறைவு. இந்தியப் பசுக்கள் ஆண்டொன்றுக்குத் தரும் பாலின் சராசரி அளவு 173 கிலோ கிராம் ஆகும். மேலைய நாட்டுப் பசுக்கள் தரும்பாலுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இது எவ்வளவு குறைவு என்று தெரியும்.







தமிழகத்தைப் பொறுத்தவரை, பால் தரும் சக்தி குறைவான மாடுகளின் தரத்தை உயர்த்திப் பல்வேறு திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உயர் ரகக் காளைகளின் விந்தினைப் பக்குவப்படுத்தி, தரக்குறைவான நாட்டுப் பசுக்களைச் செயற்கை முறையில் கருவூட்டிக் கலப்பினக்கன்றுகளை உருவாக்கி வருகிறோம். நாம் சந்தித்து வரும் உணவுப் பற்றாக் குறையினை—உணவில் புரதப் பற்றாக் குறையினை—நம் எதிர்காலச் சந்ததிகள், சந்திக்க நாம் இடம்தர மாட்டோம் என்ற உறுதியினைத் தமிழ்நாடு கால்நடைப்பராமரிப்புத் துறை மேற்கொண்டிருக்கிறது. தமிழகமக்களிடையே கால்நடைப் பராமரிப்புப் பணியில் அண்மைக் காலமாக ஏற்பட்டு வரும் விழிப்புணர்ச்சி, கால்நடை வளர்ப்பில் பெரும் அக்கறையினையும் கிளறிவிட்டுள்ளது. தரமிழந்த காளைகளை இன விருத்திக்குப் பயன்படுத்துதல் கூடாது. அவைகளை ஆண்மை நீக்கி, வயல் வெளியில் உழைக்க - வண்டியிழுக்கப்பயன்படுத்துதல் வேண்டும் அல்லது உணவுக்குப் பயன்படுத்த வேண்டும்.

போர்க்கால அவசரத்தோடு—கால்நடைப் பராமரிப்புத் துறையின் இலட்சியப்பயணம் தொடர்கிறது! நம் நாட்டுப் பசுக்களிடமிருந்து உயர் ரகக் கன்றுகளைப் பெறும் பணி விரிகிறது !

இதனால், நம் தமிழகத்திலேனும் குழந்தைகள் முதல் முதியவர் வரை தங்களுக்குத் தேவையான பாலினை அருந்திடச் செய்ய இயலும்.


உயர் ரக இனக் காளைகளை உருவாக்கும் உலைக்கூடங்களாகத் தமிழகத்தில் உள்ள மாவட்டக் கால்நடைப்பண்ணைகள் திகழ்கின்றன. பல்வேறு இன மாடுகள் வேறு நாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்டு, இனச்சேர்க்கை செய்யப்பட்டு, எந்தெந்த இனம் இந்திய மண்ணுக்கும், இங்குள்ள தட்ப—வெப்ப நிலைகளுக்கும், இங்குக் கிடைக்கும் கால்நடைத் தீவனங்களுக்கும் ஏற்றதாக இருக்கும் என்ற விரிவான ஆராய்ச்சி இப்பண்ணைகளில் நடைபெற்று வருகின்றன.

இன்றுள்ள சூழலில் 'ஃபிரிசியன்', 'ஜெர்சி', 'சிந்தி' ஆகிய இன மாடுகள் அதிக அளவில் பால் தரக் கூடியனவாக உள்ளன. தமிழக மக்கள் தங்களது கால்நடைகளின் தரத்தினை உயர்த்த முன்னர் சொன்ன உயரினக் காளைகளைப் பயன்படுத்துதல் நலம்.

உணவுப்பொருட்களில் அடுத்து இடம் பெறுவது, புரதச் சத்து நிரம்பிய கோழிக் கறியும், கோழி முட்டையும் ஆகும். பொதுவாகப் பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் மக்கள் தொகைக்கும், அந்நாட்டில் உள்ள கோழிகள் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதத்திற்கும் உள்ள உறவு இந்தியாவில் இல்லை! எண்ணிக்கையில் மட்டும் அல்ல, முட்டையிடும் தரத்திலும் நம் நாட்டுக் கோழிகள் மிகவும் பின்தங்கிய நிலையில்தான் உள்ளன!

இந்தியாவில் ஒரு கோழி ஓர் ஆண்டில் சராசரியாக 60 முட்டைகள்தான் இடுகின்றன! ஆனால் அமெரிக்காவில் ஓர் ஆண்டிற்கு 193 முதல் 212 வரை முட்டைகள் இடும் கோழியினங்கள் உள்ளன! இதன் காரணமாக ஒரு இந்தியனுக்கு ஓர் ஆண்டிற்கு 12 முட்டைகள்தான் கிடைக்கின்றன. இந்தியாவில் ஓராண்டில் சராசரியாக ஒரு மனிதருக்குக் கிடைக்கும் கோழிக்கறி 131 கிராம்தான். அமெரிக்காவிலோ ஒரு மனிதருக்கு 13.18 கிலோ கிராம்களும், பிற ஐரோப்பிய நாடுகளில் 2.47 கிலோகிராம்களும் கோழிக்கறி கிடைக்கின்றது. இந்நிலை கருதி மாவட்டக் கால்நடைப் பண்ணைகளிலும், தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் கோழியின விரிவாக்க நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு உயர் ரக 'வெள்ளை லெக்ஹார்ன்' போன்ற கோழிகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழக மக்களுக்கு நியாயமான விலையில் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் தமிழகத்தில் முட்டை உற்பத்தி அதிகமாகி வருகின்றது. கோழிகளை வளர்ப்பது கடினம் இல்லை. வீடுகளில் விரயமாகும் தானியங்கள், உணவுப் பொருள்கள், கழிவுகள் தவிடு போன்றவற்றைத் தீவனமாகக் கொடுத்து கோழிகளை வளர்க்கலாம். கோழி வளர்ப்பிற்குப் பொருட் செலவு அதிகமில்லை. அவர்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு நாளுக்கு ஆளுக்கொரு முட்டையாவது கிடைக்கும். நாட்டின் உணவுப் பற்றாக் குறையை நீக்கவும், நம் வீட்டுப் பிள்ளைகள் ஆரோக்கியமுள்ளவர்களாக — உடற்கட்டோடு வளர —உடல் வளர்ச்சிக்கும், பலத்திற்கும் ஏற்றவாறு மூளை வளர்ச்சி பெற்று அறிவுள்ள மக்களாகத் திகழவும் ஒவ்வொரு வீட்டிலும், நான்கு அல்லது ஐந்து முட்டையிடும் கோழிகளை வளர்க்கலாம். தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைத் தாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும்.

மேலும், மிகக் குறைந்த காலத்தில் மிக விரைவில் பெருகக்கூடிய இனம் பன்றியாகும். அவற்றுள் வெள்ளை யார்க் ஷயர் (White York Shire) பன்றியினம் விரைவில் பெருகுகிறது. மிக அதிக அளவில் இறைச்சி கொடுக்கக் கூடியதும் இவ்வினமே! பன்றிக் கறியும் சுவை நிரம்பியது; புரதம் நிரம்பியது! எனவே, பன்றியினத்தை அதிக அளவில் வளர்ப்பது அவசியம்.



மிகக் குறைவான பலனை அளிக்கக் கூடிய கால்நடைகளை மாடுகளானாலும், ஆடுகளானாலும் கோழிகளானாலும்—உணவுக்காக அழித்து விடலாம். அவை நல்ல கால்நடைகளுக்குக் கிடைத்துள்ள தீவன வசதிகளைப் பாழாக்கும் எதிரிகளாகும்! கால்நடைப் பராமரிப்புத் துறை அலுவலர்களது அறிவுரையைப் பெற்று உயர் ரக இன மாடுகளையே மக்கள் வாங்க வேண்டும். மேலும், அரசு பண்ணைகளில் உள்ள 'வெள்ளை லெக்ஹார்ன்' போன்ற கோழிகளையே வாங்குதல் வேண்டும்.

அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிதியுதவி பெற்று, சிறு கோழிப் பண்ணைகள், மாட்டுப்பண்ணை, ஆட்டுப் பண்ணை, பன்றிப் பண்ணை அமைத்து அந்தந்தப் பகுதிகளில் பால், முட்டை, இறைச்சி முதலியவைகளின் உற்பத்தியைப் பெருக்கி உணவில் தன்னிறைவு பெற வேண்டும்.

கல்வியறிவு வளர நம் மக்களுக்கு விஞ்ஞானப் பார்வை வர வேண்டும். நம் உணவுப் பழக்க வழக்கங்களில் இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். இளந்தலைமுறையை ஆரோக்கியமிக்கதாய், அறிவும் ஆற்றலும் உள்ளதாய் விளங்கச் செய்ய, உணவுப் பழக்க வழக்கங்களில் ஒரு புரட்சிகர மாற்றம் தேவை. காலத் தேவையைக் கருத்திற் கொண்டு, நாம் அந்த மாற்றத்தைப் படிப்படியாகக் கொணர்தல் வேண்டும். ஒளிமிக்க எதிர்காலம் நம் நாட்டிற்கு கிடைக்கும் என்று நம்பி செயல்படுவோம்.


**தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நே. X. 406**

வேப்பேரி : : சென்னை-600 007

" வெங்கடசாமி வாசீகம் நிலையம் "

14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை600 007

தொலைபேசி : 30877, 30878    தந்தி : ''ஹவுஸ்பாங்க்''
செயலாளர் : 33000    தபால் பெட்டி : 486

தலைவர் : திரு. பழனிவேல்ராஜன், பி.எஸ்.சி., பி.எல்,, எம்.எல்.ஏ.,
உப–தலைவர் : திரு. பி. கஸ்தூரி பிள்ளை
பொருலாளர் : திரு. எஸ். பழனிசாமி, எம். ஏ.,

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | .. | ரூ. 5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | .. | ரூ. 2,81,55,425/- |
| அடகு வைக்கப்பட்ட பிரதம சங்கங்களுக்கும், கட்டடச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை | .. | ரூ. 22,23,28,765/- |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட தம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அ வகளின் அங்கத்தினர்களுக்குப் புதிய வீடு கட்ட 15 வருட நீண்ட காலக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன.

இது சம்பந்தமான விவரத்திற்கு அருகிலுள்ள பிரதம வீடுஅடமான அல்லது வீடு கட்டும் சங்கத்தை அணுகவும்.

தவணைவைப்புத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

(முதலும் வட்டியும் திருப்பி அளிக்க தமிழ்நாடு அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது)

அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்சக்கடன் அளவு

| | | |
|---|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு | .. | ரூ. 30,000/- |
| புதிய வீடுகள் கட்டுவதற்கு (கிராமப்புற வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம்) | .. | ரூ. 10,000/- |

பூ. கு. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.



# தஞ்சைத் தரணியில் வேளாண்மை வளர்ச்சி!

எஸ். பாண்டிபெருமாள்,
பி.எஸ்.சி. (வே)
திட்ட இயக்குநர்,
தீவிர சாகுபடித் திட்டம்,
தஞ்சாவூர்.

சீரும் சிறப்பும் கொண்டது தஞ்சை. பன்னெடுங்காலமாக நாகரிகத்தின் நாற்றங்காலாகச் சுடர்விட்டுள்ளது. வானளாவிய கோபுரங்கள், காவிரியாற்றுக்கு அணையிட்ட அற்புதம் தொடர்ந்து நிலைத்துள்ள கலைகள், நஞ்சைக்கு ஏற்ற சாகுபடி முறைகள், தோப்புக்கள், துரவுகள் அனைத்தும் தஞ்சையின் சிறப்புக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

இச்சிறப்பிற்கு காவிரி ஆறுதான் அடிப்படையாக உள்ளது! காவிரியின் நீரைப் பரவலாகப் பயன்படுத்தக்கூடிய நில அமைப்பையும் தஞ்சை கொண்டுள்ளது. கல்லணைப்பக்கம் உயர்ந்தும், கிழக்கும் தெற்கும் நோக்கிப் படிப்படியாகத் தாழ்ந்தும் இருக்கிறது. அதன் காரணமாக இயற்கையாகவே காவிரி சிறு சிறு ஆறுகளாகவும், வாய்க்கால்களாகவும் பிரிந்து பிரிந்து தமிழ் மக்களின் வளமான வாழ்விற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொள்கிறது.

இன்றோ, தமிழகத்தின் வளமான வாழ்விலே தஞ்சை ஓர் ஒப்பில்லா இடத்தை வகிக்கிறது. தமிழகத்தின் நெல் உற்பத்தியில் கால்பகுதி தஞ்சையில் விளைகிறது! இவற்றின் காரணமாக, தமிழகத்தின் உணவுத் தேவையை அளிப்பதில் தஞ்சை மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. ''தமிழகத்தின் நெற்களஞ்சியம்'' என்ற பேறும் பெற்றுள்ளது!

தமிழகத்தில், உடனடியாக உற்பத்தியைப் பெருக்க வாய்ப்புகள் நிறைந்த மாவட்டம் என, தஞ்சை மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஏனெனில் இம்மாவட்டத்தில் பின்கண்டவாய்ப்புகள் உள்ளன.

1. சுமார் 12.5 இலட்சம் ஏக்கராவிற்கு நிரந்தர நீர்ப்பாசன வசதி உள்ளது.

2. தமிழகத்தின் மொத்த நெற்சாகுபடிப் பரப்பில் ஏறக்குறைய காற்பகுதி இங்கு உள்ளது.

3. இம்மாவட்டத்தில் பெரும்பான்மையான விவசாயிகள் கல்வியறிவு உள்ளவர்கள். ஆகவே அவர்கள் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களைச் சுலபமாக ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையவர்கள்

4. பொதுவாகப் பார்க்கும் பொழுது இய்ற்கையின் விபரீதங்கள் குறைவு.

எனவே, 1960-ல் தமிழ் புத்தாண்டு நாளன்று தீவிர சாகுபடித் திட்டம் (IADP) இம்மாவட்டத்தில் துவக்கப்பட்டது.

1960-ல் தஞ்சையின் 36 வட்டாரங்களில் 23 வட்டாரங்களில் மட்டும் நெற்பரப்பில் 20 சதவிகிதப் பகுதியில் துவக்கப்பட்ட இத்திட்டம், படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு 1964-65-லிருந்து எல்லா வட்டாரங்களிலும் செயல்படுகிறது.

துவக்கத்தில் ஏற்கனவே ஆராய்ந்துள்ள முடிவுகளையும், ரகங்களையும் ஒருங்கிணைந்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்நிலையில்தான் ''சாகுபடித் தொகுப்பு'' என்ற கருத்துச் செயலாற்றப்பட்டது. அதன்படி அதிக உற்பத்தியின் அடிப்படை, சிறந்த ரகமாகும். அதன் திறனைப் பெறத்தக்கஅளவு உரிய காலத்தில் உரமிடல், தக்க முறையில் பயிரிடல், செழித்து வளரும் பயிருக்குத் தகுந்த காப்பு அளித்தல் என்ற நான்கு முறைகளையும் இணைத்து ஒவ்வொரு ரகத்திற்கும் தனித் தனியாக சாகுபடித் தொகுப்பு உருவாக்கப்பட்டது.

நிலவாகிற்கு ஏற்ற ரகங்களைத் தேர்ந்தெடுத்து விவசாயிகளிடம் அவற்றிற்கான சாகுபடித் தொகுப்பை உணர்த்துவது அடிப்படையாகும். அதன்படி குறிப்பிட்ட அளவு விதை, உரம், மருந்து சாகுபடிச் செலவிற்கான நிதி, முதலியவற்றை விவசாயிகளுக்கு வழங்குவது வெற்றிக்கு அடித்தளமாகும். உழவியலுக்குத் தேவையான

உற்பத்திப் பொருள்களைக் காலத்தே பெற்றிட கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வசதி வழங்கப் படுகிறது.

### பொறுக்கு விதை

அதிக விளைச்சலுக்கு அச்சாக உள்ளது நல்ல தரமுள்ள விதை! ஆரம்பத்திலிருந்தே பரிந்துரைக் கப்பட்ட பொறுக்கு ரகங்கள் பரவ, தரமான விதைகள் வினியோகிக்கப்பட்டன

1964-ல் ஒரு சீரிய ரகமாக 'ஆடுதுறை27' ரகம் வெளியிடத் தயாராகியது. அனைத்துலக உணவு, மற்றும் விவசாய நிறுவனத்தின் ஆதரவில் 'கட்டாக்' மத்திய நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஜப்பானிய ரகங்களுடன் இந்திய ரகங்கள் கரு ஒட்டுச் செய்யப்பட்டன. கரு ஒட்டுக்கள் தேசத் தின் பல பகுதிகளில் உள்ள நெல் ஆராய்ச்சி நிறு வனங்களுக்கு அனுப்பப்பட்டன. ஆடுதுறையில் தான் 'ஜி.இ.பி. 24' என்ற ரகமும், 'நாரின் 8' என்ற ரகமும் கரு இணைப்புச்செய்ததன் பயனாய் 'ஆடுதுறை 27' என்ற ஒரு ரகம் உருவாகியது. குறைந்த வயது, தரமான அரிசி, அதிக உரமேற்று அதிக விளைச்சல் அளிக்கும் திறன் முதலியவற்றை இந்த ரகம் கொண்டிருந்தது. மற்ற ரகங்களை விட கணிசமான அதிக மகசூல் கொடுத்தது.

இந்த ரகம் வெளியிடத் தயாராகிய நிலையில் வேறு எந்தப் பகுதியிலும் நடந்தறியாத அற்பு தத்தை தஞ்சையில் தீவிரச்சாகுபடித் திட்டத்தினர் நிகழ்த்தினர். ஆராய்ச்சியில் உள்ள பொழுது



1964-ல் 200 ஏக்கரில் முன்னோடி விளக்கமாய் பயிரிட்டுச் சோதித்து விதை சேகரிக்கப்பட்டது. 1965-ல் 200 ஏக்கரில் ஒரு பெரும் விளைக்கப் பண்ணை அமைத்து, விதைப்பெருக்கமும் செய்தனர். இந்தரகம் ஏக்கருக்கு 1,753 கிலோ மகசூல் கொடுத்தது. இம்மகசூல் தஞ்சையின் சராசரியை விட 50 சதவிகிதத்திற்கு மேல் இருந்தது. எனவே, இந்த ரகம் விவசாயிகளை வெகுவாகக் கவர்ந்தது! 1966-ல் கிராமம் கிராமமாக உயர் அலுவலர்கள் சென்று பிரச்சாரம் செய்து இரண்டு லட்சம் ஏக்கர் பரப்பிற்குப் பரப்பினர். 1967 குறுவைப் பயிரின் பெரும்பான்மையான பகுதியில் இந்த ரகம் பரவி யது. இவ்வாறு குறுகிய காலத்தில் வேறெந்த ரகமும் இவ்விதம் பரவியதே இல்லை! இதற்கு ஒரு காரணம் ஆடுதுறை 27 ரகத்தின் சிறப்புத் தன்மை யாகும். அத்துடன் தஞ்சை விவசாயிகளிடையே முன்னேற்றத் துடிப்பையும் நல்லதொரு மன மாற்றத்தையும் ஏற்படுத்தியதற்கு இது ஒரு சான் றாகவும் உள்ளது.

### இரசாயன உரம்

'ஏரினும் நன்றும் எருவிடல்' என்ற வள்ளுவர் வாக்குக்கு ஒப்ப நிறைந்த விளைச்சல் பெற போது மான அளவு உரமிட வேண்டுமென்பதை யாவரும் அறிவோம்.

தஞ்சை மாவட்டத்தில் இரசாயன உரங்களை இதுவரை உபயோகிக்கும் அளவைப் பார்த்தால், கடந்த 15 ஆண்டுகளில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள் ளதைக் காணலாம். தீவிர சாகுபடித் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன், உர உபயோகம் சராசரி யாக ஏக்கருக்கு 1.8 கிலோ தழைச்சத்தும், 1 கிலோ மணிச்சத்து, மிகக் குறைந்த அளவில் பொட்டாசு என்ற அளவில்தான் இருந்து 1974-75-ல் இந்த நிலை 10 மடங்கு அதிகரித்துள்ளது. உரம் எல்லா உழவர் பெருமக்களுக்கும் எளிதாகக் கிடைக்க, 500-க்கும் மேற்பட்ட கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் மூலமும், 400-க்கும் மேற்பட்ட தனியார் துறையின் மூலமும் வினி யோகம் செய்யப்பட்டு வருகிறது.

### உரவினியோகம்

| ஆண்டு | வினியோகிக்கப்பட்ட மொத்த உரங்கள் (டன்கள்) அ. சல் பேட் | சூப்பர் பாஸ்பேட் | மியூரியேட் ஆப் பொட்டாசு | ஏக்கருக்குச் சராசரியாக (கிலோவில்) தழைச் சத்து | மணிச் சத்து |
|---|---|---|---|---|---|
| 1959—60 | 17000 | 12000 | ... | 1.8 | 1.0 |
| 1960—61 | 17460 | 13574 | 55 | 2.2 | 1.1 |
| 1961—62 | 20940 | 17687 | 191 | 2.2 | 1.5 |
| 1962—63 | 23326 | 28422 | 323 | 2.7 | 2.5 |
| 1963—64 | 29020 | 34748 | 779 | 3.1 | 2.9 |
| 1964—65 | 41890 | 45562 | 1347 | 4.5 | 3.9 |
| 1965—66 | 64037 | 33907 | 1299 | 7.5 | 3.2 |
| 1966—67 | 74127 | 32568 | 1405 | 9.6 | 3.1 |
| 1967—68 | 89334 | 59819 | 2379 | 10.2 | 5.5 |
| 1968—69 | 94737 | 66789 | 2710 | 10.8 | 6.1 |
| 1969—70 | 105028 | 73236 | 4965 | 12.25 | 8.75 |
| 1970—71 | 119755 | 83400 | 9381 | 14.36 | 8.85 |
| 1971—72 | 137715 | 98075 | 13585 | 16.43 | 9.36 |
| 1972—73 | 154316 | 99202 | 14186 | 18.70 | 9.61 |
| 1973—74 | 163765 | 93406 | 15268 | 19.33 | 9.10 |
| 1974—75 | 138625 | 62806 | 16873 | 18.12 | 6.56 |

### பயிர்ப் பாதுகாப்பு

''நீரினும் நன்றதன் காப்பு'' என்ற பொய்யா மொழிப் புலவரின் கூற்றுக்கு ஏற்ப தஞ்சையில் அதிகமான பரப்பில் உயர்விளை ரக நெற்சாகுபடி யாகும் நிலையில், காலநிலைக் கோளாறுகளினால் பூச்சிநோய்களின் தாக்குதல் கூடுதலாக உள்ளன! குறுவை அறுவடை தருணத்தில் 'பல்காரிட்' என்ற தத்துப்பூச்சியும் சம்பா தாளடிப் பயிர்களில் 'குருத்துப்பூச்சி', 'இலைசுருட்டுப்புழு', 'கொலை நோய்' 'இலைப்புள்ளிநோய்' முதலியவையும் தாக்குகின்றன. இவற்றைத் தவிர வேறுசில பூச்சி

களும், நோய்களும் தயாராகக் காத்திருக்கின்றன.

கடந்த காலத்தில் பயிர்ப் பாதுகாப்பு வெகுவாகப் பரவியுள்ளது. சாகுபடிப் பணிகளில் ஒன்றுக இடம் பெற்றுள்ளது. அதன் காரணமாக இவற்றைக் கட்டுப்படுத்தும் இரசாயனங்களின் வினிநோகமும் சுமார் 50 மடங்காக உயர்ந்துள்ளது.

### குறுகிய காலக் கடன் வினியோகம்

தஞ்சையிலே, இரு கூட்டுறவு மத்திய வங்கிகள் தஞ்சாவூரிலும் கும்பகோணத்திலும் செயல்படுகின்றன. இவை கிராம நாணயச் சங்கங்கள் மூலம் நிதி உதவி அளிக்கின்றன. பொருட்கள் குறிப்பாக உரவகைகளை அளிக்க தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை ஒன்றியமும், வட்ட விற்பனைச் சங்கமும் பொறுப் பேற்றுள்ளன.

ஒவ்வொரு ஆண்டிலும் எல்லா உறுப்பினர்களுக்கும் ஆண்டுக்கடன் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதனபடி பின்னர் நிதி, பொருட்கள் முதலியவை வழங்கப்பட்டு அறுவடை முடிந்தபின் திரும்பப் பெறப்படுகிறது.

1960-61-ல் ரூபாய் 15 லட்சம் மட்டுமே வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன் 1974-75-ல் சுமார் 14 கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது!

இந்த அனுபவம் புதியதொரு வாய்ப்பைக் காண்பித்தது. சரியான பட்டத்தில் நீர் கிடைத்தால், வழக்கமான பரப்பைவிட கூடுதலான பகுதியில் குறுவை பயிரிட்டு பின்னர் தாளடிப் பயிரையும் சாகுபடி செய்ய இயலும் என்பதுதான் இப்படிப்பினை!

இதனை அடுத்து 1967-68-ல் சம்பா பயிரிடும் பகுதிகளை குறுவைத் தாளடிப் பகுதிகளாக மாற்ற தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் பயனுகக் குறுவைத் தாளடிப் பரப்பு கணிசமாக அதிகரித்துள்ளது.

1968-69-லும் அதனைத் தொடர்ந்தும் இம் முயற்சி தீவிரப்படுத்தப்பட்டது. இதன் விளைவாகத் தஞ்சையின் சாகுபடிப் பரப்பு குறுவையில் 2 இலட்சம் ஏக்கரிலும், தாளடி 1.5 இலட்சம் ஏக்கரிலும் அதிகரித்துள்ளது.





இருபோகமாக மாற்றும் முயற்சியில் ஏற்பட்ட முன்னேற்றம்.

| ஆண்டு | குறுவை | தாளடி | சம்பா | மொத்த நெல் பரப்பு |
|---|---|---|---|---|
| | (இலட்சம் ஏக்கரில்) | | | |
| வழக்கமாகப் பயிரிடப்பட்ட பரப்பு | 3.00 | 2.70 | 9.00 | 14.70 |
| 1967—68 | 5.19 | 3.23 | 7.26 | 15.68 |
| 1968—69 | 5.00 | 3.39 | 7.70 | 15.99 |
| 1969—70 | 5.10 | 3.88 | 7.80 | 16.78 |
| 1970—71 | 5.12 | 3.79 | 7.82 | 16.73 |
| 1971—72 | 5.11 | 3.85 | 7.80 | 16.76 |
| 1972—73 | 5.12 | 4.07 | 7.58 | 16.77 |
| 1973—74 | 5.21 | 4.37 | 7.36 | 16.94 |
| 1974—75 (புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் சென்ற பகுதிகள் நீங்கலாக) | 4.57 | 3.67 | 7.06 | 15.30 |
| | | | | 0.24 கோடை நெல் சாகுபடி |

### இருபோக சாகுபடி

தஞ்சையின் நிகர நஞ்சைப்பகுதி 12 இலட்சம் ஏக்கராகும். வழக்கமாக அதில் 3 இலட்சம் ஏக்கரில் மட்டும் இருபோகங்களில் நெல் பயிரிடப்பட்டு வருகிறது. ஏனைய பெரும்பகுதிகளில் ஒருபோகமாகச் சம்பா சாகுபடி செய்யப்பட்டு வந்தது.

தஞ்சையிலே 3 இலட்சம் ஏக்கர் அளவிற்கு மேல் இருபோகமாக நெல் சாகுபடி செய்ய இயலாது என்ற எண்ணம் இருந்தது. ஆனல் 1966-ல் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் குறைந்த அளவு நீர் உள்ள நிலையில் குறுவை சாகுபடிக்குக் காலம் தாழ்த்தி நீர் விடப்பட்டது. இருப்பினும் அவ் வருடத்தில் சம்பாப்பட்டத்தில் குறுவை நடப்பட்ட பொழுதிலும் மொத்த நெல் பரப்பு குறையாத வகையில் இருபோக சாகுபடி நடைபெற்றது.

மேற்கண்ட புள்ளி விவரங்களில் இருந்து கிடைக்கும் நீரிலே, சாகுபடிப் பரப்பை அதிகரிக்கும் முயற்சி பெருமளவில் வெற்றி பெற்றுள்ளது என்று தெரிகிறது. தனியான அரசினரின் முதலீடு இல்லாமல், சுமார் 2.24 இலட்சம் ஏக்கர் அதிக பரப்பில் நெல் சாகுபடி அதிகரிப்பது மாபெரும் சாதனையாகும்! அதன் பயனுக மொத்த விளைச்சல் அதிகரித்ததுடன் கூட, தஞ்சை உழைப்பாளிகளுக்குக் கணிசமான அளவில் உழைக்கும் வாய்ப்புக்களும் பெருகி உள்ளது.

நெல் விளைச்சல் முன்னேற்றத்தால் ஏற்பட்ட பயன்

| | |
|---|---|
| புதிதாகக் கொண்டு வரப்பட்ட இருபோக சாகுபடிப் பரப்பு | 2.24. இலட்சம் ஏக்கர். |

| | |
|---|---|
| இதன் மூலம் கிடைத்த கூடுதல் விளைச்சல் | 2.24 இலட்சம் டன்கள். |
| திருந்திய சாகுபடிமுறையை மேற் கொண்டதனால் கூடுதல் விளைச்சல் | 6.16 இலட்சம் டன்கள் |
| நாட்டிற்குக்கூடுதல் உணவு உற்பத்தி | 8.40 இலட்சம் டன்கள் |
| இதன்மூலம் உழவர் பெருமக்களுக்குக் கிடைத்த கூடுதல் வருவாய் | ரூ. 84 கோடி |

### உழுபடைச் சாதனங்கள்

தஞ்சையிலே நிலத்தயாரிப்பு மிகவும் குறுகிய காலத்தில் நடைபெற வேண்டியுள்ளது. ஆற்றில் நீர் வந்ததும் நாற்றுவிட்டு முடிந்ததும் குறுவைப் பகுதி சேறு கலக்கப்பட்டு நடப்படுகிறது. நல்ல உழுபடைச்சாதனங்கள் இன்றி நன்கு பண்படுத்துவதற்கு இயலாது. தாளடிச் சமயம் ஒரு பக்கம் அறுவடையும், மற்றொரு பக்கம் நடுகையும் நடைபெறுகின்றன. இந்நிலையிலும் துரிதமாக உழ விசைச் சாதனங்கள் தேவையாகின்றன! விளைந்த விளை பொருள்களையும், உற்பத்திப்பொருள்களையும் ஏற்றிச் செல்ல விசை வாகனங்களும் தேவைப்படுகின்றன.

இதனை உணர்ந்து உழவர் பெருமக்களுக்கு வாடகைக்கு விசை உழவு சாதனத்தையும், 'டிரயிலர்' களையும் கொடுத்துதவ திருவாரூரில் ஒரு விசை உழவுக்கருவிப் பட்டறை செயல்பட்டு வருகிறது. அது விவசாயிகளின் கருவிகளைச் செப்பனிடும் பணியையும் மேற்கொண்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் அரசினர் விசைக்கருவிகளை வாடகைக்கு விட்டதன் மூலம் உழவு செய்யப்பட்ட பரப்பு.

| ஆண்டு | ஏக்கர் |
|---|---|
| 1963—64 | 14,294 |
| 1964—65 | 16,719 |
| 1965—66 | 12,124 |
| 1966—67 | 15,539 |
| 1967—68 | 20,305 |
| 1968—69 | 18,930 |
| 1969—70 | 28,185 |
| 1970—71 | 25,235 |
| 1971—72 | 25,754 |
| 1972—73 | 16,935 |
| 1973—74 | 20,246 |
| 1974—75 | 40,536 |

### சிறிய பாசன ஆதாரங்கள்

தஞ்சையின் நெல் சாகுபடி ஆற்றில் நீர் வந்த பின்னர் துவக்கப்படுகிறது. தாளடிப் பயிர் முற்றும் நிலையில் நீர்க்கட்டுப்பாடு ஏற்பட்டு மகசூல் குறைந்து விடும் நிலை எப்போதும் உள்ளது. இந்நிலையை மாற்றவும், நஞ்சைத் தரிசுகளில் கோடைப் பயிர்கள் பயிரிட்டு வருவாயைப் பெருக்கவும் வேறு பாசன வசதி தேவை! எனவே பாசன வசதியைப் பெருக்க குழாய்க் கிணறுகள், ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு உள்ளது.

| ஆண்டு | குழாய்க் கிணறுகள் | ஆழ்குழாய்க் கிணறுகள் |
|---|---|---|
| 1960—61 | 243 | 50 |
| 1961—62 | 200 | 51 |
| 1962—63 | 152 | 54 |
| 1963—64 | 218 | 57 |
| 1964—65 | 248 | 56 |
| 1965—66 | 1,852 | 84 |
| 1966—67 | 1,703 | 114 |
| 1967—68 | 1,300 | 203 |
| 1968—69 | 1,532 | 366 |
| 1969—70 | 1,557 | 366 |
| 1970—71 | 956 | 314 |
| 1971—72 | 1,400 | 287 |
| 1972—73 | 1,503 | 227 |
| 1973—74 | 1,548 | 525 |

### மண்வளப் பரிசோதனை

விவசாயிகளின் கழனிகளில் மண்வளத்தைப் பரிசோதித்து அதன்படி தக்க அளவுகளில் உரமிடப் பரிந்துரைக்க 1960-ல் ஆடுதுறையில் ஒரு மண்வளப் பரிசோதனை நிலையம் ஏற்படுத்தப் பட்டது. 1960-61-ல், 610 மண் மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டன. 1973-74-ல் 52,213 மண் மாதிரிகள் சோதனை செய்யப்பட்டன.

### நிலவள நீர் பராமரிப்புத் திட்டம்

ஆற்று நீர் தேக்கப்பட்டுச் சீராகக் கிடைக்கும் நிலையில்லா அக்காலத்தில், பெரும் வரப்புகள் அமைத்து நீரைத் தேக்கி கொள்ளுவது அவசியமாக இருந்தது. இன்று மேட்டூரில் நீர்த் தேக்கப்பட்டு, சீராக நீர் கிடைக்கும் நிலையில் இவ்வரப்புகள் தேவையில்லை.



வயல் தினம்

...ுய நடுவைசமை பல பகுதிகளில் ஒவ்...ரு வயலுக்கும் தனியாகப் பாய்கால்களும், வடிகால்களும் இல்லா நிலையில் ஒரு கழனியிலிருந்து அடுத்ததற்கு நீர் பாய்ந்து வடிந்து கொள்ளுகிறது. அதன் காரணமாக அளவுடன் நீர் கட்ட முடிவதில்லை. நன்கு மேலுரமிடவும் இயலுவதில்லை.

இத்தகைய நிலையைமாற்றியமைக்க மண்வள நீர்ப்பராமரிப்புத் திட்டம்' என்பது, முன்னோடித் திட்டமாக 1967-ல் நீடாமங்கலம் சித்தமல்லியில் துவக்கப்பட்டது. 391.25 ஏக்கர் பகுதியில் வரப்புகள் எடுக்கப்பட்டு நேர் வரப்புகளாக சிறிய அளவில் 0.5—1.0 ஏக்கர் வயல்களாகப் பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்டன. தனியான பாய்கால்களும், வடிகால்களும் உருவாக்கப்பட்டு கழனிகள் சமப்படுத்தப்பட்டன.

இதன் பயனாக, தேவைப்பட்டபொழுது சீராக நீர் தேக்கிப் பயிரிட முடிகிறது. இதனால் எலிகளின் தொல்லை குறைந்துள்ளது. கழனிகளின் பரப்பு இரண்டு சதவீதம் கூடியுள்ளது. மகசூலும் அதிகரித்து வருகிறது. 1974-75-ம் ஆண்டு வரை சுமார் 19,350 ஏக்கரில் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது



## அனுசரணை ஆராய்ச்சி

உயர் விளைச்சலுக்கு முக்கிய உறுதுணையாக இருப்பவைகளில் நல்ல உயர் விளைச்சல் நெல் ரகங்கள் முதன்மையானவையாகும். ஆராய்ச்சி நிபுணர்கள் இவ்வுயர் விளைச்சல் ரகங்களை விரிவாக்கப் பணியாளர்களின் உதவியோடு, முன்னோடி விவசாயிகளின் நிலத்தில், விவசாயிகளின் சூழ்நிலையில் புதிய ரகங்களைப் பயிரிட முடியுமா என ஆராய்ந்து, அதன் நல்ல முடிவுகளை மற்ற விவசாயிகளும் ஏற்றுக் கொள்ள வைக்க நடைபெறும் முதல் முயற்சியே ''அனுசரணை ஆராய்ச்சி'' அனுசரணை ஆராய்ச்சி எங்குமேயில்லாத ஒரு புத்தொளியாகத் தஞ்சையில் 1969-ம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இந்த அனுசரணை ஆராய்ச்சியின் மூலம் குறுவைப் பட்டத்திற்கு குறைந்த வயதுள்ள, அதிக உரமேற்று, சாயாமல் நேராக நிமிர்ந்து, குன்றெனக்குவிந்திடும் ரகமான ''கருணை'' 1969-70-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு, உழவர் பெருமக்கள் பெரிதும் விரும்பி பயிரிட்டு வருகின்றனர். மேலும் அனுசரணை ஆராய்ச்சியின் மூலம் நமக்குக் கிடைத்த உயர் விளைச்சல் ரகங்கள் 'ஐ. ஆர். 20,' 'கரிகாலன்', 'கண்ணகி', 'ஆடுதுறை-31' 'பூச. 33,' 'ஐஇடி 1722' ஆகியன. விஞ்ஞான வளர்ச்சியின் பயனாய் உருவாகிய புது ரகங்களில் நமது பகுதிக்கு ஏற்ற ரகங்களைத் தேர்ந்தெடுக்க குறுவை, சம்பா, தாளடிப் பட்டங்களில் அனுசரணை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## செய்தியும் விளம்பரமும்

திட்டமிட்ட கருத்துகள், விவசாயிகளுக்கு எட்ட விரிவாக்கப் பணியாளர்களுக்கு தனிப்பட்ட பயிற்சியளித்து 1,000 கிராமங்களில் விவசாய விழாக்கள் நடைபெற்று வருகின்றன. இவ்விழாக்களில் கருத்துக் காட்சிகள், நிழல்பட விளக்கங்கள், செய்முறை விளக்கங்கள் முதலியவைகள் மூலம் செய்திகள் அறிவிக்கப்படுகின்றன. செய்திகள் நேரடியாகப் பழுதில்லாமல் முழுமையாகக் கிடைக்க வானொலியின் மூலம் அவ்வப்பொழுது, ஒலிபரப்பப்பட்டு வருகிறது. தேவைப்படும் பொழுது புரட்டிப் பார்த்து தகவல் பெற பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பத்திரிகைகளின் உதவியைப் பெற்று, பல கருத்துக்கள் பெரும் பகுதியினருக்குக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 'பார்த்தல்', 'கேட்டல்' என்ற நிலையிலிருந்து 'பின்பற்றுதல்' என்ற நிலைக்குத் துரிதமாக விவசாயிகளை இட்டுச் செல்ல, விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறுசிறு பாத்திகளாக செய்து காண்பிப்பதை விடுத்து, மூன்று ஏக்கர்களில் விளக்கத் திடல்களும், 25 ஏக்கரில் விளக்கப் பண்ணைகளும் அமைக்கப்பட்டு, பலருக்கும் நம்பிக்கையூட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தீவிரசாகுபடித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மேற்கூறிய முயற்சிகளின் பயனாய் 1960-61-ல் 13.6 இலட்சம் டன்னாக இருந்த மாவட்ட தஞ்சை நெல் உற்பத்தி 1973-74-ல் 22 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. இப்பெரும் வெற்றியின் மூல ஆதாரங்களான தஞ்சைவாழ் உழவர் பெருமக்கள், தீவிர சாகுபடித்திட்டப் பணியாளர், வானொலி, செய்தித்தாள், இறுதியாக, முக்கியமாக இவற்றிற்கெல்லாம் முதுகெலும்பாக இருந்த தமிழ்நாடு அரசு ஆகியோருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். 'ஆனை கட்டிப்போரடித்த தமிழ்நாடு!' என்று அக்காலத்தே கூறுவர். அதையே சிறிது மாற்றி 'டிராக்டர் ஓட்டிப் போரடிக்கும்!' புதிய பொற்காலத்தை உருவாக்குவோம்.

''கதிர் ஒரு முழமே நீளம், கட்டு முக்கலமே காணும்'' என்று தில்லை நடராசர் நந்தனாருக்கு நெல்லை விளைவித்ததாகக் கூறுவார்கள். அதை இந்தக் காலத்தில் மனித சக்தியின் மூலம் நிறைவேற்றிக் காட்டுவோம் என்று சூளுரைப்போமாக!

# மண்ணை அறிந்து பயிர் செய்யுங்கள்

வேளாண்மைக்கு ம்ண் மிகவும் இன்றியமையாதது. நீரில் வளரும் தாவரங்கள் பல இருந்தாலும், பெரும்பாலான பயிர்களுக்கு நிலத்து மண்ணே ஆதாரமாகும். தாவர வளர்ச்சிக்கு வேண்டிய சகலவித சத்துணவுகளும் மண்ணிலிருந்தே கிடைக்கின்றன. தாவரங்களின் வேரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவற்றைக் கீழே விழாமல் பாதுகாப்பதும் தாவரங்களுக்குத் தேவைப்படுகின்ற ஈரப்பதத்தைச் சேமித்து வைத்துக் கொடுப்பதும் மண்ணேயாகும். தாவரங்களுக்கு இன்றியமையாத உயிர்வளி (பிராணவாயு), தழைச்சத்து (நைட்ரஜன்) முதலியனவும் மண்ணிலிருநதே கிடைக்கின்றன. இதனால் தாவர உற்பத்தியானது பலவகையாலும் நிலத்து மண்ணின் தரத்தையும், அதன் பௌதீகத் தன்மைகளையும் பொறுத்தே இருக்கிறது. ஆகவே மண்ணின் பல்வேறு தன்மைகளையும், வகைகளையும் நாம் தெரிந்து கொண்டால், ஒரு நிலத்தின் பயிர் உற்பத்தி சக்தி எவ்வளவு என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். மண்ணின் தன்மைகளை அறிந்து கொள்ளாமல், பயிரிடத் தொடங்கினால் விரும்புகின்ற அளவு மகசூல் கிடைக்காமல் போட்ட முதலீடும் வீண் நட்டமாகிவிடும். எனவே, நிலத்து மண்ணைக் கீழ்க்கண்ட முறையில் ஆராய்ந்து அதன் தன்மைகளை அறிந்து விவசாயம் செய்ய வேண்டும்.

முதலாவதாக, மண்ணின் அமைப்பு, அதிலுள்ள இந்திதிரியப் பொருள்கள், தாவரங்களின் வேர் புகக்கூடியத் தன்மை, தண்ணீரைச் சேகரித்து வைக்கக் கூடிய ஆற்றல் ஆகியவற்றை அறிய வேண்டும். பிறகு வேரின் வளர்ச்சியைத் தடுத்து விடக் கூடிய திட்ட அமைப்புக்கள் அல்லது பாறைகள் இல்லாமல் இருக்கின்றனவா என்று தெரிய வேண்டும். மண்ணில் உவர்த் தன்மையோ, கலர்த் தன்மையே இருக்குமானல் அதில் பயிர்கள் செழித்து வளராது. ஆகவே, இத்தன்மைகளையும் ஆராய்ந்தறிய வேண்டும்.

மேலே கூறப்பட்ட பலவற்றை நில அளவு மூலம் அறியலாம். இப்படி மண்ணின் தன்மையைப் பகுத்துப் பார்த்துப் பயிரிடத் தகுதியான நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், பழத்தோட்டம் அல்லது காடுகள் மட்டும் வளர்க்கத் தகுதியுள்ள நிலங்கள் என்று அவற்றைப் பிரித்துக் கொள்ள வேண்டும். இப்படி நில அளவு மூலம் மண்ணைப் பரிசோதித்து நிலங்களைத் தரப்படுத்திவிட்டால், பொருத்தமில்லாத பயிர்களை நிலங்களில் விளைவித்து நட்டமடைவதைத் தடுத்து விட முடியும்.

தாவரங்கள் செழிப்பாக வளர்வதற்குத் தேவையான பற்பல தாவரப் பொருள்களும், மூலகங்களும் மண்ணிலிருந்தே கிடைக்கின்றன. அவற்றுள் தழைச்சத்து (நைட்ரஜன்), மணிச்சத்து (பாஸ்பரஸ்), சாம்பல் சத்து (பொட்டாசியம்), சுண்ணும்புச் சத்து (கால்சியம்) 'மெக்னீசியம்' முதலிய மூலகங்கள் பயிருக்கு அதிக அளவில் தேவைப்படும். இரும்பு, 'மாங்கனீஸ்', 'போரான்' முதலான மற்றும் சில மூலகங்களும் தாவரங்களுக்குச் சிறிய அளவில் தேவைப்படுகின்றன. இந்த மூலகங்கள் ஒவ்வொன்றும் தேவையான அளவில் பயிருக்குக் கிடைக்காவிட்டால் மகசூல் குறைந்து விடும். இவைகள் மண்ணில்


...ல் எந்த அளவில் இருக்கின்றன என்பதை இரசாயனப் பரிசோதனை மூலம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவற்றில் குறைகள் இருப்பின் அவற்றை நிறைவு செய்வதற்கு ஏற்றதான இரசாயன உரங்களையும், எருக்களையும் நிலத்தில் போட வேண்டும். இதனால் நில அளவு மட்டுமன்றி இரசாயன முறை மண் பரிசோதனையும் தேவைப்படுகிறது.

நிலத்தின் தரம், மண்ணிலுள்ள குற்றம் குறைகள், உரங்களால் குறிப்பிட்ட நிலத்தில் கிடைக்கின்ற பலன்கள் முதலியவற்றையெல்லாம் விவசாயிகள் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகும். எனவே இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகமும், மற்றும் விவசாயப் பல்கலைக் கழகங்களும் நாடு முழுவதும் மண் பரிசோதனை ஆராய்ச்சிகளை நடத்திப் பல புள்ளி விவரங்களைக் கண்டறிந்து விவசாயிகளுக்கு அவ்வப்போது தெரிவித்து வருகின்றன. விவசாயிகள் இந்த மண் பரிசோதனைப் புள்ளி விவரங்களையும், பிற ஆராய்ச்சி உண்மைகளையும் கேட்டறிந்து நிலத்தின் தன்மைக்கு ஏற்ப விவசயத்தை அறிவியல் ரீதியில் நடத்துவார்களானல் கணிசமான இலாபம் பெற வாய்ப்புகள் பெருகும்.

தகவல்:

இந்திய வேளாண்மை
ஆராய்ச்சிக் கழகம்,
புதுடெல்லி.



அனைத்திந்திய வானொலியின் சென்னை நிலையம், விரைவில் கல்லூரி மாணவர்களுக்காகப் பாடத் திட்ட அடிப்படையில் அமைந்த கல்வி நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பும். இளைஞர்களுக்கான வானொலி நிகழ்ச்சிகளில் இவை அடங்கும்.

மதுரைப் பல்கலைக் கழகம் நடத்தி வரும் அஞ்சல் வழிக் கல்வி முறைக்கு உதவும் விதத்தில் அமைந்த கல்வி நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிப்பது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தானகக் கல்வி கற்றுக் கொள்பவர்கள், வானொலி நிகழ்ச்சிகளின் மூலம் பயனடைவதற்கான வாய்ப்புகளும் அளிக்கப்படும்.

# இனிப்பு நல்லதா?

"அதிகமாக இனிப்புப் பண்டங்கள் சாப்பிட்டால் உன் பற்கள் கெட்டுவிடும்" என்று பெற்றோர்கள் அடிக்கடி குழந்தைகளை அச்சுறுத்துவது வழக்கம்.

இனிப்பு உடலுக்கு நல்லது அல்ல என்பது தற்போதைய கணிப்பு. எனினும் உடல் உறுப்புகளுக்குச் சக்தியளிக்கும் மூலப் பொருளாகிய கார்போ—ஹைடிரேட்டை நாம் புறக்கணித்து விடவும் முடியாது. உண்மையைக் கூறப்போனால், நீரழிவு, ஊளைச் சதை, இருதயக் கோளாறு போன்ற நோயினால் அவதியுறுவோர், சர்க்கரையையும், இனிப்பையும் தவிர்த்தல் அவசியம் ஆகும்.

இருப்பினும் உடல் நலத்துடன் இருப்பவர்கள் சர்க்கரையைச் சேர்த்துக் கொள்ளலாம் என்பது மட்டும் அல்ல; கண்டிப்பாகச் சேர்த்துக் கொள்ளவும் வேண்டும். ஆனால் எப்படி, எப்பொழுது, எவ்வளவு என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்.

நமது பற்கள் ஒருவகை சிப்பியினால் மூடியுள்ளன; பற்சிப்பியில் அநேகமாக எல்லா மூலகங்களும் காணப்படுகின்றன. பற் சிப்பி நீண்ட காலம் அழியாமல் இருக்கக்கூடிய அசாதாரண சக்தி வாய்ந்தது ஆகும்.

ஏறக்குறைய எல்லாருமே பற் சொத்தை, பல் வலியினால் அவதியுறுகிறார்கள். நீண்ட காலமாகவே இந்த நோய்க்கான காரணத்தை மருத்துவர்கள் ஆராய்ந்து வருகின்றனர். கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, பற்சிப்பியை அழிக்கக்கூடிய பொருள் அமிலம் ஒன்றுதான் என்று முடிவுக்கு வந்தனர். ஆனால் இது ஓரளவுக்குத்தான் உண்மை. உதாரணமாக எலுமிச்சம் பழத்தைச் சாப்பிடும்பொழுது, உடனேயே வாயில் ஏராளமாக உமிழ் நீர்ச் சுரந்து, அந்த அமிலத்தை நீர்த்ததாக மாற்றி விடுகிறது. அப்படியானால் பற் சிப்பி சிதைவதற்கான காரணம்தான் என்ன?

பொதுவாக இனிப்புப் பண்டங்களைச் சாப்பிட்ட பின்பு, பற்களின்மீது 'சாக்கரின்' தங்கிவிடுகிறது. அது பாக்டீரியாக்களினால் பாலிமர் கூட்டுப் பொருள்களாக மாற்றப்பட்டு, சிப்பியின்மீது மெல்லிய காரையாகப் படிகிறது. அக்காரைக்குக்கீழ் உருவாகும் அமிலத்தினால்தான், பற் சிப்பி அழிகிறது. பற்கள் சொத்தையாவதற்கு, அவற்றின்மீது படியும் காரையும் ஒரு காரணம்.

அதிக அளவு உட்கொள்ளப்பட்ட சர்க்கரையானது கல்லீரலிலும், குறிப்பாகக் கணையத்திலும் சில இயக்கக் கோளாறுகளை ஏற்படுத்துகிறது. இதனால் உடலின் வளர்சிதை மாற்றம் பாதிக்கப்படுகிறது; அதன் தாது உப்புச் சமநிலையிலும் கோளாறு ஏற்படுகிறது. பற்கள் பலவீனமடைகின்றன. அப்பொழுதுதான் பற்காரையின் அடியிலுள்ள அமிலம் வேலை செய்யத் தொடங்குகிறது. காரை உருவாவதற்குச் சிறிதளவு சர்க்கரையே போதுமானது.

எனவே, ஆரோக்கியமான ஒருவர் எவ்வளவு சர்க்கரை சாப்பிடுகிறார் (ஒரு அளவுக்கு உட்பட்டுத்தான்) என்பது முக்கியம் அல்ல; ஆனால், எவ்வளவு நேரம் இனிப்பு, பற்களுடன் தொடர்பு கொண்டுள்ளது அல்லது பற்களின் மீது இனிப்பு தங்குகிறது என்பதுதான் முக்கியம்.

பிசின் போன்ற லாலி பாப், இனிப்பு பிஸ்கெட்டுகள், இனிப்புப் பண்டங்கள் போன்றவை பற்களின் மேற்பரப்பில் ஒட்டிக் கொண்டு வெகு நேரம் அங்கேயே இருக்கின்றன.

வெகுநேரம் இருப்பதால் அதனைக் கரைக்கக் கூடிய உமிழ் நீரும் போதுமான அளவுக்குச் சுரப்பது இல்லை. நோயாளிக்கு நாம் தரும் ஆலோசனை இதுதான்:

"நீங்கள் இனிப்புப் பண்டங்களைச் சாப்பிடாமல் இருக்க விரும்பாவிட்டால், குறைந்த அளவு சாப்பிட்ட பின்பு உங்கள் பற்களைக் கழுவிச் சுத்தப்படுத்துங்கள்."

"குழந்தைகளுக்குச் சாப்பிடும் போது இனிப்புப் பண்டங்களைக் கொடுங்கள். இடைவேளையில் இனிப்புப் பண்டங்களை உட்கொள்ள வேண்டாம். மேலும் குழந்தைகள் படுக்கச் சென்றதும் இனிப்புப் பண்டங்கள் தருவது மிகவும் தீங்கு பயப்பதாகும். பற்களை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

"காலையில் தூங்கி எழும் போதும், இரவு படுக்கச் செல்ல முன்பும் பல் துலக்குவது போதுமானதாகும். பலவீனமான பற்சிப்பி உள்ளவர்கள் பற்பசை இல்லாமல் வெறும் பிரஷ்ஷினால் மட்டும் பல் துலக்கலாம்."

தாது உப்புகளும், வைட்டமின்களும் நிறைந்த சத்துள்ள உணவு, பற்களைப் பாதுகாக்கவும், பற்களின் தற்காப்புத் தன்மையை அதிகரிக்கவும் மிகச்சிறந்ததாகும்.

## பெயரை மாற்ற விரும்புவோர் கவனிக்க!

அரசின் முன் அனுமதியில்லாமல் பெயர்கள் மாற்றம் செய்யக் கூடாது என்று கூறும் உள்நாட்டுப் பாதுகாப்புப் பராமரிப்புச் சட்ட 35-வது விதியைத் தமிழ்நாடு அரசு மீண்டும் வெளியிட்டிருக்கிறது. இந்த விதி நன்கு பொதுமக்களுக்குப் பிரசாரம் ஆக வேண்டும் என்பதற்காக இது இரண்டாவது முறையாக வெளியிடப்பட்டிருக்கிறது.

பெயர் என்பதில் குடும்பப் பெயர் போன்றவையும் அடங்கும். எழுத்துக்கூட்டும் முறையை மாற்றினால்கூட பெயரை மாற்றியதாகக் கருதப்படும்.

அவசரக் கால அறிவிப்புக்கு முன் தமக்கிருந்த பெயரை யாரும் மாற்ற வேண்டும் என்றால், அதை மாற்ற விரும்பும் தேதிக்கு ஒரு மாதம் முன்கூட்டியே மாநில அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த விதியை ஒருவர் மீறினால் 2 ஆண்டு சிறைவாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ அவருக்கு விதிக்கப்படலாம்.

ஆனால் (1) திருமணமாகும்போது, ஒரு பெண் தனது பெயருடன் சேர்த்துப் போட்டுக் கொள்ளும் கணவன் பெயர் (2) ஏதாவது பதவி, பட்டம் முதலியவை பெறுவது, தொடர்ந்து ஏற்படும் பெயர் (3) மத்திய அல்லது மாநில அரசுகளின் உத்தரவின்மீது நிர்ணயமாகும் பெயர் ஆகியவைகளின் விஷயத்தில் இவ்விதி அமலாகாது.

இதோ, இந்தியாவின் பசுமைப் புரட்சிக்கு ஒரு விஞ்ஞானரீதியான துணை

# எக்ரோமின்®

## சிலேடெட் தாவர உணவு

**பயிர் விளைச்சலை 20% அல்லது அதற்கு மேலும் அதிகமாக்குகிறது.**



நீங்கள் ஒரே வாரத்தில் பயனைக் கண்கூடாகக் காணலாம்!

தாவர போஷாக்குச் சத்துக்களை உபயோகிப்பதன் மூலம் உங்கள் பயிர் விளைச்சலை வெகுவாக அதிகமாக்கிக் கொள்ள முடியும் என்பதை தீவிரமான ஆராய்ச்சி நிரூபித்துள்ளது.

- எக்ரோமின் ஒன்று மட்டுமே சிலேடெட் தாவர உணவாகும்.
- எக்ரோமின் நீரில் முற்றிலும் கரைந்து விடுகிறது.
- எக்ரோமின் சிறப்பாகக் கிரகிக்கப் படுவதற்கென கரைக்கும் மற்றும் பரப்பும் சாதனம் அடங்கப் பெற்றது.
- எக்ரோமின் ஒரு இலைத் தெளிப்பாகும்—மற்ற அக்ரோ—கெமிகல்களுடன் இதை உபயோகிக்கலாம்.
- எக்ரோமின் ரசாயன உரங்களின் பயனை அதிக அளவில் பெற உதவுகிறது.
- எக்ரோமின், தானியங்கள், எண்ணை வித்துக்கள், வாசனைத் திரவியங்கள், இழைப் பயிர்கள், பழங்கள், மற்றும் தோட்டப் பயிர்களுக்கென, வெவ்வேறு அமைப்புகளில் கிடைக்கிறது.






## எக்ரோமின்

**சிக்கனமாக பயிர் விளைச்சலை அதிகமாக்கும் சிலேடெட் தாவர உணவு.**


® ரெஜிஸ்டர்ட் டிரேட் மார்க்.

எக்ரோமின் பற்றிய அதிகப்படி விவரங்களை அறிய இந்த முகவரிக்கு எழுதவும்:
**ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்.**
தபால் பெட்டி எண் 9417,
பம்பாய் 400 093.

Distributors :

S.L.N.S. AGENCIES, 19, Municipal Bldg., Srinivasa Park, Salem-636002.

INDOMAG CORPORATION,
3, Kollanpattarai Street, East Veli Street, Madurai-1.



# அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் ஆற்றிடும் சீரிய பணிகள்!

அரிசன மக்களில் பெரும் பகுதியினர் ஆண்டாண்டுக் காலமாக மண் குடிசைகளில் தான் வாழ்கின்றார்கள்! மழைக் காலத்தில் அவர்களின் குடிசைகள் தீவுகளெனத் திகழ்கின்றன! அதனால் அவர்கள் படும்பாடு சொல்லுந்தரமன்று!

மழைக்காலத்தில் மட்டுமல்ல, கோடைக் காலத்திலும் அரிசன மக்கள் கொடுமைக்கு ஆளாகின்றார்கள்! அரிசன மக்களின் அறியாமை காரணமாக, இருக்கின்ற குடிசைகளும் தீயினால் பாதிக்கப்பட்டு, தெருவிலோ அல்லது மரத்தடியிலோ புகலிடம் தேடவேண்டிய நிலைமை அவர்களுக்கு ஆண்டுதோறும் ஏற்பட்டு வருகிறது!

அரிசன மக்களில் கணிசமான தொகையினர் சொந்தத்தில் வீட்டுமனை இல்லாததால், மற்றவர்களின் குடிசைகளில் ஒண்டுக் குடித்தனமாகவோ அல்லது மரத்தடியிலோ வாழ்ந்து வருகின்றனர்!

அப்படிப்பட்டவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கினாலும், அம்மனையில் வீடுகட்டிக் கொள்வதற்குத் தேவையான பணவசதி அவர்களுக்குக் கிடையாது!

இவைகளையெல்லாம் நினைத்துப் பார்த்து, ஒரு நல்ல நெஞ்சம் கலங்கியது!

''இவ்வாறு வீட்டுவசதி இல்லாமல் இன்னலுறும் அரிசன மக்களுக்கு மழையாலும், புயலாலும், தீயினாலும் பாதிக்கப்படாத வீடுகளை கட்டிக் கொடுக்க முடியாதா?'' என்று அந்த நல்ல நெஞ்சம் சிந்தித்தது!

அடுத்து, ''வீட்டு வசதி இல்லாமல் வாடிடும் அரிசன மக்கள் எத்தனை பேர்கள் இருப்பார்கள்?' என்று அந்த நெஞ்சம் கணக்கிட்டது!

1971-ஆம் ஆண்டில் நடைபெற்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 412 இலட்சம் மக்கள் தொகையில், 76.42 இலட்சம் மக்கள் அதாவது 18.56 சத மக்கள் அரிசனங்களே என்றும், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 14.5 இலட்சம் அரிசனக் குடும்பங்கள் இருக்கின்றன என்றும், அரிசனங்களின் வீட்டுவசதிப் பிரச்சினையைத் தீர்ப்பதென்றால் குறைந்தது 10 இலட்சம் வீடுகள் கட்ட வேண்டும் என்றும் அந்த நெஞ்சத்திற்குத் தெளிவாகியது!

''10 இலட்சம் வீடுகள் கட்டுவதென்றால் காலமும், பணமும் அதிகமாகுமே!'' என்று எண்ணி அந்த நெஞ்சம் முதலில் சிறிது கலங்கினாலும், நெஞ்சத் துணிவுடன், ''படிப்படியாகவாவது அந்த அளவுக்கு வீடுகட்டி, இலவசமாக அரிசனங்களுக்கு வழங்கிட வேண்டும்!'' என்று முடிவு செய்தது!

ஏழை எளியவர்களின் வாழ்வை வளமாக்கி, ஏற்றத்தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தை அமைத்திடுவதையே இலட்சியமாகக் கொண்டு அயராது உழைத்து வருகின்ற அந்த நெஞ்சம், காலங்காலமாகச் சமுதாயத்தின் அடித்தளத்திலே ஆழ்த்தப்பட்டு, பஞ்சைகளாய்-பாமரர்களாய் - தாழ்த்தப்பட்டவர்களாய் - ஒதுக்கப்பட்டவர்களாய் - நாதியற்றவர்களாய் வாழ்ந்து வந்த அரிசன மக்களுக்கு மழையாலும், புயலாலும், தீயினாலும் பாதிக்கப்படாத -அனைத்து வசதிகளும் கொண்ட- ஒரு இலட்சம் வீடுகளை 1976-ஆம் ஆண்டிற்குள் கட்டி, இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்தது!

அந்த நெஞ்சம், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கான திட்டமெனில் தொல்லை பலவற்றை ஏற்றுக்கொண்டு துணிந்து செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் நெஞ்சமே என்று நான் உங்களுக்குக் கூறிடத் தேவையில்லை! எனினும், அவ்வாறு கூறாது விடுவதும் முறையல்ல!

ஏனெனில், அண்ணல் காந்தியடிகள் கண்ட கனவை நிறைவேற்றப் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில், அரசியல் நோக்கத்துடன் அல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் — மனிதாபிமானத்துடன்—மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான், இந்தியாவிலேயே முதன் முதலாக அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தைத் துவக்கினார்என்பது தமிழகத்திற்குக் கிடைத்த பெரும் பேறாக உள்ளது!

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்** அறிவித்த திட்டத்தைச் செயல்படுத்த 1974-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15-ஆம் நாள், **'தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம்'** துவக்கப்பட்டது. கம்பெனிகள் சட்டத்தின் கீழ்த் துவக்கப்பட்ட தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம், 1-3-1974 முதல் செயல்படத் துவங்கியது.

ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்ற திட்டத்தின் கீழ், முதலாவதாக 1975-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் இறுதிக்குள் 30,000 வீடுகள் தமிழகமெங்கும் கட்டி முடிக்கப்படும்.



**ஆர். ஏ. சீத்தாராமதாஸ்**

**ஐ.ஏ.எஸ்.,**

**தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர்**

இதற்குத் தேவைப்படும் 12 கோடி ரூபாயைத் தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ளது.

ஒவ்வொரு வீட்டின் அடித்தள பரப்பும் சுமார் 240 சதுர அடி கொண்டதாகவும், புகையடையாத சமையல் அறை, குளிக்கும் அறை, கக்கூஸ், காற்றோட்டத்திற்கு ஏற்றதான சன்னல்கள் போன்ற சுகாதார வசதிகளுடன் கூடியதாகவும் கட்டப்பட்டு வருகிறது. இவ்வீடுகள் உலகநாடுகள் சபையினால் (U.N.O.) நிர்ணயிக்கப்பட்ட, அனைத்துலக தரத்திற்குச் (International Standard ) சமமாக உள்ளது. ஒவ்வொரு வீட்டின் மதிப்பும் ரூபாய் 4,000. மலைப்பகுதியில் இவ்வீட்டின் மதிப்பீடு சுமார் ரூபாய் 6,000 வரை ஆகிறது.

இதுவரை தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக கட்டி முடிக்க ஒதுக்கப்பட்ட வீடுகள், கட்டி முடிக்கப்பட்ட வீடுகள், அதற்குச் செலவிடப்பட்ட தொகை ஆகிய விவரங்கள் அட்டவணை 1-ல் தனியே கொடுக்கப்பட்டுள்ளது.

அரிசன மக்களுக்காக வீடுகள் கட்டுவதற்குரிய ஊரும், இடமும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரைக்கு ஏற்பவே

## அட்டவணை — 1

### அரிசன மக்களுக்காக 31-12-1975—க்குள் கட்டி முடிக்கப்பட வேண்டிய வீடுகள்


| மாவட்டத்தின் பெயர் | | ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | 31-12-75-க்குள் கட்டி முடிக்க வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை | 31-10-75 வரை கட்டி முடிக்கப் பட்டுள்ள எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை 12-11-75 முடிய (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| 1. செங்கல்பட்டு | ... | 2,380 | 1,874 | 900 | 81,51,000 |
| 2. வட ஆற்காடு | ... | 2,902 | 2,902 | 1,088 | 64,98,000 |
| 3. தென்னாற்காடு | ... | 5,102 | 3,169 | 1,352 | 79,07,950 |
| 4. சேலம் | | 3,042 | 3,027 | 1,516 | 98,10,000 |
| 5. தர்மபுரி | ... | 1,695 | 1,695 | 491 | |
| 6. கோயம்புத்தூர் | ... | 2,860 | 2,118 | 989 | 1,16,49,500 |
| 7. நீலகிரி | ... | 645 | 645 | 176 | |
| 8. திருச்சி | ... | 4,062 | 3,852 | 2,422 | 1,24,03,905 |
| 9. புதுக்கோட்டை | ... | 1,086 | 1,068 | 448 | |
| 10. தஞ்சாவூர் | ... | 4,400 | 2,817 | 971 | 89,12,000 |
| 11. மதுரை | ... | 2,464 | 2,334 | 886 | 94,12,000 |
| 12. ராமநாதபுரம் | ... | 1,814 | 1,672 | 521 | |
| 13. திருநெல்வேலி | ... | 2,068 | 2,230 | 871 | 60,80,000 |
| 14. கன்னியாகுமரி | ... | 597 | 597 | 156 | |
| எல்லா மாவட்டங்களுக்கும் தளவாட சாமான்கள் வாங்கியவை. | | | | | 88,37,651 |
| மொத்தம் | ... | 35,117 | 30,000 | 12,787 | 8,96,62,006 |

தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இவ்வாறு தேர்ந்தெடுக்கும் போது, அரிசன நலத்துறையினரால் ஏற்கனவே வீட்டுமனைகளுக்காகக் கையகப்படுத்தப்பட்ட (ஆர்ஜிதம்) இடங்களில், வீடுகள் கட்டுவதற்கு முன்னுரிமை அளித்து பரிசீலிக்கப்படுகிறது. கட்டிமுடிக்கப்பட்ட வீடுகள் அனைத்தும், ஏற்கனவே அந்தந்த இடத்தில் வாழ்ந்து வந்த அரிசனக் குடும்பங்களுக்கே உரிமைப்படி வழங்கப்படுகின்றன. வழங்கப்பட்ட வீடுகளைக் கண்காணிப்பது வீடுகளைப் பெற்றுக் கொண்டவர்களின் பொறுப்பாகும். எனினும் மேற்படி குடியிருப்புகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கீழ் பணியாற்றும் அரிசன நல அதிகாரிகள் மூலமாகப் பொதுவான கண்காணிப்புக்குள்ளதாகும்.

இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழ்நாட்டில் தான், அரிசன மக்களுக்காக அதிக அளவு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளதுடன், எல்லா வசதிகளும் நிறைந்த தரமான வீடுகள் கட்டி இலவசமாக வழங்கப்படுகின்றன!

அரிசன மக்களுக்காகத் தமிழ்நாட்டில் கட்டப் பெற்று இலவசமாக வழங்கப்படும் வீடுகளைப் பார்வையிட்ட பிற மாநிலத் தலைவர்களும், அமைச்சர்களும், அயல்நாட்டவர்களும் இத்திட்டத்தை மட்டும் பாராட்டாமல், இத்திட்டத்தின் காரணகர்த்தாவான மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும் பாராட்டியுள்ளனர்!

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தைப் பிற மாநில அரசுகளும் செயல்படுத்த முயன்று வருகின்றன. எனவே, அரிசனங்களுக்காக வீடுகட்டி இலவசமாக வழங்குவதில், தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது என்றால் மிகையல்ல!



## மீனவர்களுக்கான வீடுகள் கட்டும் திட்டம் :—

கடலை நம்பி வாழ்ந்து கடுங் காற்றுக்கும், கடல் கொந்தளிப்புக்கும், பேய் மழைக்கும் இடையே குடிசைகளில் பாதுகாப்பின்றி வாடும் மீனவப் பெருங்குடி மக்களுக்கான வீடுகள் கட்டித் தரும் பணியினை, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளார்கள். அதன் படி செங்கை, தென்னார்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 5,000 வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிட்டு, முதற் கட்டமாக 3,147 வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மாவட்ட வாரியாக மீனவர்களுக்காகக் கட்டப்பட்டு வரும் வீடுகள் பற்றிய விவரங்கள் கீழே இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் :—

தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம், ஏழை அரிசனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் குடியிருக்க, சுகாதார வசதிகளுடன் கூடிய தரமான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதைத் தனது தலையாய பணியாக மேற்கொண்டிருப்பினும், அவ்வாறு வீடுகள் கட்டும் இடங்களில் உள்ள அரிசனங்களின் நல்வாழ்வுக்காக, கீழ்க்கண்ட பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்கிறது.

### 1. தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம் :-

சாதாரணமாகச் சமுதாயத்தில் அன்றாட வாழ்க்கைக்குப் போதிய வருவாய் இல்லையே எனத் தன்னம்பிக்கை இழந்து, அடித்தளத்தில் இருக்கும் ஏழை அரிசனங்களுக்காக மாவட்டங்கள் வாரியாக சிறு சிறு கூட்டுறவுத் தொழிற் சங்கங்கள் ஆரம்பித்து, அந்தந்த மாவட்டங்களில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டே இயங்கக்கூடிய சிறு தொழிற் கூடங்களை அமைத்து, அதில் உற்பத்தியாகும் பொருள்களைக் கூட்டுறவுத்துறை வழியாக பல்வேறு விற்பனை நிலையங்களுக்கும் அனுப்பி, அவற்றின் வாயிலாக எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கச் செய்வதோடு, அதில் வரும் இலாபத்தையும் அரிசனத் தொழிலாளர்களுக்கே கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

மேற்கண்ட பெருநோக்கோடு, வட ஆர்க்காடு, மதுரை, தென்னார்க்காடு மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில், கீழே அட்டவணை 3-ல் குறித்தவாறு சிறிய தொழிற்சாலைகளைக் கூட்டுறவு முறையில் அமைத்து அரிசனப் பெருமக்களால் நடத்தப்படுவதற்கான திட்டங்களை தமிழ்நாடு அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளத் தயாராக உள்ளது. பல தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பொருளுதவியை நாடியுள்ளோம்.

### 2. ஆட்டோ ரிக்ஷாக்கள் வழங்கும் திட்டம் :-

இத்திட்டத்திற்கான நிதி வசதிகள் தனியே ஒதுக்கப்படாததால், முதலில் அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் தனது நிதியிலிருந்து வழங்கி, பின்னர் சம்பந்தப்பட்ட தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக, உரிய பயனாளருக்குக் கடன் வழங்க ஏற்பாடு செய்து அந்தப் பணத்தைத் திருப்பவும் அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழக நிதியில் சேர்ந்து ஈடுகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை — 2**

**மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டம்**

| மாவட்டம் (1) | நிர்ணயிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (2) | எடுத்துக்கொண்ட வீடுகளின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. செங்கற்பட்டு சென்னை | 1,202 | 905 |
| 2. தென் ஆற்காடு | 420 | — |
| 3. தஞ்சாவூர் (பூம்புகாரில் கட்டப்பட்ட 500 வீடுகளும், வாணகிரியில் கட்டப்படுகிற 500 வீடுகளும் நீங்கலாக) | 899 | 300 |
| 4. புதுக்கோட்டை | 442 | 442 |
| 5. ராமநாதபுரம் | 350 | 350 |
| 6. திருநெல்வேலி | 480 | 480 |
| 7. கன்னியாகுமரி | 670 | 670 |
| | 4,463 | 3,147 |

| ஆட்டோ ரிக்ஷா வழங்கிய இடமும், தேதியும் | எண்ணிக்கை | கிரயத் தொகையுடன் செலவான தொகை |
|---|---|---|
| | | ரூ. பை |
| நாகபட்டினம் (அக்டோபர் '74). | 3 | 31,669.24 |
| திருவலஞ்சுழி (நவம்பர் '74) | 3 | 33,531.93 |
| திருக்குவளை (மார்ச் '75) ... | 3 | 33,841.00 |
| காட்டுப்பாக்கம் (ஜனவரி '75) | 2 | 22,229.00 |
| ஆக மொத்தம் | 11 | 1,21,271.17 |

## அட்டவணை — 3

### அமைக்கப்படவிருக்கும் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் விவரங்கள் :—


| திட்டத்தின் பெயர் | அமைக்க உத்தேசிக்கப்படும் சங்கங்களின் எண்ணிக்கை | வேலை வாய்ப்புப் பெறவிருக்கும் நபர்களின் எண்ணிக்கை | திட்டத்தின் மொத்த செலவு (ரூபாய் இலட்சக்கணக்கில்) | பயிற்சிக்கான செலவு (ரூபாய் இலட்சக்கணக்கில்) | நிலையான மூலதனச் செலவு (ரூபாய் இலட்சக்கணக்கில்) | வேலைக்கான மூலதனச் செலவு (ரூபாய் இலட்சக்கணக்கில்) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| **வட ஆர்க்காடு மாவட்டத்தில் :** | | | | | | |
| (1) ஆட்டுரோமம் மற்றும் கம்பளம் ஏற்றுமதி செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் ... | 4 | 400 | 28.840 | ... | 7.400 | 21.440 |
| **வட ஆர்க்காடு மாவட்டத்தில் :** | | | | | | |
| (2) தோல் பதனிடும் பணிக்கான கூட்டுறவு தொழிற் சங்கங்கள் பேரணாம்பேட், வாணியம்பாடி, ராணிப்பேட்டை. ... | 4 | 400 | 38.520 | ... | 24.400 | 14.120 |
| **மதுரை மாவட்டத்தில் :** | | | | | | |
| (3) ஆட்டுரோமம் சேகரித்தல் மற்றும் கம்பளி நெய்தலுக்கான கூட்டுறவு தொழிற்சங்கம், திண்டுக்கல். | 1 | 60 | 3.685 | 0.450 | 1.500 | 1.735 |
| **தென் ஆற்காடு மாவட்டத்தில் :** | | | | | | |
| (4) குன்னம் அல்லது வடலூர் கிராமத்தில் கருங்கல் செதுக்குதல் மற்றும் பளபளப்பாக்கும் கூட்டுறவு தொழிற்துறைச் சங்கம் அமைத்தல்... | 1 | 370 | 5.147 | 1.300 | 1.600 | 2.247 |
| **தஞ்சாவூர் மாவட்டத்தில் :** | | | | | | |
| (5) சிமெண்ட் குழாய் உற்பத்தி செய்யும் கூட்டுறவுத் தொழிற்சங்கம்... | 1 | 40 | 1.890 | ... | 0.600 | 1.290 |
| மொத்தம் ... | 11 | 1,270 | 78.082 | 1.750 | 35.500 | 40.832 |

இவை தவிர தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூரில் 17-1-1975-ல் வழங்கப்பட்ட 5 ஆட்டோ ரிக்ஷாக்களுக்கான கிரயத் தொகையினை கடலூர் யூனைடெட் கமர்ஷியல் வங்கியிடமிருந்து கடனாகப் பெற்று, மேற்படி ஆட்டோரிக்ஷாக்களை உரிய பயனாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

### இனி வழங்க வேண்டிய ஆட்டோ ரிக்ஷாக்கள்:-

தற்சமயம் 11 ஆட்டோ ரிக்ஷாக்கள் வழங்கப்பட வேண்டியதற்கான நிலையில் உள்ளன. இவற்றில் 5 'பாடி' கட்டப்பட்டு தயாராக உள்ளன. பாக்கி 6 ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு 'பாடி' கட்டப்பட வேண்டும். இதற்கான நிதி வசதி முழுவதும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிதி வசதிகள் கிடைத்தவுடன் மேற்படி ஆட்டோரிக்ஷாக்கள் உரிய பயனாளருக்கு வழங்கப்படும்.

இப்படி வழங்கப்படும் கடன் தொகையினை 36 மாதத் தவணைகளில், 11 சதவீத வட்டியுடன் திரும்பப்பெற சம்பந்தப்பட்ட வங்கிகள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.



### 3. கறவை மாடுகள் (பசு, எருமை) வழங்கும் திட்டம் :-

இத்திட்டமானது ஒவ்வொரு அரிசன பயனாளிக்கும் ரூபாய் 1,650/-க்கு மேற்படாத வகையில் இரண்டு கறவை மாடுகள், இரண்டுவெவ்வேறு காலக்கட்டங்களில் வாங்குவதற்கு வகை செய்கிறது. இக்கடனானது 4 சதவீத குறைந்த வட்டி விகிதத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, இதுவரை வழங்கப்பட்ட கறவை மாடுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வழங்கப்பட்ட இடம் (1) | வழங்கப்பட்ட கறவை மாடுகளின் எண்ணிக்கை (2) | பயன் பெற்றவர் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| காட்டுப்பாக்கம், செங்கை மாவட்டம் ... | 10 | 10 |
| ஆமூர், திருச்சி மாவட்டம். ... | 6 | 6 |
| தென்னமநாடு, தஞ்சை மாவட்டம் ... | 9 | 9 |
| திருவலஞ்சுழி, (தஞ்சை மாவட்டம்) ... | 10 | 10 |
| மாஞுங்கோரை (தஞ்சை மாவட்டம்) ... | 10 | 10 |

இவை தவிர, மார்ச் 1975-ல் தஞ்சை மாவட்டம் சித்தமல்லி கிராமத்தில், 10 கறவை மாடுகள் அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழக நிதியிலிருந்து கடனாக அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணத்தை 24 மாதத் தவணை முறையில் திரும்ப பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**4. கோழிகள் வளர்ப்புத் திட்டம் :-**

அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்பட்டு வீடுகளில குடியமர்த்தப்பட்டுள்ள ஏழை அரிசனங்களின் வருமானத்தைப் பெருக்கும் வகையில், அவர்களுக்குக் கோழிகள் வழங்குவதும் ஒரு திட்டமாகும். இத் திட்டத்தின் படி ஒவ்வொரு அரிசன பயனாளருக்குப் ரூபாய் 250/- வரை கடன் அனுமதிக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் 10 கோழிகள், அதற்கான உணவு, கோழி வீடு ஆகியவற்றிற்கும் இதுவகை செய்கிறது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் இக்கடன் வழங்க முன் வராத காரணத்தால், அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்தை தனது நிதியிலிருந்தே செயல்படுத்தியது. இக்கடன் 12 தவணைகளில் மாதம் ரூபாய் 20/- வீதம் 11 தவணைகளிலும், கடைசித் தவணையாக ரூபாய் 30/-ம் ஆக 4 சத வட்டியுடன் வசூலிக்கப்பட வேண்டியதாகும். கீழ்க்கண்ட இடங்களில் இதுவரை இத்திட்டம் செயல் படுத்தப்பட்டுள்ளது.

| வழங்கப்பட்ட இடம் (1) | பயனாளர் எண்ணிக்கை (2) | வழங்கப்பட்ட கோழிகள் (3) | மொத்தக் கடன் தொகை (ரூபாய்) (4) |
|---|---|---|---|
| **தஞ்சை மாவட்டம் :** | | | |
| 1. திருவலஞ்சுழி ... | 10 | 100 | 8,581.80 |
| 2. மேலவிடையால் ... | 10 | 100 | |
| 3. தென்னம நாடு ... | 10 | 100 | |
| 4. மாஞுங்கோரை ... | 10 | 100 | |
| **திருச்சி மாவட்டம் :** | | | |
| 1. தேவராய நேரி (நரிக்குறவர்) ... | 12 | 120 | 2,697.47 |
| **தஞ்சை மாவட்டம் :** | | | |
| 1. திருக்குவளை ... | 10 | 100 | 5,186.26 |
| 2. எடயார் ... | 10 | 100 | |

**5. 'கேர்' கோதுமை விற்பனைத் திட்டம் :-**


"கேர்" நிறுவனம் வழங்கிய கோதுமை விற்பனை வழி கிடைக்கும் பணத்தைக் கொண்டு, பொருளாதார வளர்ச்சி நிதியினை ஏற்படுத்தி அதன் மூலம் அரிசன குடியிருப்பு இல்லங்களில் சமுதாய நலப்பணி மன்றங்கள் அமைத்து, அரிசனப் பெண்மணிகளுக்கு வேலைவாய்ப்பு (தையல், சத்துணவு தயாரித்தல்) ஏற்படுத்துவதோடு, குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதியும் ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி இதுவரை கீழ் கண்ட இடங்களில் சமூக நலப்பணி மன்றங்கள் செயல் பட்டு வருகின்றன.

**செங்கல்பட்டு மாவட்டம் :-**

| | |
|---|---|
| காட்டுப்பாக்கம் | 1 |
| தாமல் | 1 |
| வாலாஜா பாத் | 1 |
| கொட்டிவாக்கம் | 1 |

## வேண்டுகோள்


இதுவரை கூறியவற்றிலிருந்து, தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம், தமிழகத்தி லுள்ள அரிசன மக்களுக்கும், மீனவர்களுக்கும் வீடுகள் கட்டி இலவசமாக வழங்கும் பணியைத் தலையாய கடமையாகக் கொண்டிருப்பதுடன், அரிசன மக்கள் பொருளாதார மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காகப் பல்வேறு பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும் செயலாற்றி வருகிறதுஎன்பது தெளிவாகிறது. தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ள பணி உடனடியாக முடிந்து விடக் கூடியதல்ல! பல கோடி ரூபாய் செலவில், 10 ஆண்டுகாலமாவது செயல்பட்டால்தான், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் இலட்சியமான 10 இலட்சம் வீடுகளைக் கட்டி அரிசனங்களுக்கு இலவசமாக வழங்க முடியும். எனவே, இம்மாபெரும் பணியில் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் வெற்றி பெறவும். அதன் மூலம் அரிசன மக்கள் பயன் பெறவும் தமிழகத்திலுள்ள அரிசன மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.



# டான்சியின் எழில் படைப்புகள்!

காலத்தை வெல்லும் டான்சியின் தயாரிப்புகள் மர மற்றும் எஃகு சாதனங்கள் டான்சியின் மேன்மையான படைபுகள். நாளைய வடிவமைப்புகளில்

இன்றே வழங்கப்படும் இச்சாதனங்கள் நீடித்து உழைப்பவை, நாற்காலிகள், மேசைகள், பீரோக்கள், கட்டில்கள் முதலிய பற்பல எழில்மிகு தயாரிப்புகளை வழங்குவது டான்சி.



டான்சி

தமிழ்நாடு சிறு
தொழில் நிறுவனம்,
26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600 014

